

www.onlineuthayan.com

பக்கங்கள் : 24

# உதயன்

சுடர் 27
கதிர் 198

வள்ளுவர் ஆண்டு 2043 | வைகாசி 29 திங்கட்கிழமை (11/06/2012) | UTHAYAN - A Lively National Tamil Daily

## உயிர்

**கொடுப்பவன் தமிழன்: பறிப்பவன் சிங்களவன்**

**வைகோ ஆவேசம்**



உயிர் பறிப்பவன் சிங்களவன், உயிர் கொடுப்பவன் தமிழன் - என்று தமிழகத்தின் பழுத்த அரசியல்வாதி வைகோ தெரிவித்துள்ளார்.

மேலும், சுதந்திரமான தமிழீழத்தின் பக்கம் உலகே திரும்பியுள்ளது. ஈழத்தில் இனப்படுகொலைக்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென உலகமே குரல்கொடுக்கிறது. இத்தகைய சந்தர்ப்பத்தில் அதற்கான புரட்சியை தமிழர்கள் ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ங-சி)

### அமைச்சருக்கு கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

பட்டதாரிப் பயிலுநர் நியமனத்தில் அமைச்சர் ரிஷாத்தின் தலையீடு காரணமாக நடைபெற்ற அநீதியான நேர்முகப் பரீட்சையை உடனடியாக இரத்துச் செய்து நியாயமான முறையில் நேர்முகப் பரீட்சையை நடத்தி வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனத்தை வழங்குவதற்கான நடவடிக்கையை உரிய அதிகாரிகள் எடுக்க வேண்டும் என்றும்,

நியாயமற்ற முறையில் நியமனம் வழங்கப்படுமாயின் பாதிக்கப்படும் பட்டதாரிகள் மற்றும் சமூகத்துடன் இணைந்து போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம் என்றும் முல்லைப் பட்டதாரிகள் சங்கத்தினர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர். (ங-400-433)

## யாழில் படைமுகாம்களுக்காக காணிகளை

# அபகரிப்பது உண்மையே

## ஒத்துக்கொள்கிறார் ஹத்துருசிங்க



யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ். குடாநாட்டில் நிலைகொண்டுள்ள இராணுவம் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் அதிதீவிரமாக ஈடுபட்டுள்ளது என எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களை அடியோடு நிராகரித்த யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, அங்கு படைமுகாம்களை அமைப்பதற்கென அரச காணிகளை இராணுவம் கையகப்படுத்துவதை ஒத்துக்கொண்டார். ஆனால் தனியார் காணிகளை சுவீகரிக்கும் திட்டம் இராணுவத் திடம்கிடையாது 04

## 1,033 காணிகள், வீடுகள்; முப்படைகள் சுவீகரிக்கும்

### வெளியானது அதிர்ச்சித் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ். குடாநாட்டில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத இடங்கள் தவிர்ந்து, ஏனைய இடங்களில் உள்ள ஆயிரத்து 33 காணிகள் மற்றும் வீடுகளை முப்படையினரும் சுவீகரிக்கவுள்ளனர். இதில் 29 காணிகளே அரச நிலங்கள். ஏனையவை தனியார் - பொதுமக்களின்-காணிகள் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் 1996 ஆம் ஆண்டு முதல் இராணுவத்தினர் தனியார் மற்றும் அரச காணிகளில் நிலைகொண்டுள்ளனர்.

தற்போது தாம் நிலை கொண்டுள்ள நிலங்களைத் தமக்கே வழங்க வேண்டும் என்று கோரி சகல பிரதேச செயலர்களுக்கும் கடிதங்கள் அனுப்பியுள்ளனர். கடந்த டிசெம்பர் மாதம் அனுப்பப்பட்ட இந்தக் கடிதங்களுக்கு பிரதேச செயலர்கள் உரிய பதில் வழங்காததைத் தொடர்ந்து, வடமாகாண ஆளுநரினால் பிரதேச 04

## முறையான போர்க்குற்ற விசாரணைகள் தேவை

### ஜனாதிபதி மஹிந்தவிடம் வலியுறுத்தினார் கமரூன்

கொழும்பு, ஜூன் 11

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக முறைப்படியான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பில் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் வலியுறுத்தினார்.

- இவ்வாறு பிரிட்டன் பிரதமர் செயலகப் பேச்சாளர் கிராக் ஒலிவர் தெரிவித்துள்ளார். 04



## அரசியல் கைதிகளைப் பட்டினி கிடக்க தூண்டுவது சுயநல அரசியல்வாதிகளே

### புனர்வாழ்வு அமைச்சர் சாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 11

சிறைச்சாலைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை உண்ணாவிரதம் இருக்குமாறு தூண்டிவிடுவது ஒரு சில சுயநல அரசியல்வாதிகளே. அத்துடன் அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று எமது நாட்டுக்கு எதிராகவும் பிரசாரம் செய்கின்றனர்.

இவ்வாறு புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றைய தினம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாக நட்டஈடு வழங்கும் வைபவம் நடைபெற்றது. இதன் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகா 04

## படையினரை விடவும் புலிகள்தான் குறிபார்த்து சுடுவதில் வல்லவர்கள்

### மனம் திறந்தார் அமைச்சர் கஜதீர

யாழ்ப்பாணம், ஜூன் 11

குறி பார்த்துச் சுடுவதில் படையினரை விட வல்லவர்களான விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் தற்போது மெய்வன்மைப் போட்டிக்கு - குறிபார்த்துச் சுடும் போட்டிக்குக்கூட துப்பாக்கி ஏந்த மறுக்கின்றனர்.

இவ்வாறு புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறீ கஜதீர தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது;

எமது அமைச்சினூடாக புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் பலர் பல்வேறு 04

## தமிழர்களை எதிரிகளாக்கவே புலம்பெயர்ந்தோர் ஆர்ப்பாட்டம்

### குணதாசவின் புதிய கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூன் 11

''ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக லண்டனில் புலம்பெயர் தமிழர்கள் மேற்கொண்ட குரோதத்தனமான நடவடிக்கைகள் இலங்கையில் வாழும் தமிழ்மக்களை எதிரிகளாகவே சிங்கள மக்கள் பார்க்க வேண்டும் என்ற வைராக்கியத்தை ஏற்படுத்தியுள்ளது''

- இவ்வாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

சிங்களவர்களின் 04

## இலாபமீட்டும் துறைகள் எல்லாம் இந்தியா, அமெரிக்காவின் கைகளில்

### அரசு மீது ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 11

எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் இலாபம் பெறும் அனைத்துத் துறைகளையும் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் அரசு வழங்கியுள்ளது. இது பால் தரும் பசுமாட்டை தம்பி பராமரிக்க அண்ணன் பால் கறந்து கொள்வது போலாகும் எனத் தெரிவித்த ஜே.வி.பி., இந்தியாவிற்கு கப்பம் செலுத்துவதற்காக மக்கள் மீது அரசு சுமையேற்றியுள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

உலக சந்தையில் எரிபொருள்களின் விலை குறைந்துள்ளபோதிலும், உள்நாட்டில் அதன் விலையைக் குறைக்காது கறுப்புச் சந்தைக்காரர்கள்போல் அரசு வரி அறவிட்டு, எரிபொருள்களைத் தற்போதைய விலையிலேயே தக்கவைத்துக் கொள்ளப்பார்க்கின்றது. அரசின் 04

### வெளிநாட்டு நாணய வர்த்தகத்துக்கு அனுமதி

கொழும்பு, ஜூன் 11

தனியார் நிறுவனங்கள் வெளிநாட்டு நாணயங்களில் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்கு அரசு அனுமதியளிக்கவுள்ளது என மத்திய வங்கியின் நாணய மாற்றுக் கட்டுப்பாட்டு அதிகாரி பி.எச்.ஓ.சந்திரவன்ஸ தெரிவித்துள்ளார்

உள்ளூரில் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கடவுள் தீபம் சுவாலையானதால் வீடே எரிந்து நாசமாகியது

## நாவாந்துறையில் சம்பவம்



யாழ்ப்பாணம், ஜூன் 11

மாதா சிலைக்கு வைத்த தீபம் காற்றின் மூலம் பெரும் சுவாலையாகி வீட்டையே எரித்து நாசமாக்கியது. நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நாவாந்துறை நித்திய ஒளிக்கிராமத்தில் உள்ள அந்தோனிப்பிள்ளை செபஸ்தியான் பிள்ளை என்பவரின் வீடே இவ்வாறு தீயில் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது.

இது குறித்து தெரிய வருவதாவது:-

தீயில் எரிந்து சாம்பலாகிய சிறிய வீட்டில் எட்டுப் பேர் வசித்து வந்துள்ளனர். அவர்களில் இரண்டு பேர் பாடசாலை மாணவர்களாவர். கடற்றொழிலை வாழ்வாதாரத் தொழிலாக இந்தக் குடும்பத்தில் உள்ள பெரியவர்கள் அனைவரும் மாதா தேவாலயத்துக்கும் வேலை நிமித்தமும் வீட்டில் இருந்து காலை வேளை புறப்பட்டுவிட்டனர். வீட்டில் சிறிய பிள்ளைகள் இரண்டு பேர் மாத்திரமே இருந்தனர். அவர்களும் குடிநீர் எடுப்பதற்காகச் சற்றுத் தூரம் சென்றுள்ளனர். அப்போது குடிநீருக்காக குழாயடியில் காத்திருந்த பிள்ளைகளும் அயலவர்களும் வீடு தீப்பிடித்து பற்றி எரிவதை அவதானித்துள்ளனர். உடனடியாக அவர்கள் கொள்கலன்களில் சேகரித்து வைத்திருந்த நீரைக்கொண்டு தீயை அணைக்க முற்பட்டுள்ளனர். எனினும் அந்த முயற்சி பயனளிக்கவில்லை. வீடும், வீட்டில் இருந்த தளபாடங்களும் முற்றாக எரிந்து சாம்பலாகின.

வீட்டில் மாதா சிலைக்கு ஏற்றி வைத்த விளக்கின் தீயே காற்றின் மூலம் வீட்டின் ஓலைச் சுவரில் பற்றி எரிந்து வீடு சாம்பலாகியிருக்கலாம் என்று வீட்டில் உள்ளோர் சந்தேகம் தெரிவித்தனர்.

அருகில் உள்ள வீடுகளும் ஓலைகள், தகரங்களால் அமைக்கப்பட்டுள்ள போதும் தீ பரம்பல் ஏற்படாமல் தவிர்க்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் குழாய் வழியிலான குடிதண்ணீர் விநியோகமே மேற்கொள்ளப்பட்டு வருவதால் தீயை அணைப்பதற்கு தேவையான நீரைப் பெறுவதற்கும் கஷ்டமாக இருந்ததாக தீயணைப்பில் ஈடுபட்டவர்களில் ஒருவர் கூறினார்.

குறித்த தீ விபத்து தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸார் நேரில் சென்று விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

(ங-3)

## ஒபாமா பற்றித் தகவல்; பரிசு ஒட்டகம், கோழிகள்

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் ஆகியோர் எங்கிருக்கிறார்கள் என்று தகவல் அளித்தால் அவர்களுக்கு கோழிகளும், ஒட்டகங்களும் பரிசாக வழங்கப்படும் - என்று அல் - குவைதா அமைப்புடன் தொடர்புடைய சோமாலிய நாட்டைச் சேர்ந்த இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பு ஒன்று அறிவித்துள்ளது.

ஷபாப் அல் முஜாகிதீன் அமைப்பின் முகமது காலப் என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை தொழுகைக்குப் பின்னர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

ஒபாமாவின் மறைவிடம் பற்றி தகவல் அளிப்பவர்களுக்கு 10 ஒட்டகங்களும், ஹிலாரியின் மறைவிடம் பற்றி தகவல் அளிப்பவர்களுக்கு 10 கோழிகளும், 10 சேவல்களும் பரிசாக அளிக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

முன்னதாக வியாழக்கிழமையன்று காலப் மற்றும் அவருடைய 3 சகாக்கள் குறித்து தகவல் அளிப்பவர்களுக்கு 5 மில்லியன் டொலர் பரிசாக அளிக்கப்படும் என்று அமெரிக்க வெளிவிவகாரத் துறை அறிவித்திருந்தது. அதற்கு பதிலடியாக மேற்படி கேலியாக அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

## கண்களற்று வளரும் குழந்தை



இரு விழிகளும் அற்ற நிலையில் பிறந்த குழந்தையொன்று சீனாவின் உருமுக் பகுதியில் வளர்ந்து வருகிறது.

மரவன்ஜீன் என்றழைக்கப்படும் இக்குழந்தையே இவ்வாறு விழிகளற்ற நிலையில் பிறந்துள்ளது. இக்குழந்தைக்கு தற்போது வயது 8 மாதங்களே ஆகின்றன.

முகத்திற்கு ஒளியை காண்பிக்கும்போது அந்தக் குழந்தை சிரிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனால் அக்குழந்தைக்கு இடது கண் இருக்கலாமென நம்பப்படுகின்றது.

குழந்தையை பெற்றோர்கள் கிராமத்து வைத்திய சாலைக்கு அழைத்துச் சென்றபோது குழந்தைக்கு இடது புற கண் இருப்பதாகவும் ஆனால் அது தோல் பகுதியினால் மறைக்கப்பட்டிருப்பதாகவும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

அவன் ஒளியைப் பார்க்க ஆவலாக உள்ளான். பிரார்த்தனையில் ஈடுபட்டால் அவனால் ஒளியைப் பார்க்க முடியும் என்ற எண்ணத்தில் நாங்கள் தினமும் பிரார்த்தனையில் ஈடுபட்டு வருகின்றோம்' என்று அக்குழந்தையின் பெற்றோர் தெரிவித்துள்ளனர். ஆனால், இந்தக் குழந்தையின் கண்ணில் கண்வில்லை இல்லையென வைத்தியசாலையின் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்தக் குழந்தை சத்திர சிகிச்சைக்கு பொறுத்தமற்றது எனவும் 16 வயதை அடைந்த பின்னர் செயற்கை கண் பொருத்துவது சிறப்பானதாக அமையுமென வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

# சுட்டிபுரத்தில் நித்தியஸ்ரீயின் இசை மழை குத்தாட்டத்துக்கு வந்த இளசுகளுக்கு ஏமாற்றம்

## சில நிமிடங்களில் நடையைக் கட்டினர்

கொடிகாமம், ஜூன் 11

சுட்டிபுரம் அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் தற்போது நடைபெற்று வருகிறது. கடந்த புதன்கிழமை மூன்றாம் திருவிழா. குடா நாட்டில் மிகவும் பிரபல்யமான ஆலயங்களில் ஒன்றாகக் கருதப்படும் சுட்டிபுரம் அம்மனைத் தரிசிக்க பெரும் எண்ணிக்கையில் மக்கள் கூடுவது வழமை. அன்றைய தினமும் யாழ்ப்பாணம் மற்றும் பல இடங்களில் இருந்தும் ஏராளமானவர்கள் கூடி இருந்தனர்.

அன்று குடமியன் பகுதியைச் சேர்ந்தவர்களின் உபயம். வழமைபோன்று உபயத்தைச் சிறப்பாகச் செய்வதற்கு - அடியார்களை (மக்களை) அழைப்பதற்கு - விசேட ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

அன்றைய தினம் இந்தியாவின் புகழ்மிக்க பாடகியான நித்தியஸ்ரீயின் இசைக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்திருந்தனர். நித்தியஸ்ரீ பெரும் புகழ் பெற்ற பாடகி. பல இலட்சக் கணக்கானவர்களின் மனங்களைக் கொள்ளை கொண்ட பாடகியான பட்டம்மாளின் பேர்த்தி.

நித்தியஸ்ரீ குழுவினரின் இசைக்கச்சேரி குறித்து ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்ததால் அன்றைய தினம் (புதன்கிழமை) சுட்டிபுரத்தில் மக்கள் கூட்டம் நிறைந்திருந்தது.

மாலை திருவிழா சிறப்பாக நடந்து முடிந்தது. அதைத் தொடர்ந்து இரவு நித்தியஸ்ரீயின் கச்சேரிக்கான ஆயத்தங்கள் நடந்துகொண்டிருந்தன. திருவிழாவுக்கு வந்தவர்கள் காத்திருந்தனர்.

சற்று நேரத்தில் இசைக் கச்சேரி ஆரம்பமானது. நித்தியஸ்ரீயின் பாடல் இசையுடன் கலந்து பரவியது. பல கால இடைவெளிக்குப் பின் சுட்டிபுரத்தில் இசைமழை பொழிந்தது.

கர்நாடக இசையை ரசிக்கக் கூடிய பலர் கானமழையில் மூழ்கி தாள நயத்துடன் தங்களையே மறந்திருந்தனர்.

ஆனால் இந்த நிகழ்ச்சி ஆரம்பித்த கையோடு பெரும் எண்ணிக்கையானவர்கள் - குறிப்பாக இளவட்டங்கள் அங்கிருந்து நகரத் தொடங்கினர். சினிமாப் பாடலை - துள்ளல் இசையைக் கேட்டு குத்தாட்டம் ஆடி மகிழ வந்த இந்த 'கூத்தாடிகளுக்கு' கர்நாடக இசையின் இனிமை- ரசனை- ஈர்ப்பு எங்கே வரப் போகிறது.

கூட்டத்தை விட்டு வெளியேறிய இளசுகள் இசை நிகழ்ச்சியை ஒழுங்கு செய்திருந்தவர்களைப் பரிகசித்துச் சென்றதையும் அவதானிக்க முடிந்தது.

பெருந்தொகையைக் கொடுத்து இந்தக் கச்சேரியை ஏற்பாடு செய்திருந்தவர்களுக்கு இது பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கலாம்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்திருந்த நித்தியஸ்ரீ பல இடங்களிலும் நிகழ்ச்சிகளை நடத்தி இருந்தார்.

அவ்வேளை யாழ். நகரில் நடந்த கச்சேரியைப் பெருந்திரளானவர்கள் ரசித்துப் பாராட்டி இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஓ)

## ஹொஸ்னி முபாரக் கவலைக்கிடம்

எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் சுயநினைவின்றி, கவலைக்கிடமாகவுள்ளார் என எகிப்து பாதுகாப்பு அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

ஆயுள்தண்டனை விதிக்கப்பட்ட பின்னர் அவரது உடல் நிலை மிகவும் மோசமடைந்தது. இதையடுத்து கெய்ரோ சிறையில் உள்ள மருத்துவமனைக்கு அவர் மாற்றப்பட்டார்.

முபாரக் இறந்துவிட்டார் என வதந்திகள் வெளியானதையடுத்து அவரது மனைவி சுசான்னி முபாரக்கும், 2 மருமகள்களும் நேற்று அவரை சிறையில் பார்வையிட்டனர் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

# வவுனியா பாடசாலைகளில் செல்போன்களுக்குத் தடை

வவுனியாவிலுள்ள பாடசாலைகளில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், பாடசாலை நேரங்களில் கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்த முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா இத்தடையுத்தரவை விடுத்துள்ளார்.

பாடசாலை நேரங்களில் மாணவர்கள் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தி தகாத சில நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் மற்றைய மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிப்படைகின்றன எனவும் கூறப்படுகிறது.

## அகதிகள் படகு ஆஸியில் விபத்து

இலங்கையிலிருந்து அகதிகளை ஏற்றியபடி ஆஸ்திரேலியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த அகதிகள் படகு கொகேஸ் தீவுக்கு அருகில் விபத்துக்குள்ளானது.

இது தொடர்பாகத் தெரியவருவதாவது:

இலங்கையிலிருந்து 32 அகதிகளை ஏற்றியபடி ஆஸ்திரேலியா நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த படகே கடுங்காற்றுக் காரணமாக பாறை ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. எனினும் இதில் பயணித்தவர்கள் பாதுகாப்பாகக் கரை சேர்க்கப்பட்டு கிறிஸ்மஸ் தீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ங-15)

## ஷிரந்தியின் சகோதரர் வீட்டில் ரூபா 80 லட்சம் கொள்ளை

கொழும்பு, ஜூன் 11

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத் தலைவரும் முதற் பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷவின் சகோதரருமான நிஷாந்த விக்கிரமசிங்கவின் வீட்டில் 80 இலட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வியாழனன்று இரவு வீட்டிற்குள் புகுந்த கொள்ளையர்கள், பணம் மற்றும் பெறுமதியான மணிக் [illegible] னர்.



[illegible] பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்ட ஈடு வழங்கும் வைபவம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர பாதிக்கப்பட்டவர்களுக்கு க்சோலைகளை வழங்கினார். (ங-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் காட்டில் தேடுதல் வேட்டை சிக்கின பெறுமதி மிக்க மரங்கள்

*மன்னார், ஜூன் 11*

*மன்னார் மாவட்டம் முசலிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட காட்டுப் பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் வெட்டப்பட்ட ஒரு தொகுதி விலைஉயர்ந்த மரங்கள் கடந்த வெள்ளிக்கிழமை படைத்தரப்பினரால் மீட்கப்பட்டுள்ளன.*

முசலிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மறிச்சிக் கட்டி, பாலைக்குழி ஆகிய இடங்களிலுள்ள காட்டுப் பகுதிகளில் இராணுவத்தினரின் வேண்டுகோளுக்கு அமைவாக வனத்துறையினர், பொலிஸ், இராணுவம் ஆகியோர் இணைந்து சுமார் 200 ஹெக்ரர் நிலப்பரப்பைக் கொண்ட காடுகளில் தேடுதல் வேட்டை நடத்தினர்.

இதன் போது குறித்த காட்டுப்பகுதிக்குள் பல இடங்களில் வெட்டப்பட்ட நிலையில் பெறுமதி வாய்ந்த மரத்துண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட மரத்துண்டுகளில் 26 பாலை மரங்கள், இரண்டு முதிரை மரங்கள், ஒரு கருங்காலி, மரம் உள்ளிட்ட சுமார் 224 மரத்துண்டுகள் வெட்டப்பட்ட நிலையில் புத்தளம் பகுதிக்குக் கொண்டு செல்லத் தயாரான நிலையில் மீட்கப்பட்டுள்ளன என்று இராணுவத்தினர் தெரிவித்தனர்.

குறித்த தேடுதல் நடவடிக்கையின் போது இராணுவத்தின் 542 ஆம் படைப் பிரிவின் பிரிகேட் கொமாண்டர் விக்கும் லியனகே,மேஜர் ஜனக பெரேரா, மாவட்ட வன அதிகாரி சரத்குமார, வட்டார வன அதிகாரி தணிகாசலம், மன்னார் மாவட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஐ.உதய கேமந்த, மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துசார தழுவத்த ஆகியோரும் சென்றிருந்தனர்.

போருக்குப் பின்னர் மக்கள் மீளக்குடியமர்ந்த நிலையில் வன்னிப் பகுதிகளிலுள்ள காட்டு வளங்கள் மிக மோசமாக அழிக்கப்பட்டு வருகின்றன.

இதற்குச் செல்வாக்கு மிக்க அரசியல்வாதிகள், படைத்தரப்பினர், பொலிஸார் ஆகியோரின் ஒத்துழைப்புக் கிடைப்பதாகவும் மக்கள் குற்றம் சாட்டி வந்துள்ளனர்.

தற்போது இடம் பெறும் வேகத்தில் காட்டு வளங்கள் அழிக்கப்படுமாயின் ஏற்கனவே வரண்ட பிரதேசமாகக் காணப்படும் வன்னிப் பகுதி மழையின்றிப் பெரும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டு விடுமென இங்குள்ள கல்வியியலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (க-12)

## கணித வினாடி வினாப் போட்டி முடிவுகள்

கிளிநொச்சி, ஜூன் 11

கிளிநொச்சி மாவட்ட மட்டத்தில் தமிழ் மொழி மூலம் நடத்தப்பட்ட கணித வினாடி வினாப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

தரம் 6

1ஆம் இடம்-சுபாகரன் தனுஜன்-கிளிநொச்சி மத்திய கல்லூரி, 2ஆம் இடம்-பாஸ்கரன் சதுஸ்டிகன்- பரந்தன் இந்து ம.வி, 3ஆம் இடம்-புஸ்பராசா டனோஜன்-கிளிநொச்சி மத்திய கல்லூரி.

தரம்-7

1ஆம் இடம்- சிவசோதி தர்ஷி புனித திரேசா பெண்கள் கல்லூரி, 2ஆம் இடம்-சிவராசா றினூஜன்- கிளிநொச்சி மத்திய கல்லூரி, 3ஆம் இடம்-தினேஸ் கோபினூஜன்-கிளிநொச்சி ம.வி.

தரம்-8

1ஆம் இடம்-சிவபாலன் பவித்திரன்-கிளிநொச்சி ம.வி, 2ஆம் இடம்-பத்மசிறி கீர்த்திகன்- கிளிநொச்சி ம.வி, 3ஆம் இடம்-சுதாகரன் றவீனா -இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா.

தரம்-9

1ஆம் இடம்-பாலகுமார் அட்சிகா-புனித திரேசா பெண்கள் கல்லூரி, 2ஆம் இடம்-ஜெயசேகரம் சத்தியதரண்யா- கிளிநொச்சி ம.வி, 3ஆம் இடம்-சிற்றம்பலம் அபினயா -பளை மத்திய கல்லூரி.

தரம்-10

1ஆம் இடம்-சந்திரசேகரன் சோமனப்பிரியன்-கிளிநொச்சி மத்திய கல்லூரி, 2ஆம் இடம்-நாகேந்திரம் கேசவராஜ்- கிளிநொச்சி மத்திய கல்லூரி, 3ஆம் இடம்-பத்மசிறி இந்துஷா-கிளிநொச்சி ம.வி.

தரம்-11

1ஆம் இடம்-ஸ்டீபன் நிலக்சன்-கிளிநொச்சி ம.வி, 2ஆம் இடம்-யேசுதாசன் நிதுஜா- புனித திரேசா பெண்கள் கல்லூரி, 3ஆம் இடம்-சிவகருணாகரன் விதுர்ஜன்-கிளிநொச்சி ம.வி.

ஆங்கிலமொழி மூலம்

தரம்-6

1ஆம் இடம்-பாலகிருஷ்ணன் சிவிகா-முருகானந்தா கல்லூரி, 2ஆம் இடம்-விக்னேஸ்வரன் அபிசா- புனித திரேசா பெண்கள் கல்லூரி, 3ஆம் இடம்-கருணாகரன் தனோஜா-முழங்காவில் ம.வி.

தரம்-7

1ஆம் இடம்-ஸ்ரீரங்கநாதன் கௌதமன்-கிளிநொச்சி ம.வி, 2ஆம் இடம்-தவச்செல்வன் ஆர்வலன்-கிளிநொச்சி ம.வி, 3ஆம் இடம்- சின்னவேல்யோகன் மதுரகிலா-முருகானந்தா கல்லூரி.

(க-405)



புனரமைப்பு வேலைகள் நிறைவடைந்துள்ள நிலையில் காணப்படும் அக்கராயன் மகாவித்தியாலயத்தின் ஆசிரியர் விடுதி. (18)

### உருத்திரபுரம் கிராமத்தில்

## கற்கள் பரவப்பட்ட வீதியால் பயணிக்கும் மக்கள் சிரமம்

கிளிநொச்சி, ஜூன் 11

கிளிநொச்சி உருத்திரபுரம் கிராமத்தில் 'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்வதாக உறுதி வழங்கப்பட்ட மூன்று கிலோ மீற்றர் நீளமான வீதி கற்கள் பரவப்பட்ட நிலையில் உள்ளதால் இதனூடாகப் பயணிக்கும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரம் கிராமத்தில் பிரதான போக்குவரத்து வீதியாகக் காணப்படும் மூன்று கிலோ மீற்றர் நீளமான வீதி வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படும் பெயர்ப்பலகை கடந்த எட்டு மாதங்களுக்கு முன்னர் திரை நீக்கம் செய்யப்பட்டது.

ஆனால் சிறிய கற்கள் பரப்பப்பட்டுள்ள நிலையிலேயே இந்த வீதி இன்று வரை காணப்படுகின்றது.

கொங்கிறீட் வீதியாகப் புனரமைக்கப்படுமெனக் கூறியே வீதிப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் பணிகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ள நிலையிலேயே காணப்படுகின்றது.

இதனால் இந்த வீதியூடாகப் பயணிக்கும் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் இருபதுக்கும் மேற்பட்ட வீதிகள் கற்கள் பரப்பப்பட்டு பயணிக்க முடியாத நிலையில் உள்ளன. இதனால் இந்த வீதிகளைப் பயன்படுத்துகின்றவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (க-6)

### கிளிநொச்சி ஊற்றுப்புலம் பாடசாலையில்

## தரம் 10 வகுப்பு மூடப்பட்டதால் அவலநிலையில் மாணவர்கள்

*கிளிநொச்சி, ஜூன் 11*

*கிளிநொச்சி ஊற்றுப்புலம் தமிழ் வித்தியாலயத்தில் இயங்கி வந்த தரம் 10 வகுப்பு மூடப்பட்டமையால் சுமார் 20 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் வேறு பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டிய நிலை தோன்றியுள்ளது.*

*கிளிநொச்சி ஊற்றுப்புலம் தமிழ் வித்தியாலயத்தில் தரம் 10 வரையான வகுப்புகள் கடந்த காலங்களில் இயங்கி வந்துள்ளன.*

*இந்த ஆண்டு முதலாம் தவணை ஆரம்பத்தில் 23 வரையான மாணவர்கள் தரம் 10 ஆம் வகுப்பில் கல்வி கற்று வந்தனர். இரண்டாம் தவணை ஆரம்பமான போது தரம் 10 ஆம் வகுப்பு மூடப்பட்டதுடன் மாணவர்களை வேறு பாடசாலைகளுக்குச் செல்லுமாறு கூறப்பட்டது.*

*இந்த நிலையில் 10 ஆம் வகுப்பு மாணவர்கள் புதுமுறிப்பு மற்றும் கோணாவில் ஆகிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அத்துடன் வேறு பாடசாலைகளுக்குச் செல்ல வசதியற்ற மாணவர்கள், பாடசாலைக் கல்வியைக் கைவிட்டுள்ளனர்.*

*மேற்படி பாடசாலையில் போதிய வகுப்பறை வசதிகள், ஓரளவு ஆசிரியர் வளம் மற்றும் ஏனைய வசதிகள் உள்ள போதும் இவ்வாறு இரண்டாம் தவணையுடன் மேற்படி வகுப்பு மூடப்பட்டமையால் தமது பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்பட்டதுடன் தமக்கு இது ஒரு வேதனை தரும் விடயமாக உள்ளதெனவும் மாணவர்களின் பெற்றோர் தெரிவிக்கின்றனர். (க-6)*

## மன்னார் நொச்சிக்குளம் கிராமத்தில் 42 வீடுகள் மக்களிடம் கையளிப்பு

மன்னார், ஜூன். 11

மன்னார் மாவட்டத்திலுள்ள நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள நொச்சிக்குளம் கிராமத்தில் குவைத் நிவாரண அமைப்பின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 42 வீடுகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை மக்களிடம் கையளிக்கப்பட்டன.

கைத்தொழில், வணிகத் துறை அமைச்சர் ரிசாத் பதியுதீனின் அழைப்பின் பேரில் இலங்கைக்கான குவைத் நாட்டின் துதுவர் இந்த வீடுகளை மக்களிடம் கையளித்தார்.

ஜமாத்தே இஸ்லாமிய சமூக சேவை பிரிவு இந்த நிர்மாணப்பணிகளுக்கான திட்டத்தை நடை முறைப் படுத்தியது.

இந்தத் திறப்பு விழாவில் குவைத் நாட்டின் பிரபல சமூக சேவை மற்றும் நிவாரண அமைப்பின் தகுதியுடைய அதிகாரியான பத்ர் அல்-சம்ரூக், ஜமாத்தே இஸ்லாமின் சமூக சேவை பிரிவின் பொறுப்பாளர் மௌலவி அப்துர் ரஹ்மான், நானாட்டான் பிரதேச சபைத் தலைவர் அன்புராஜ், பிரதேச சபை உறுப்பினர்களான சூசை மற்றும் சஹாப்த்தீன், ஓ.எச்.ஆர்.டீ.நிறுவன செயலாளர் எஸ்.எப்.எம்.றமீஸ் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

**இந்தக் கிராமத்தில் மீளக்குடியமர்ந்துள்ள 108 குடும்பங்கள்.**

தற்போது இந்தக் கிராமத்தில் மீளக்குடியமர்ந்துள்ள 108 குடும்பங்களில் முதல் கட்டமாக 42 குடும்பங்களுக்கு இந்த வீடுகள் நிர்மாணித்து கொடுக்கப்பட்டதுடன், அவர்களுக்கான உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன.

இலங்கைக்கான குவைத் தூதுவர் யாகூப் யூசுப் அல்-அதீக்கி,தமது வருகையை நினைவு கூறும் வகையில் அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்குத் தமது நாட்டின் தேசிய சின்னமொன்றையும் அன்பளிப்பு செய்தமை குறிப்பிடத்தக்கது. (க-12)

## கீழைத்தேய ஆடற்கதைப் போட்டியில் வவுனியா தமிழ் ம.வி. முதலிடம்

வவுனியா, ஜூன் 11

பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ் மொழித் தினப் போட்டியின் ஓர் அங்கமான கீழைத்தேய ஆடற்கலைப் போட்டியில் வவுனியா தமிழ் மகாவித்தியாலயம் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

அத்துடன் திருவாட்டி வேல் ஆனந்தன் நினைவு வெற்றிக் கேடயத்தையும் தனதாக்கிக்கொண்டது.

''நாட்டிய நாடகம்'' என்று ஒத்த கருத்துடைய இரட்டைச் சொற்களால் அழைக்கப்படும் கீழைத்தேய ஆடற்கலை அதன் உள்ளீடு நிலையில் மிகப்பரந்த அம்சங்களைக் கொண்டதும், மற்றைய ஆடல் வகைகள் போன்று தனித்துவமான கற்கைநெறிக்குரிய பயில்முறை வடிவம் இது என்பதும் நம்மிடையே உணரப்படவில்லை. தவிரவும், தனித்த ஆடல் துணுக்குகள் மூலம் சமூகத்துக்கு இனங்காண முடியாத செய்திகளை ''ஆடற் கதை'' ஆக்கங்கள் மூலம் துல்லியப்படுத்தக்கூடிய அழகியல் செறிவு மிக்க வலிமை மிகு ஊடகம் ''ஆடற்கதை'' ஆக்கம் என்பது மட்டுமன்றி, பாத்திரம் பெறுமானங்கள் சார்ந்த ஆக்கத்திறன்களை மாணவர்களுக்கு இனங்காட்டக்கூடிய துலங்கச்செய்யக்கூடிய, வடிவம் ''ஆடல் கதை'' என்பதால் வடமாகாண தமிழ் பாடசாலைகள் மட்டத்தில் போட்டி இலக்குகளுக்கு அப்பாலும் இந்தக் கலை வடிவத்தை ஊக்குவிக்கும் முக்கிய குறியீடாக நமது மூத்த ஆடற்கலை ஆசானும், பல நூறு அரங்குகள் கடந்த ஆற்றுகையாளருமான கலைஞர் வேல் ஆனந்தன் அவர்களின் துணைவியார் அமரர் திருவாட்டி தெரேசா வேல் ஆனந்தனின் நினைவாகச் சுழற்சிமுறையிலான இந்த வெற்றிக் கேடயம் வடமாகாண தமிழ் பாடசாலைகளுக்கு உரித்தானதாகக் கையளிக்கப்பட்டது.

இது சார்ந்த பாராட்டுச்சான்றிதழ்களை வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வழங்கி நிறைவுசெய்துள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபகரிப்பது உண்மையே

01↘ என்று உறுதியாகக் கூறினார். வடக்கிலுள்ள இராணுவ முகாம்களை அகற்றுமாறு இலங்கை அரசுக்கு சர்வதேச சமூகம் தொடர் அழுத்தங்களைப் பிரயோகித்து வரும் இவ்வேளையில், யாழ். நகர்ப்புறங்களில் அமைந்துள்ள இராணுவ முகாம்கள் விரைவில் முற்றாக அகற்றப்படும் என்ற விடயத்தையும் அவர் 'உதய'னிடம் தெரிவித்தார்.

அத்தோடு, சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தின் தலையீடு உள்ளது என எழுந்துள்ள விமர்சனங்களையும் யாழ். கட்டளைத் தளபதி திட்டவட்டமாக நிராகரித்தார்.

வடக்கில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தமிழ் மக்களின் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை அபகரித்துக்கொண்ட இலங்கை இராணுவம், தற்போது யாழ். மாவட்டத்திலும் நிலங்களை அபகரிக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது என்றும், இதில் முதற்கட்டமாக 61 ஏக்கர் நிலப்பரப்பை கையகப்படுத்துவதற்கு இரா ணுவம் திட்டம் தீட்டியுள்ளது என்றும் தற்போது செய்திகள் வெளியாகியுள்ளன.

நல்லூர், கோப்பாய், தெல்லிப்பழை ஆகிய மூன்று பிரதேச செயலர் பிரிவுகளிலும் இருந்து மாத்திரம் 61 ஏக்கர் நிலம் அபகரிக்கப்படவுள்ளது. இவற்றில் தனியாரின் உறுதிக் காணிகளும் உள்ளடங்குகின்றன என்று குடாநாட்டுப் பத்திரிகைகள் புள்ளிவிவரங்களுடன் செய்திகளை வெளியிட்டிருந்தன. அதுமட்டுமன்றி, பிரதேச சபைகள், திணைக்களங்கள் மற்றும் முக்கியமான சில அலுவலகங்கள் ஆகியவற்றுக்குச் சொந்தமான காணிகளை அரச காணிகள் என்ற போர்வையில் சுவீகரிப்பதற்கும் தீவிர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் கூறப்படுகின்றது.

யாழில் நிலைகொண்டுள்ள இராணுவம் நில ஆக்கிரமிப்பில் ஈடுபட்டுள்ளது என உறுதியான தகவல்கள் வெளியாகியதையடுத்து யாழ்.மக்கள் பெரும் பதற்றமடைந்துள்ளனர். தங்களின் நிலங்களும் அபகரிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்ச உணர்வுடனேயே அங்கு மக்கள் வாழ்கின்றனர் என அறிய முடிகின்றது. அதேவேளை, நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டிய இத்தருணத்தில் படை நடவடிக்கைகளை வடக்கில் பலப்படுத்துவது அநீதியான செயல் என்றும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

யாழ். குடாநாட்டில் இராணுவம் நில அபகரிப்பு நடவடிக்கையில் ஈடுபடுகின்றது எனக் கூறப்படும் தகவல்கள்மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை - சந்தேகத்தை தோற்றுவித்துள்ளன.

இந்நிலையில், யாழ். குடாநாட்டில் நடைபெறுவது என்ன? இராணுவம் தொடர்பில் எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் உண்மைதானா என்பவை உட்பட முக்கிய பல விடயங்கள் தொடர்பில் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத்தளபதி யிடம் 'உதயன்' வினவியது;

''யாழ். குடாநாட்டில் இராணுவம் நிலங்களை அபகரிக்கும் நடவடிக்கையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது எனக் கூறப்படுகின்றதே என நாம் எழுப்பிய கேள்விக்கு,

''இல்லை....இல்லை... இராணுவம் நில அபகரிப்பு நடவடிக்கையில் ஈடுபடவில்லை. அவ்வாறானதொரு தேவைப்பாடும் எமக்குக் கிடையாது. இராணுவம் வீடுகள் போன்ற இடங்களிலேயே தற்போது தங்கியுள்ளது. எனவே, முகாம்களை அமைப்பதற்கு நாங்கள் சில அரச காணிகளையே இனங்கண்டுள்ளோம். படை முகாம்கள் அமைக்கப்படும் என்பதன் அர்த்தம் படை நடவடிக்கைகளைப் பலப்படுத்துவது என்பது அர்த்தமில்லை. முகாம்களை அமைக்காவிட்டால் இராணுவத்தினர் எங்கு தங்குவது?

யாழ். குடாநாட்டில் நகர்ப்புறங்களில் உள்ள படை முகாம்கள் விரைவில் அகற்றப்படும். இராணுவம் தங்குவதற்கான தளங்களை அமைப்பதற்கே சில அரச காணிகளை நாம் இனங்கண்டுள்ளோம். இதற்குப் பெயர் அபகரிப்பு நடவடிக்கை அல்ல எனப் பதிலளித்தார் மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க.

இல்லை....மேஜர் ஜெனரல், ''இராணுவம் தனியார் காணிகளையும் அபகரிப்பதற்குத் திட்டமிட்டுள்ளது என்றும், அதுகுறித்து புள்ளி விவரங்களுடன் செய்திகள் வெளியாகியிருக்கின்றனவே'' என்றும் நாம் எழுப்பிய இன்னுமொரு கேள்விக்கு, ''இல்லை... இல்லை. நாம் தனியார் காணிகளை அபகரிக்கவில்லை; சுவீகரிக்கவும் மாட்டோம். அவ்வாறு எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை'' எனப் பதிலளித்தார் யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி ஹத்துருசிங்க.

## இலாபமீட்டும் துறைகள் எல்லாம் இந்தியா, அமெரிக்காவின் கைகளில்

01↘ இந்த மக்கள் விரோத செயலுக்கு நாம் ஒருபோதும் அனுமதியளிக்கமாட்டோம். நாடுமுழுவதிலுமுள்ள மக்களை ஒன்றுதிரட்டி மாபெரும் அரச எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுப்போம் என ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:- எரிபொருள் விலையை அதிகரிப்பதன் மூலம் மக்கள் மீது சுமையேற்றியுள்ள அரசு அதைக் குறைக்க முடியாத காரணத்தால் எரிபொருள் கூட்டுத்தாபனத்தில் இலாபம் பெறும் துறைகளை தனியார் மயமாக்கியுள்ளது.

உதாரணமாக எரிபொருள் கூட்டுத்தாபனம் வசமிருந்த 100 எரிபொருள் நிரப்பும் நிலையங்களை இந்திய எண்ணெய் நிறுவனத்திற்கு விற்றது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் 42 எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் இந்திய எண்ணெய் நிறுவனத்திற்கு விற்கப்பட்டுள்ளன. இவ்வாறு எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் அனைத்து துறைகளையும் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் அரசு விற்றுள்ளது. எரிபொருள் கூட்டுத்தாபனத்தை இலங்கை அரசு நிர்வகிக்க இந்தியாவும் அமெரிக்காவும் இலாபம் பெறும் மடைத்தனமான செயலுக்கு அரசு துணைபோகின்றது.

எரிபொருள் விலையை அதிகரித்து வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அரசு மானியம் வழங்கி வருகின்றது. குறிப்பாக, மக்கள் மீது சுமையேற்றி இந்தியாவிற்கு கப்பம் செலுத்தும் நிலையை அரசு ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான நிலையில் இந்திய நடிகைகளை அழைத்துவந்து ரகர் வசந்தம் காண்பித்து அவர்களுக்குப் பணத்தையும் வாரி இறைக்கின்றது. - என்றார்.

## அரசியல் கைதிகளைப் பட்டினி கிடக்க தூண்டுவது சுயநல அரசியல்வாதிகளே

01↘ ணங்களில் 2010 ஆம் ஆண்டு புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக 95 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. அதிலும் யாழ். மாவட்டத்தில் இதுவரையில் நான்கரை கோடி ரூபா நிதி எமது அமைச்சால் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் இங்கேயே அதிகளவிலான நிதி வழங்கப்பட்டது.

மேலும் தெரிந்தோ தெரியாமலோ ஆயுதமேந்திப் போராடிய விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் 12 ஆயிரம் பேர் வரையில் கைது செய்யப்பட்டு எம்மிடம் ஒப்படைக்கப்பட்டார்கள். இவர்களில் 11 ஆயிரம் பேர் வரையில் சமூகத்துடன் மீளவும் இணைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் எமது அமைச்சினால் இலகு கடன் குறைந்த வட்டியில் வழங்கப்படவுள்ளது. 300 மில்லியன் ரூபா வரையில் 2 ஆயிரம் முன்னாள் போராளிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

இதனைவிட போரின்போது கைது செய்யப்பட்ட சுமார் 600 பேர் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தவறான தகவல்கள் பரப்பப்பட்டு வருகின்றன. ஆனால் எமது அமைச்சு இவர்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட ஏனைய அமைச்சுக்களோடு தொடர்பு கொண்டு பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

சட்டமா அதிபர் திணைக்களம் ஊடாக இவர்களது வழக்குகளை நீதிமன்றில் பாரப்படுத்தவுள்ளோம். இதற்காக இந்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் மன்னார், வவுனியா, அநுராதபுரம், வெலிக்கடை சிறைச்சாலையில் விசேட நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளது. நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு அமைய அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இது இவ்வாறிருக்க சில அரசியல்வாதிகள் பிழையான விடயங்களை முன்வைக்கின்றனர். சிறைச்சாலைகளில் இருக்கின்ற இந்தக் கைதிகளை உண்ணாவிரதம் இருக்குமாறு தூண்டிவிட்டு - ஏவிவிட்டு தங்களது சுயநல அரசியலை முன்னெடுக்கின்றனர். இதன் மூலம் நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள சமாதானத்தைக் குலைக்க முனைகின்றனர். - என்றார்.

இந்த நிகழ்வில் வைத்து யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 91 பேருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 60 பேருக்கும் காசோலைகள் வழங்கப்பட்டன. உயிரிழப்பு மற்றும் சொத்திழப்பு ஏற்பட்டோருக்கு 2 1/2 லட்சம் ரூபாவும் ஏனைய பாதிப்புகளுக்கு அவற்றுக்கு உரிய தொகையும் வழங்கப்பட்டன. (ங-5)

## படையினரை விடவும் புலிகள்தான் குறிபார்த்து சுடுவதில் வல்லவர்கள்

01↘ திறமைகளைக் கொண்டவர்கள். குறிப்பாக விளையாட்டுத்துறையில் சாதிக்கக்கூடியவர்கள். கிரிக்கெட், உதைபந்தாட்டம் போன்றவை மட்டுமன்றி குறி பார்த்துச் சுடுவதிலும் வல்லவர்கள். இவர்களை விளையாட் டுத்துறையில் முன்னேற்றும் பொருட்டு எதிர்வரும் 19ஆம் திகதி, எமது அமைச்சு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு என்பன இணைந்து இவர்களுக்கான தேர்வுகளை நடத்தவிருக் கின்றது.

இதில் தெரிவு செய்யப்படும் வீரர்கள், தென்னாசிய மெய்வன்மைப் போட்டிக்குத் தயாராகும் இலங்கை அணியில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். இதற்காக குறிபார்த்துச் சுடும் போட்டியில் பங்குபற்றுவதற்கு முன்னாள் புலி உறுப்பினர்கள் பலர் மறுக்கின்றனர். தாம் மீண்டும் விளையாட்டுக்காகக்கூட துப்பாக்கி ஏந்தமாட்டோம் என்று சொல்கின்றனர்-என்றார் அமைச்சர். (ஒ-5)

## வெளிநாட்டு நாணய வர்த்தகத்துக்கு அனுமதி

01↘ மாற்றப்படும் ஸ்ரேலிங் பவுண், அமெரிக்க டொலர் உட்பட வெளிநாட்டு நாணயங்கள் மத்திய வங்கியை அடைவதை உறுதிப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 61 வெளிநாட்டு நாணயப் பரிமாற்று நிறுவனங்கள், வெளிநாட்டு நாணயங்களில் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. எனினும், அவை வெளிநாட்டு நாணயங்களை விற்பனை செய்வதற்கு அனுமதிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## தமிழர்களை எதிரிகளாக்கவே புலம்பெயர்ந்தோர் ஆர்ப்பாட்டம்

01↘ மனங்களைத் தமிழர்கள் கட்டாயம் வெல்ல வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ள இத்தருணத்தில், புலம்பெயர் தமிழர்களின் நடவடிக்கையானது இங்கு வாழும் தமிழ்மக்களை அதல பாதாளத்துக்கே கொண்டு செல்லப்போகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். ''புலம்பெயர் தமிழர்களின் நடவடிக்கை சிங்கள மக்கள் மத்தியில் ஜனாதிபதிக்கு நீங்காததொரு இடத்தைப் பிடித்துக்கொடுத்துள்ளது. புலம்பெயர் தமிழர்கள் யாருக்கு நன்மை பயக்க வேண்டும் என போராடுகின்றனரோ அவர்க ளின் நிலைமைகள் புலம்பெயர் தமிழர்களின் செயற்பாடுகளால் மோசமடைந்து வருகின்றன.

தமிழ்மக்களை எதிரிகளாகப் பாருங்கள் என்ற வைராக் கிய குணவியல்பு சிங்கள மக்கள் மத்தியில் புதைந்து, தமிழர் களின் குரோதத்தனமான நடவடிக்கைகளாய் உருவெடுக் கின்றன. எனவே, லண்டன் ஆர்ப்பாட்டமானது ஜனாதிபதிக்கு சாதகமாகவும், தமிழர்களுக்குப் பாதகமாகவும் அமைந்துள் ளது என்றே சொல்லவேண்டும்'' - என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## முறையான போர்க்குற்ற விசாரணைகள் தேவை

01↘ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் மகிழ்ச்சியான சூழலில் உரையாடினார் என ஊடகங்களில் வெளியான தகவல்களை பிரிட்டிஷ் பிரதமரின் பேச்சாளர் ஒருவர் நிராகரித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, போர்க்குற்றங்கள் தொடர்பாக பொறுப்புக்கூறப்பட வேண்டும் என்று பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் இலங்கை ஜனாதிபதியிடம் வலியுறுத்திக் கேட்டுள்ளார் என சனல் - 4 தெரிவித்துள்ளது.

கமரூனும், மஹிந்த ராஜபக்ஷவும் மகிழ்ச்சியாக உரையாடினர் எனவும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரிட்டிஷ் பிரதமருக்கு தமது நாட்டின் நிலைமைகள் குறித்து விளக்கமளித்தார் எனவும் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு ஜனாதிபதியின் பேச்சாளர் பந்துல ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு பந்துல ஜெயசேகர வழங்கிய செவ்வியில், கமரூனும் ராஜபக்ஷவும் தனித்தனியாகச் சந்தித்தனர் எனக் கூறப்பட்டுள்ளது.

இவர்களின் கலந்துரையாடல் பற்றிய விவரங்கள் உட னடியாக ஜனாதிபதி செயலகத்துக்கு கிடைக்கவில்லை என் றும் அவர் கூறியிருந்தார். ஏன் அந்த விவரங்கள் கிடைக்கவில்லை என்பது இப்போது தெளிவாகியுள்ளது. அவர்கள் தனித் தனியாகச் சந்தித்தனர் என்பதை பெரும்பாலான மக்கள் நட்புரீதியானது என்றே கருதுவார்கள். ஆனால், இந்தச் சந்திப்பின் போது இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக முறைப்படியான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்ற பிரச்சினையை பிரிட்டிஷ் பிரதமர் எழுப்பினார் என்று பிரிட்டிஷ் பிரதமர் செயலகப் பேச்சாளர் கிராக் ஒலிவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பந்துல ஜெயசேகரவுடன் சனல் - 4 தொடர்பு கொள்ள முயன்றது. ஆனால், அவர் தொடர்புக்கு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 1,033 காணிகள், வீடுகள்; முப்படைகள் சுவீகரிக்கும்

01↘ செயலர்களுக்கு அழுத்தம் கொடுக்கப்படுவதாகவும் இராணுவத்தினர் தமது பயன்பாட்டுக்கு வழங்குமாறு கோரிய காணிகளின் விவரங்களை வழங்குமாறு ஆளுநர் பணித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

தற்போது யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினரின் பிடியில் 716 காணிகள் உள்ளன. இவற்றில் வீட்டுடன் இணைந்த காணி 378, தனியார் காணி 283, அரச காணி 9, வியாபார நிறுவனங்கள் 46 இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளன.

பொலிஸ் கட்டுப்பாட்டில் 64 காணிகள் உள்ளன. இவற்றில் வீட்டுடன் இணைந்த காணி 57, தனியார் காணி 5, அரச காணி 1, வியாபார நிறுவனங்கள் 1 பொலிஸாரின் கட்டுப்பாட்டில் உள்ளன. கடற்படையினரின் கட்டுப்பாட்டில் 253 காணிகள் உள்ளன. இவற்றில் வீட்டுடன் இணைந்த காணி 123, தனியார் காணி 104, அரச காணி 19, வியாபார நிறுவனங்கள் 7 கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன.

இந்தக் காணிகளையும் வீடுகளையுமே கையகப்படுத்துவதற்கு படைத்தரப்பு முயல்வதாகப் பொதுமக்கள் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ங-5)

## சுவீகரிக்கப்படும் காணி, வீடுகளின் விவரம்

| பிரதேச செயலகம் | கிராமங்களின் எண்ணிக்கை | வீட்டுடன் இணைந்த காணி | | | தனியார் காணி | | | அரச காணி | | | வியாபார நிறுவனங்கள் | | | வியாபார நிறுவனங்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | இரா. | பொ. | க.ப. | இரா. | பொ. | க.ப. | இரா. | பொ. | க.ப. | இரா. | பொ. | க.ப. | இரா. | பொ. | க.ப. |
| நெடுந்தீவு | 4 | 0 | 0 | 10 | 0 | 0 | 17 | 0 | 0 | 0 | 0 | 0 | 2 | 0 | 0 | 29 |
| வேலணை | 30 | 0 | 0 | 44 | 0 | 0 | 74 | 2 | 1 | 1 | 0 | 0 | 3 | 2 | 1 | 122 |
| ஊர்காவற்றுறை | 5 | 12 | 17 | 2 | 0 | 0 | 2 | 0 | 0 | 4 | 1 | 0 | 0 | 13 | 17 | 8 |
| காரைநகர் | 9 | 5 | 1 | 7 | 2 | 0 | 6 | 0 | 0 | 11 | 0 | 0 | 1 | 7 | 1 | 25 |
| யாழ்ப்பாணம் | 8 | 38 | 0 | 0 | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 10 | 0 | 0 | 50 | 0 | 0 |
| நல்லூர் | 14 | 47 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 3 | 0 | 0 | 50 | 0 | 0 |
| சண்டிலிப்பாய் | 13 | 30 | 15 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 1 | 1 | 30 | 16 | 2 |
| சங்கானை | 9 | 12 | 0 | 27 | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 15 | 0 | 27 |
| உடுவில் | 13 | 35 | 0 | 0 | 5 | 0 | 0 | 2 | 0 | 0 | 5 | 0 | 0 | 47 | 0 | 0 |
| தெல்லிப்பழை | 7 | 16 | 2 | 24 | 1 | 0 | 0 | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | 18 | 2 | 25 |
| கோப்பாய் | 12 | 24 | 11 | 0 | 58 | 5 | 0 | 0 | 0 | 0 | 11 | 0 | 0 | 93 | 16 | 0 |
| சாவகச்சேரி | 27 | 72 | 9 | 0 | 106 | 0 | 0 | 0 | 0 | 0 | 3 | 0 | 0 | 181 | 9 | 0 |
| கரவெட்டி | 8 | 14 | 0 | 0 | 2 | 0 | 0 | 1 | 0 | 0 | 3 | 0 | 0 | 20 | 0 | 0 |
| பருத்தித்துறை | 8 | 49 | 0 | 9 | 34 | 0 | 0 | 0 | 0 | 0 | 3 | 0 | 0 | 86 | 0 | 9 |
| மருதங்கேணி | 13 | 24 | 2 | 0 | 71 | 0 | 5 | 3 | 0 | 1 | 6 | 0 | 0 | 104 | 2 | 6 |
| மொத்தம் | | 378 | 57 | 123 | 283 | 5 | 104 | 9 | 1 | 19 | 46 | 1 | 7 | 716 | 64 | 253 |

* இரா - இராணுவம் * பொ - பொலிஸ் * க.ப. - கடற்படை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## புதிய வீடியோ படங்கள் ஏற்படுத்தியுள்ள சிக்கல்

எதிர்பார்த்தது போலவே அண்மையில் அதாவது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ லண்டன் சென்றிருந்த சமயம் பார்த்து புதிதாக வெளியிடப்பட்டிருந்த போரின் இறுதிக் கட்ட இராணுவக் கொடுமைகள் பற்றிய செய்திகளும் வீடியோ மற்றும் புகைப்படங்களும் போலியானவை என்று வழமை போன்று இலங்கை அரசின் சார்பில் மறுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் பந்துல ஜயசேகர, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ லண்டனுக்கு பயணம் செய்திருந்த வேளையில் அவருக்கும் நாட்டுக்கும் அவப் பெயரை ஏற்படுத்தும் நோக்கில் இவை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

இறுதிக்கட்டப் போரின் போது படைத் தரப்பினர் தமிழ் மக்கள் மீது தாக்குதல் மேற்கொண்டதாகக் காட்டுவதற்கு விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களே இந்த வீடியோக்களையும் புகைப்படங்களையும் தயாரித்து வெளியிட்டிருக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டியுள்ள அவர், இந்த வகையிலான ஆவணங்களை வெளியிடுவதில் புலி ஆதரவாளர்கள் நிபுணத்துவம் பெற்றிருக்கிறார்கள் என்றும் சான்று வழங்கியிருக்கிறார்.

இலங்கை இராணுவத்தினர் போரின் இறுதிக் கட்டங்களில் மேற்கொண்டதான அட்டூழியச் செயல்கள் தொடர்பாக முன்னர் வெளியிடப்பட்டிருந்த சனல்-4 வீடியோ மற்றும் புகைப்படங்களையும் இவ்வாறு தான் இலங்கை அரசு மறுத்தொதுக்கியது.

ஆனால் சனல்-4 வீடியோ படங்களைத் தயாரித்து வெளியிட்டவர் புலிகளின் ஆதரவாளர் என்றும் அவரது மனைவியான இலங்கைப் பெண் ஊடகவியலாளர், முன்னாள் புலிகள் இயக்கத்தில் இருந்தவர் என்றும் கூறி இலங்கை அரசு அவைகளை நிராகரித்திருந்தது. அதே முறையில் போரின் இறுதிக்கட்டச் செயற்பாடுகளில் இலங்கை படையணிகள் போர்க்குற்றங்களையும், மனித இனத்துக்கு மாறான குற்றங்களையும் புரிந்திருக்கிறார்கள். இந்தக் குற்றங்கள் தொடர்பாக சர்வதேசம் ஏற்றுக் கொள்ளும் வகையில் நம்பகமான விசாரணைகளை நடத்தி, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டிக்க வேண்டும் என்று ஐ.நா.செயலாளர் நாயகம் பான்கிமூன் நியமித்த நிபுணர்குழு தனது அறிக்கையில் பரிந்துரைத்திருந்தது. பான் கீ மூனின் நிபுணர் குழு என்பதை தருஸ்மன் அறிக்கை என்று சிறுமைப்படுத்தியது மட்டுமல்ல அந்த அறிக்கையின் பரிந்துரைகளையும் அரசு ஓரம்கட்டி விட்டது. ஆனால் இறுதிகட்டப் போரில் இடம்பெற்றவைகளை நம்பகமான முறையில் விசாரித்து நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்ற கோரிக்கை இப்பொழுது முன்னரைவிட மிக அழுத்தமாகவே சர்வதேசமட்டத்தில் வலியுறுத்தப்படுகின்றது.

இந்த சூழ்நிலையில் தான் லண்டன் 'தி இன்டிபென்டன்ட்' பத்திரிகையில் இந்தப் புதிய வீடியோக்களும் நிழற்படங்களும் வெளியாகி அரசை திக்குமுக்காடச் செய்துள்ளன. இந்தப் புதிய படங்கள் உலகில் பல பாகங்களிலும் ஒளிபரப்பாகியுள்ளன. தொலைக்காட்சியில் இங்கேயும் மக்கள் பார்த்திருக்கிறார்கள். இளம் பெண்கள் கைகள் பின்பக்கமாகக் கட்டப்பட்டு வரிசையாக இராணுவ உடை தரித்தவர்களால் அழைத்துச் செல்லப்படுவதும் பின்னர் ஏராளமான இளம் பெண்களும் இளைஞர்களும் இறந்த நிலையில் பிறந்த மேனியாகக் கிடப்பதும் பார்ப்பவர்களை உணர்ச்சி கொள்ளச் செய்வதாய் இருந்தன. அநேகர் கண்கலங்கி கண்ணீர் விட்டார்கள். அழைத்துச் செல்லப்படும் போது அப்பெண்களில் சிலர் தமது சோகம் நிறைந்த முகங்களை 'கமரா' பக்கமாகத் திரும்பியபோது அவர்களின் உறவினர்கள் பார்த்திருந்தால் அடையாளம் கண்டிருக்க முடியும்.

புலிப்படை சீருடையணிந்த இளைஞர்கள் விலங்கிடப்பட்டு பஸ்களில் கொண்டு செல்லப்படுவதும் காட்டப்பட்டது. சிலரை அடையாளம் காணக்கூடியதாக தெளிவாக படம் எடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் அரசும், பேச்சாளரும் இவை புலிகளின் நிபுணத்துவமிக்க ஆதரவாளர்களினால் சோடித்து வேண்டுமென்றே ஜனாதிபதி லண்டன் சென்ற சமயத்தில் வெளியிடப்பட்டுள்ளன. அரசுக்கும் ஜனாதிபதிக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்துவதே இவர்களின் நோக்கம் என்றும் கூறி நிராகரித்துள்ளனர்.

ஐ.நா.நிபுணர்குழு அறிக்கையையே நிராகரித்துவிட்ட அரசு தனிப்பட்ட ஊடகங்கள் வெளியிடும் செய்திகளையும் ஒளிப்படங்களையும் தூக்கி எறிவது ஆச்சரியமில்லை. ஆனால் நாட்டில் புரையோடிக்கிடக்கும் இனப்பிரச்சினைக்கு முறையான ஒரு தீர்வை ஏற்படுத்தாமல் தொடர்ந்து இழுத்தடித்துக் கொண்டிருப்பதும் போரின் இறுதிக்கட்ட நிகழ்வுகள் குறித்து நம்பகமான சுயாதீன சர்வதேச விசாரணையொன்றுக்கு ஏற்பாடு செய்யாமலும் இருக்கும் வரை அரசுக்கு வெளிநாடுகளில் இருந்து இவ்வாறான சிக்கல்கள் வந்துகொண்டு தான் இருக்கு என்பதை அரசு இப்போதாவது உணர்வது அவசியம். சர்வதேசக் குரல்களை துச்சமாக ஒதுக்குவதும் தமிழர் பிரதேசங்களில் ஆக்கிரமிப்புக்களையும் அடாவடித்தனங்களையும் ஆசீர் வதித்துக் கொண்டிருப்பதும் நல்லாட்சியாளர்களுக்கு உகந்த செயலாகத் தோன்றவில்லை என்பதை மட்டும் இப்போது சொல்லிவைப்போம்.

# பின்தங்கிய பிரதேச ஆஸ்பத்திரிகளில் வைத்தியரை நியமிப்பதில் அசமந்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

உள்ளகப் பயிற்சியை முடித்து வெளியேறிய வைத்தியர்களைப் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்கு நியமிப்பதில் சுகாதார அமைச்சு அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்து வருகிறது.

இதனைக் கண்டித்து வடக்கு, கிழக்கு வைத்தியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவது தொடர்பாக இன்று கலந்துரையாடி முடிவெடுக்கப்படவுள்ளது.

சுகாதார அமைச்சு இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறின் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தவிர்க்க முடியாது என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரு வருட உள்ளகப் பயிற்சியை நிறைவு செய்த சுமார் 800 வைத்தியர்கள் உள்ளகப் பயிற்சியில் ஈடுபட்ட வைத்தியசாலைகளிலேயே தொடர்ந்தும் பணியாற்றுகின்றனர்.

அவர்களில் சுமார் 40 பேர் மட்டுமே சில வைத்தியசாலைகளில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பாக வடக்கு, கிழக்கில் பின்தங்கிய பிரதேசங்களில் சுமார் 150 இற்கும் மேற்பட்ட வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன. இன்னும் பல மூடப்பட வேண்டிய நிலையிலுள்ளன. பின் தங்கிய பிரதேசங்களிலுள்ள வைத்திய சாலைகளுக்கு வைத்தியர்கள் நியமிக்கப்படாமையால் இந்தப் பிரச்சினை தொடர்கிறது. இதனால் கிராமப் புறங்களில் உள்ள மக்களுக்குப் பூரண வைத்திய சேவையை வழங்க முடியாத நிலை உள்ளது.

**வடக்கு, கிழக்கில் பின்தங்கிய பிரதேசங்களில் சுமார் 150 இற்கும் மேற்பட்ட வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன. இன்னும் பல மூடப்பட வேண்டிய நிலையிலுள்ளன.**

பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலைக்குப் புதிதாக வைத்தியர்கள் நியமிக்கப்படாமையால் அங்கு நீண்டகாலம் பணியாற்றும் வைத்தியர்கள் இடமாற்றம் பெறமுடியாத நிலையும் காணப்படுகிறது.

உள்ளகப் பயிற்சி நிறைவு செய்து நான்கு மாதங்களாகின்ற நிலையிலும் அந்த வைத்தியர்கள் உரிய வைத்தியசாலைக்கு இதுவரை நியமிக்கப்படவில்லை.

சுகாதார அமைச்சு இந்த விடயத்தில் அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்து வருகிறது. இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

அதில் உரிய தீர்வு எட்டப்படாத விடத்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவது குறித்து தீர்மானிக்கப்படும். அதனை எங்கு, எப்போது நடத்துவது தொடர்பிலும் இன்று தீர்மானிக்கப்படும் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர். (ம-4)

# பச்சிலைப்பள்ளியில் சேதமுற்ற வீடுகள் எவையுமே திருத்தப்படவில்லை

பளை, ஜூன் 11

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மீளக்குடியமர்வு ஆரம்பிக்கப்பட்டு மூன்று வருடங்களாகியும் சேதமடைந்த வீடுகள் இன்னமும் திருத்திக் கொடுக்காதது குறித்து பிரதேச மக்கள் கவலை தெரிவித்தனர்.

பிரதேசத்தில் பல்வேறு நிறுவனங்களாலும் அரசினாலும் பல்வேறு வீடமைப்புத் திட்டங்கள் மூலம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படுகின்ற போதிலும் போர் இடர்களால் சேதமடைந்த வீடுகள் புனரமைப்பது தொடர்பாக எந்தவொரு முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

பிரதேசத்தில் 100 இற்கும் மேற்பட்ட சேதமடைந்த வீடுகள் இன்னமும் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

ஒரு சிலருக்கு சேதமடைந்த வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகள் வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தனர்.

சேதமடைந்த வீடுகள் தொடர்பான விவரங்கள் பளைப் பிரதேச செயலகத்தால் திரட்டப்பட்ட போதிலும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

வீடுகள் புனரமைத்து வழங்கப்படுமென பல குடும்பங்கள் இன்னமும் ஓலைக் கொட்டில்களில் வாழ்ந்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ம-9)

## காணிப் பயன்பாட்டு அலுவலர் சுற்றுலா

காணி அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் காணிப் பயன்பாட்டு திட்டமிடல் உத்தியோகத்தர்களுக்கு 'காணிப்பயன்பாட்டு கள ஆய்வு சுற்றுப் பயணம்'' 5 தினங்களுக்கு நடைபெறவுள்ளது. கண்டி, நுவரேலியா, மாத்தளை, ஹற்றன், அனுராதபுரம் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாக நடைபெறும் கள ஆய்வு சுற்றுப் பயணம் நாளை செவ்வாய்க்கிழமை முதல் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணத்துக்குவெளியேமேற்கொள்ளப்பட்டுவரும் காணிப் பயன்பாடுகள் மற்றும் அவற்றின் உச்ச வளப் பயன்பாடு என்பன தொடர்பான அவதானிப்புக்கள் மற்றும் அவற்றின் முன்னெடுப்புக்கள் என்பனவற்றை நேரடியாக அவதானித்து அவற்றை வடபகுதியில் பின்பற்றுவதற்கு ஏதுவாகஇந்தக்களஆய்வு சுற்றுப் பயணம் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

காணி உச்சப் பயன்பாட்டு கள ஆய்வுச் சுற்றுப்பயணத்தில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பிரதேச செயலக ரீதியில் பணியாற்றும் 25 காணிப் பயன்பாட்டு திட்டமிடல் உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர் என்று கூறப்பட்டது. (ம-11)

## முகமாலையில் மீளக்குடியமர்வு ஆராயும் கூட்டம் நாளை

வலி.தென்மேற்கு, ஜூன் 11

முகமாலைப் பகுதியில் போர் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளார்கள்.

இது சம்பந்தமாக ஆராயும் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பளை உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது. முகமாலைப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்காக அங்கு புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள் அகற்றும் பணி துரிதமாக இடம்பெற்று வருகின்றன. கண்ணிவெடி அகற்றப்பட்ட முகமாலை வடமேற்கு பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களைச் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதைத் தொடர்ந்து இந்தப் பிரதேசத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது சம்பந்தமாக ஆராயும் கூட்டம் நாளை பளை உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

உதவி அரச அதிபர் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் பாதுகாப்புப் படை உயரதிகாரிகள், கண்ணிவெடி அகற்றும் நிறுவன அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-115)

# மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு சேவாலங்கா வாழ்வாதார உதவி

வலி.தென்மேற்கு, ஜூன் 11

பளை பிரதேசத்தில் மீளக் குடியமர்த்தப்பட்ட மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை வளம்படுத்த முன்வந்துள்ள 'சேவாலங்கா' நிறுவனம் 45 பயனாளிகளுக்கு 17 லட்சம் ரூபா பெறுமதியான மீன் பிடி உபகரணங்களை வழங்கியுள்ளது.

பளை பிரதேசத்தில் அத்திநகர் கிராமத்தில் மீளக்குடியமர்த்தப்பட்ட 45 மீனவக் குடும்பங்கள் தொழிலில் ஈடுபடுவதற்கு உபகரணங்கள் இன்றி வாழ்க்கை நடத்த முடியாமல் திண்டாடின.

இவர்களின் நிலை குறித்து கடற்றொழிலாளர் சங்கம், பொது நிறுவனங்களின் கவனத்துக்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து இவர்களின் வாழ்வாதாரத்துக்கு சேவாலங்கா நிறுவனம் உதவ முன்வந்தது.

தெரிவு செய்யப்பட்ட 45 பயனாளிகளுக்கு ஏழு மீன்பிடி வள்ளங்கள் உட்பட 17 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களை முதற்கட்டமாக வழங்கியுள்ளது.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைப் பிரதிப் பணிப்பாளர், கிளிநொச்சி அரச அதிபர், கடற்றொழில் பரிசோதகர்கள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள், கிராம உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ம-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மையினருக்கு அனுமதி ஆனால் தமிழ் மக்களுக்குத் தடை

## முல்லைத்தீவில் இராணுவம் பாரபட்சம்

முள்ளியவளை, ஜூன் 11

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சில முக்கிய இடங்களுக்குத் தமிழ் மக்கள் செல்வதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வெள்ளாமுள்ளி வாய்க்கால் பகுதியில் விடுதலைப் புலிகளால் அரிசி ஏற்றி வரப்பட்ட போது கரையொதுங்கிய 100 மீற்றர் நீளமான கப்பல் ஒன்று காணப்படுகிறது.

வன்னிப் பகுதிகளுக்கு வருகை தரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மக்கள் இதனைப் பார்ப்பதற்கு முண்டியடிப்பதை காண முடிகின்றது.

ஆனால் தமிழ் மக்கள் இதனைப் பார்வையிடச் செல்வதை ஏனோ இராணுவத்தினர் அனுமதிப்பதில்லை. முஸ்லிம் மக்கள் கூட இதனைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படும் நிலையில் தமிழ் மக்களை இராணுவத்தினர் தடுத்து நிறுத்துகின்றமை ஏன் என்று தெரியவில்லை. இதில் என்ன பாரபட்சம் என்று கேட்கின்றனர் தமிழ் மக்கள்.

**முஸ்லிம் மக்கள் கூட இதனைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படும் நிலையில் தமிழ் மக்களை இராணுவத்தினர் தடுத்து நிறுத்துகின்றமை ஏன் என்று தெரியவில்லை.**

மேலும் இந்தக் கப்பலை பார்வையிடச் செல்லும் பெரும்பான்மையின மக்கள் கப்பலின் அருகில் சென்று சிறிதளவு மணலையும் தம்முடன் எடுத்துச் செல்வதை அவதானிக்க முடிந்தது.

இவ்வாறு மண் எடுக்கும் நிகழ்வுகள் புலிகளின் முக்கிய இடங்களில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-433)

## கிளிநொச்சியிலிருந்து இடம்பெயர்ந்து சிதம்பரபுரத்தில் வசிப்போருக்கு யூனியன் குளத்தில் காணிகள்

அக்கராயன், ஜூன் 11

கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா சிதம்பரபுரத்தில் வசித்து வரும் குடும்பங்களுக்கு யூனியன்குளம் பகுதியில் காணிகளை வழங்க முடியும் எனத் தெரிவித்தார் கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன்.

கிளிநொச்சியிலிருந்து இடம்பெயர்ந்த சுமார் 168 குடும்பங்கள் வவுனியா சிதம்பரபுரம் பகுதியிலிருந்து கிளிநொச்சி வருவதற்குக் காத்திருக்கின்றன. இந்தக் குடும்பங்களுக்கு கிளிநொச்சியில் காணி எதுவுமில்லை. புதிய காணிகளை வழங்குவதும் இடைநிறுத்தப்பட்டுள்ளது. ஆயினும் யூனியன்குளம் பகுதியில் இவர்களுக்குக் காணிகளை வழங்க முடியும்.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 21 ஆயிரத்து 783 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பரவிப்பாஞ்சான் பகுதியில் வசித்து வந்த குடும்பங்கள் இன்னும் மீளக்குடியமராத நிலையில் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)



உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசில் நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், பாடசாலை அதிபர் திருமதி இ.மீனலோஜினி மற்றும் விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுகின்றனர். (6)

## முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு சட்ட மருத்துவ அதிகாரி நியமனம்

முள்ளியவளை, ஜூன் 11

நெடுங்காலமாக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சட்ட மருத்துவ அதிகாரி இல்லாத குறை தற்போது நீங்கியுள்ளது.

கடந்த வாரம் தொடக்கம் மருத்துவர் எம்.எம்.எஸ். சேனதுங்க என்பவர் இந்த வைத்தியசாலையின் சட்ட மருத்துவ அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை மாஞ்சோலையில் இயங்கி வருகின்றது. நீண்டகாலமாக இந்த வைத்தியசாலையில் சட்ட மருத்துவ அதிகாரி நியமிக்கப்படாமையால் வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைகள் இடம்பெறவில்லை. சடலங்கள் பிரேத பரிசோதனைகளுக்கென வவுனியா, அநுராதபுரம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இதனால் இறந்தவர்களின் உறவினர்கள் பெரும் பணத்தைச் செலவிடுவதுடன் அலைந்து திரிகின்ற அவல நிலையும் காணப்பட்டது.

தற்போது மாஞ்சோலையில் இயங்கிவரும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு சட்ட மருத்துவ அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளதால் பிரேத பரிசோதனைகள் இங்கேயே இடம்பெற்றுச் சடலங்கள் உறவினர்களிடம் தாமதமின்றி ஒப்படைக்கப்படுகின்றன.

ஆனால் இறந்த உடல்களைப் பாதுகாக்கக் கூடிய குளிரூட்டி வசதிகளுடனான பிரேத அறைகள் அமைக்கப்படாததால் சட்ட மருத்துவ அதிகாரியின் பணிகளுக்குப் பெரும் தடையேற்பட்டுள்ளது.

இந்தக் குறையும் விரைவில் நீங்குமாயின் பிரேத பரிசோதனைகள் உரிய முறையிலும், விரைவாகவும் நடைபெறும் வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (க-433)

## வவுனியா 'சோஆ' நிறுவனத்தால் அபிவிருத்தித் திட்டப் பணிகள்

வவுனியா, ஜூன் 11

நலன்புரி முகாம் மக்களின் நலன்கருதி வவுனியா 'சோ ஆ' நிறுவனம் பல்வேறு அபிவிருத்தித் திட்டப் பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

மெனிக்பாம் நலன்புரி முகாமிலுள்ள மக்களுக்கான குடிதண்ணீர் வசதி மற்றும் மாணவர்களுக்கான கற்றல் உதவிகள் என்பனவற்றை இந்த நிறுவனம் வழங்கி வருகின்றது.

இதனடிப்படையில் ஆனந்தகுமாரசாமி நலன்புரி முகாமுக்குத் தினமும் குடிதண்ணீர் விநியோகத்தை வழங்கி வருவதுடன் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் அபிவிருத்தி நடவடிக்கையின் கீழ் தரம் 5, தரம் 10, தரம் 11 மாணவர்களுக்கான மாலை நேர வகுப்புகளையும் நடத்தி வருகின்றது.

அதேபோல கதிர்காமர் நலன்புரிப் பாடசாலை மாணவர்களுக்கான மாலை நேர வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

இவ்விரு முகாம்களிலுமுள்ள முன்பள்ளிகளைச் சீர் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் தேவையான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை தரம் 10,11 ஆகியவற்றுக்கு சனி, ஞாயிறு தினங்களில் விசேட செயலமர்வு நடத்தப்படுகிறது.

கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், வரலாறு ஆகிய முக்கிய பாடங்களுக்குத் துறைசார் வல்லுநர்கள் மூலமாகச் செயலமர்வுகள் நடத்தப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-400)

## வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் உயர்தர வகுப்புகளை ஆரம்பிக்குக

அக்கராயன், ஜூன் 11

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தில் உயர்தர வகுப்புகளை ஆரம்பிக்குமாறு பெற்றோர்கள் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

**10 பாடசாலைகளில் வன்னேரிக்குளம் மகா வித்தியாலயமும் ஒன்றாகும்**

1953 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வன்னேரிக்குளம் குடியேற்றத் திட்டத்தின் வளர்ச்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக இந்தப் பாடசாலை விளங்கி வருகின்றது. இந்தப் பாடசாலையில் உயர்தர வகுப்புகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக நிறைவேற்றபடாமல் உள்ளது.

வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தில் உயர்தர வகுப்புகள் இல்லாமையால் அக்கராயன் மகாவித்தியாலயம் போன்ற பிற பாடசாலைகளுக்கு உயர்தர வகுப்புக்களை நாடி மாணவர்கள் செல்ல வேண்டிய அவலம் நீண்டகாலமாகக் காணப்படுகிறது.

கிளிநொச்சி கல்வி வலயத்தில் நீண்ட வரலாற்றைக் கொண்ட 10 பாடசாலைகளில் வன்னேரிக்குளம் மகா வித்தியாலயமும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (க-18)

# அதிபர்களின் சட்டவிரோத செயற்பாடுகளை ஊக்கும் நடவடிக்கையில் உயர் அதிகாரிகள்

## இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம்

வவுனியா, ஜூன் 11

பாடசாலை அதிபர்கள் சிலரது சட்டவிரோத செயற்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் உயரதிகாரிகள் செயற்பட்டுள்ளதுடன், அவர்களை ஊக்குவித்துமுள்ளனர். இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

வவுனியா முருகனூர் சாரதா வித்தியாலய அதிபர் பாடசாலையில் வைத்துத் தாக்கப்பட்டமையைக் கண்டித்து கடந்த புதன்கிழமை வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தை அடுத்து, வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கையளித்த மனுவில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட பாடசாலையில் ஆரம்பப்பிரிவு நிறுத்தப்பட்டிருந்தும் வவுனியா கோமரசங்குளம் பாடசாலையில் தன்னிச்சையான முறையில் தரம் ஒன்றுக்கான வகுப்பு இயங்கி வருகின்றது. இது தொடர்பாக அறிவித்த போதிலும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

2009 ஜூலை 30 ஆம் திகதி வவுனியா தெற்கு வலயத்தில் அப்போது இருந்த கல்விப் பணிப்பாளரால் மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் நிதி மோசடி, மாணவர் இடைவிலகல் அதிகரித்தமை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணையை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. அப்போது மாகாணக் கல்விப் பணிப்பாளராக இருந்தவர், வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளராக இருந்தவரிடம் அது பற்றி அறிவித்து விசாரணை [illegible] ஆனால் விசாரணை எதுவும் இடம்பெறவில்லை.

மேலும் மாணவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுப் பொதுப் பரீட்சைக்கு மாணவர்களைத் தோற்ற அனுமதிக்காமை தொடர்பாகவும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

வவுனியா வலயக் கல்வித் திணைக்களத்தின் விளம்பரப் பலகையில் பாடசாலை அதிபர் ஒருவரைப் பற்றிச் சட்டவிரோதமான முறையில் [illegible] ஒட்டி[illegible] தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

வவுனியா பெரியகோமரசன்குளம் அதிபரால் மேற்கொள்ளப்பட்ட மோசடி, சட்டவிரோத நடவடிக்கை தொடர்பாக இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக சட்ட திட்டங்களை மீறிச் செயற்பட்டமை தொடர்பாக கல்வி உயர் அதிகாரிகளுக்கும், வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் அறிவித்த போதிலும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இதே பாடசாலையில் கற்ற மாணவர்கள் 10 பேர் தற்காலிகமாகவும் நிரந்தரமாகவும் இடைநிறுத்தப்பட்டுள்ளனர். இப்பாடசாலை அதிபர் அழைத்துச் சென்ற 17 மாணவர்களால் முருகனூர் சாரதா வித்தியாலய அதிபர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

பெரிய கோமரசன் குளம் பாடசாலை அதிபருக்கு 2009 ஜூலை 30 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் கட்டாய லீவு பரிந்துரைக்கப்பட்டது. அது இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

எனவே இந்தவிடயங்கள் தொடர்பாக உரிய விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்மராட்சியில் புகைத்தல் ஒழிப்பு விழிப்புணர்வு ஸ்ரிக்கர்

தென்மராட்சி, ஜூன் 11
சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பல இடங்களில் புகைத்தலிலிருந்து விடுபட்ட பிரதேசம் என்ற ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டுள்ளன.

உலக புகைத்தல் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு இந்த ஸ்ரிக்கர்கள் சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்களால் ஒட்டப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாகச் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள் தெரிவித்ததாவது:-

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் பணிமனையின் மாவட்ட புகையிலை கட்டுப்பாட்டுப் பிரிவால் உலக புகைத்தல் எதிர்ப்பு வாரத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட ஸ்ரிக்கர்கள், புகையிலைப் பொருள்கள் விற்பனை செய்யப்படாத வர்த்தக நிலையங்கள், உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் ஆலயங்கள், பாடசாலைகள் போன்ற இடங்களில் ஒட்டப்பட்டு வருகின்றன என்று கூறினர்.

## கரவெட்டி மாலைநேர சந்தை புனரமைப்புப் பணி நிறுத்தம்

வடமராட்சி, ஜூன் 11
கரவெட்டி, கோவிற் சந்தையில் உள்ள நீண்ட காலப் பழைமை வாய்ந்த மாலை நேரச் சந்தையைப் புனரமைக்கும் பணியைக் கரவெட்டி, வடமராட்சி, தெற்கு மேற்குப் பிரதேச சபை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

நெல்சிப் திட்டத்தின் கீழ் இந்தச் சந்தையைப் புனரமைப்பதற்குப் பிரதேச சபை ஏற்கனவே தீர்மானித்திருந்தது.

பின்னர் இந்தத் தீர்மானத்தை இரத்துச் செய்து மாலைநேரச் சந்தையை இப்போதைக்குப் புனரமைப்பதில்லை என முடிவு எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-8)

## மூக்குக் கண்ணாடி விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 11
கோப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்து பார்வை குறைபாடு உடையோருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

சமூக சேவைகள் அமைச்சால் நடத்தப்பட்ட விசேட தேவையுடையோருக்கான திட்டத்தின் கீழ் இந்த மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

கோப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்துப் பார்வை குறைபாடு உடையோருக்கான கண்கள் பரிசோதிக்கப்பட்டுக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-17)



குரும்ப சிட்டியில் மக்கள் மீள் குடியமர்வு இடம்பெற்ற நிலையில் மீண்டும் தனியார் கட்டடத்தில் உப அஞ்சல் அலுவலகம் செயற்பட ஆரம்பித்துள்ளது. அஞ்சல் அலுவலகத்தை அஞ்சல் அத்தியட்சகர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார். (ம)

# ரூபா 240 லட்சம் செலவில் நான்கு வீதிகள் புனரமைப்பு

### நெல்சிப் திட்டத்தில் பளையில் பணிகள்

வலி.தென்மேற்கு, ஜூன் 11
பளைப் பிரதேசத்தில் நெல்சிப் திட்டத்தின் கீழ் 240 லட்சம் ரூபா செலவில் நான்கு வீதிகள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன என்று பிரதேச சபைத் தலைவர் டொமினிக் அன்ரன் தெரிவித்துள்ளார். நிதி கிடைத்ததும் சேதமடைந்த நிலையிலுள்ள மேலும் பல வீதிகளும் திருத்தி அமைக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட போர்க் காலச் சூழ்நிலையைத் தொடர்ந்து பளை பிரதேசத்திலுள்ள பல வீதிகள் போக்குவரத்துச் செய்ய முடியாதவாறு சேதமடைந்துள்ளன.

**இந்தப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தற்போது தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த் தப்பட்டு வருகின்றனர்.**

இந்தப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தற்போது தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். மக்களின் நலன்கருதி சேதத்துக்குள்ளான வீதிகளைத் திருத்த வேண்டிய நிலை பிரதேச சபைக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் முதற்கட்டமாக நெல்சிப் திட்டத்தின் கீழ் நான்கு முக்கியமான வீதிகள் 240 லட்சம் ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

மாசார் பாடசாலை வீதி, முகமாலை பிரதான வீதி, முள்ளியடி புலோப்பளை கிழக்கு வீதி, புலோப்பளை மேற்கு அலம்பில் வீதி ஆகிய நான்கு வீதிகளுமே பெரும் தொகையான பணச் செலவில் தற்போது திருத்தியமைக்கப்பட்டுள்ளன. இதேபோல் ஏனைய வீதிகளும் திருத்தியமைக்கப்பட இருக்கின்றன என்று பிரதேச சபைத் தலைவர் தெரிவித்துள்ளார். (ம-115)

## இலவச மின் இணைப்பு புனிதநகருக்கு இல்லையா?

### அப்பகுதி மக்கள் கேள்வி

வடமராட்சி, ஜூன் 11
கற்கோவளம் புனிதநகர் ஆழிப் பேரலை இடர் வீட்டுத் திட்டத்துக்கான இலவச மின் இணைப்பு வேலைகள் தாமதமடைந்துள்ளன.

இதனால் வீட்டுத் திட்டத்தைப் பெற்ற குடியிருப்பாளர்கள் பெரிதும் விசனம் அடைந்துள்ளனர்.

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாத பிற்பகுதியில் ஏற்பட்ட ஆழிப்பேரலை இடரால் வீடுகளை இழந்தோருக்குப் பல்வேறு நிறுவனங்களின் உதவியுடன் வீட்டுத் திட்டங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

இந்த வீட்டுத் திட்டங்களுக்கு இலவசமாக மின்சார இணைப்புத் தரப்படும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்திருந்தது.

அந்த மின் இணைப்புக்கென ஒரு சிறு தொகை அதாவது ஒரு வீட்டுக்கு 900 ரூபா மட்டுமே அறவிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய புனிதநகர் வீட்டுத் திட்டத்தைச் சேர்ந்த 19 குடியிருப்பாளர்கள் இந்தச் சிறுதொகை பணத்துடன் மின் இணைப்புப் பெறுவதற்கான விண்ணப்பத்தையும் இலங்கை மின்சார சபையிடம் சமர்ப்பித்திருந்தனர்.

இவ்வாறான நிலையில் இனிமேல் இலவச மின் இணைப்பு வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டது.

இலவச மின் இணைப்புக்காக சிறு தொகைப் பணத்தைச் செலுத்தி விண்ணப்பித்த 19 வீட்டுத் திட்டக் குடியிருப்பாளர் ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கமைய தமக்கு இலவச மின் இணைப்பு வழங்க வேண்டும் என பல தரப்பட்டவர்களுக்கும் கோரிக்கைகளை விடுத்துவந்தனர்.

இறுதியில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இந்த மின் இணைப்பை ஏற்படுத்தித் தருவதாக உறுதியளிக்கப்பட்டு இணைப்பை மேற்கொள்வதற்காக தூரத்தை அளந்து கணக்கிடும் பணி மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இது இடம்பெற்றுப் பல மாதங்கள் கழியும் நிலையிலும் இதற்கான நடவடிக்கைகள் எவையும் இல்லை என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது. (ம-8)

## பெருங்குள வீதி அபிவிருத்திக்கு கடற்படை உதவ வேண்டும்

யாழ்ப்பாணம், ஜூன் 11
நயினாதீவு பெருங்குள வீதி அபிவிருத்திக்குக் கடற்படையின் வடக்கு பிரதேச அதிகாரி உதவ முன்வர வேண்டும்.

'நெல்சிப்' அபிவிருத்தித் திட்டத்தில் பெருங்குள வீதி எதிர்வரும் ஓகஸ்ட் 10 ஆம் திகதிக்கு முன்னர் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும்.

இந்தத்திட்டத்தைவிரைவு படுத்தவும் அபிவிருத்தியைத் துரிதப்படுத்தவும் வீதி அபிவிருத்திக்கான கல், மண் மற்றும் பொருள்களை நகர்த்த தினமும் இரவு 8 மணி வரை அனுமதிக்க வேண்டும்.

இந்த நிலையில் இதற்கு உதவுமாறு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், காங்கேசன்துறை வடக்கு கடற்படை அதிகாரியை கடிதம் மூலம் கோரியுள்ளார்.

எதிர்வரும் 19 ஆம் திகதி நயினாதீவு நாகபூஷணி ஆலயத் திருவிழா ஆரம்பமாகவுள்ளதால் குறிகாட்டுவானில் இருந்து நயினாதீவு வரைக்கான சேவைக்கு இடமளிப்பதுடன் இரவு 8 மணி வரை படகு சேவையை அனுமதித்து திட்டம் துரிதமாக இடம்பெற உதவுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ம-41)

## உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஐந்து பேருக்கு வீட்டுத் திட்ட உதவி

### அங்கவீனர் திட்டத்தில் தெரிவு

வலி.வடக்கு, ஜூன் 11
சமூக சேவைகள் அமைச்சின் அங்கவீனர்களுக்கான ஆயிரம் வீட்டுத் திட்டத்தின் கீழ் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஐந்து பேர்களுக்கு வீட்டுத்திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இரண்டரை லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த வீட்டுத்திட்டத்துக்கான பணக் கொடுப்பனவு கட்டம் கட்டமாக வழங்கப்படவுள்ளது.

முதல் கட்டமாக 50 ஆயிரம் ரூபாவும் தொடர்ந்து கட்டடப் பணிகள் முடிவடைய முன்னேற்றத்தைப் பொறுத்து மிகுதிப் பணக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளன என்று கூறப்பட்டது.

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் அங்கவீனர்களுக்கான உதவியைப் பெறுவதற்கு பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

கே.ஜெயக்குமார்- கர்த்தர் கோவில் வீதி, உடுவில் தெற்கு, மானிப்பாய், எம்.ஜெகதீஸ்வரன்- அம்பாள் றோட், மல்வம், உடுவில், கே.சோதிராஜா- உடுவில் தெற்கு, சுன்னாகம், ரி.பன்னீர்செல்வம்- மயான வீதி, மல்வம் உடுவில், எ.சாந்தி- புளியடி வைரவர் கோயில் வீதி, உடுவில்.

சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவினால் இந்த வீட்டுத் திட்டம் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஆரம்பித்து வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம-86)

## நெல்லியடி - யாழ்ப்பாண சேவை இடை நிறுத்தப்பட்டதால் சிரமம்

வடமராட்சி, ஜூன் 11
நெல்லியடியிலிருந்து யாழ்ப்பாணத்துக்குத் தினமும் காலையில் இடம்பெறும் மினிபஸ்சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதால் பயணிகள் பெரும் சிரமங்களையும் அசௌகரியங்களையும் எதிர்கொண்டுள்ளனர்.

தினமும் காலைவேளைகளில் ஏற்பட்டுள்ள பயணிகளின் நெருக்கத்தால் நெல்லியடி மத்திய பஸ் நிலையத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் பயணிக்கும் பயணிகளுக்கு பருத்தித்துறையிலிருந்து வந்து நெல்லியடி மத்திய பஸ் நிலையத்தில் தரித்து யாழ்ப்பாணம் செல்லும் பஸ்களில் இடம் கிடைப்பதில்லை. இந்த நிலையில் பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் பயணிக்க வேண்டிய நிலைமை உள்ளது.

**காலை 6.50 மணிக்கு நெல்லியடி மத்திய பஸ் நிலையத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு தனியார் பஸ் சேவை இடம்பெற்றுவந்தது**

இதனைக் கருத்தில் கொண்டு தினமும் காலை 6.50 மணிக்கு நெல்லியடி மத்திய பஸ் நிலையத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு தனியார் பஸ் சேவை ஒன்றை வடமராட்சி சிற்றூர்திச் சேவை சங்கம் நடத்தி வந்தது.

இந்தச்சேவையால் நெல்லியடி மத்திய பஸ் நிலையத்துக்கு வரும் பயணிகள் அசௌகரியமாக பயணத்தை மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது.

ஆனால் இந்தச் சேவையை கடந்த இரு வாரங்களுக்கு முன்பிருந்து வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கம் இடைநிறுத்திவிட்டது.

இதனால் கரவெட்டி, அல்வாய், கரணவாய் பகுதிகளைச் சேர்ந்த பயணிகள் நெல்லியடி மத்திய பஸ் நிலையத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பயணத்தை மேற்கொள்வது பெரும் சிரமமாக உள்ளது.

இடை நிறுத்தப்பட்டுள்ள இந்தச் சேவையை தினமும் 6.45 மணிக்கும் 7.45 மணிக்கும் இடையில் பொருத்தமான நேரத்தில் மீண்டும் ஆரம்பித்து நெல்லியடியிலிருந்து பயணிக்கும் பயணிகளின் சிரமங்களையும் அசௌகரியங்களையும் போக்க வேண்டும் என்று வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கத்திடம் பயணிகள் சார்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெசோ அமைப்பின் செயற்பாட்டால் ஈழத்தமிழருக்குப் பயனில்லை



## சாடுகிறார் நெடுமாறன்

சென்னை, ஜூன்11

டெசோ அமைப்பின் உருவாக்கமும் செயற்பாடும் இலங்கைத் தமிழர்களுக்கோ, தமிழகத் தமிழர்களுக்கோ எந்தவித பயனும் அளிக்காது. கருணாநிதி டெசோ அமைப்பை மீண்டும் உருவாக்கி இருப்பது மத்திய அரசை மிரட்டுவதற்குதான். என்று உலகத் தமிழர் பேரமைப்பு தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்தார்.

மயிலாடுதுறை ஏ.வி.சி. கல்லூரியில் வரலாற்றுத் துறை பேராசிரியர் ஜெயராமனுக்கு வரலாற்றுத் துறை முன்னாள் மாணவர்கள் சார்பில் பணி நிறைவு பாராட்டு விழா நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினராக பழ. நெடுமாறன் கலந்து கொண்டு பேராசிரியர் ஜெயராமனை பாராட்டிப் பேசினார்.

அதனைத்தொடர்ந்து அவர் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார். அதன்போது அவர் தெரிவித்ததாவது:-

இலங்கையில் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டதற்கு முழுமையான காரணம் மத்திய அரசு தான். தொன்று தொட்டு இலங்கைக்கு ஆயுதம் அளித்து பயிற்சி அளிப்பது தமிழர்களைக் கொன்று குவிக்கதான் என்று மத்திய அரசுக்கு நன்றாகத் தெரியும்.

கருணாநிதி டெசோ அமைப்பை மீண்டும் உருவாக்கி இருப்பது மத்திய அரசை மிரட்டுவதகாகவே. இதன் உருவாக்கமும், செயற்பாடும் இலங்கை தமிழர்களுக்கோ, தமிழக தமிழர்களுக்கோ எந்த பயனும் அளிக்காது-என்றார். (வ)

# புதுக்கோட்டை தேர்தல் பரப்புரையில் கருணாநிதியை கேலி செய்த ஜெ.



புதுக்கோட்டை இடைத் தேர்தல் பரப்புரையில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா, தி.மு.க. தலைவர் கருணாநிதியை கேலியாகப் பேசியுள்ளார்.

கடந்த தி.மு.க. ஆட்சியில் கொடிகட்டிப்பறந்த நில அபகரிப்புகள் அடக்கி வைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் சட்டத்தின் மாண்பு நிலை நிறுத்தப்பட்டுள்ளது என்றார் ஜெயலலிதா.

இடைத்தேர்தலை எதிர்கொள்ள முடியாமல் கருணாநிதி நடையைக் கட்டிவிட்டார். ஆட்சிக்கு வந்தது முதல் மின்சாரத் திட்டங்கள் விரைவுபடுத்தப்பட்டன.

இதன்மூலம் மின் உற்பத்தி செயற்பாட்டுக்கு வரவிருக்கிறது. கூடங்குளம் அணுமின் பணிகளும் விரைவில் மின் உற்பத்தி ஆரம்பிக்கப்படும். விரைவில் தமிழ்நாடு மின்வெட்டு இல்லாத மாநிலமாக மாறும்.

இந்தத் தேர்தலில் அனைத்து வேட்பாளர்களையும் கட்டுப்பணம் இழக்கச் செய்து, அ.தி.மு.க. வேட்பாளர் கார்த்திக் தொண்டமானை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று பிரசாரத்தின் போது குறிப்பிட்டார் ஜெயலலிதா. (வ)

# காஷ்மீரில் மண் சரிவு 400 பேர் மீட்பு

காஷ்மீரில் லே - நப்ரா வீதியில், கர்துங்கலா என்ற இடத்தில், பல இடங்களில் மண் சரிவுகள் ஏற்பட்டதால், பெண்கள், குழந்தைகள் உட்பட 400 பேர் சிக்கிக் கொண்டனர். அவர்களை பொலிஸாரும், இராணுவத்தினரும் மீட்டனர்.

காஷ்மீர் மாநிலம் லடாக் அருகேயுள்ளது லே - நப்ரா வீதி. உலகிலேயே மிக உயரமான பகுதியில் அமைந்துள்ள, வாகனங்கள் செல்லும் அழகிய மலைப் பாதை இது. இந்தப் பாதையில் வாகனங்களைச் செலுத்துவதற்கு சாரதிகள் பலரும் விரும்புவர். மேலும், சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவரும் மலைப் பாதையாகவும் உள்ளது.

இந்த வீதியில், கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு, கர்துங் என்ற இடத்தில், 10 கிலோ மீற்றர், தூரத்துக்கு ஆங்காங்கே பல இடங்களில் மண் சரிவு ஏற்பட்டது. இதனால், 150 இற்கும் மேற்பட்ட வாகனங்களில் சென்ற பெண்கள், குழந்தைகள் உட்பட பலரும் சிக்கிக்கொண்டனர்.

# சத்தார் நகரில் பயங்கர தீ விபத்து



டில்லியில் மக்கள் அதிகமாகக் கூடும் சத்தார் பஜாரில் நேற்று முன்தினம் அதிகாலை தீ விபத்து ஏற்பட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

சத்தார் நகரில் உள்ள வணிக வளாகத்திலேயே தீ விபத்து ஏற்பட்டது.

தகவல் அறிந்து 20இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்கள் விரைந்து வந்து தீயை அணைக்கப் போராடின.

இந்தத் தீ விபத்தில் பலகோடி ரூபா பெறுமதியான பொருள்கள் மற்றும் உடைமைகள் எரிந்து அழிந்து நாசமாகிவிட்டன. (வ)

# நித்தியானந்தா ஆச்சிரமத்தை விரைவில் கையகப்படுத்துவோம்

## கர்நாடக அரசு அறிவிப்பு

பெங்களூர், ஜூன்11

நித்தியானந்தாவின் பிடதி ஆச்சிரமத்தில் விரும்பத்தகாத செயல்கள் இடம் பெற்று வருகின்றன. அவரது ஆச்சிரமத்தை அரசே ஏற்க வேண்டும் என்று பொதுமக்கள் தரப்பில் கோரிக்கைகள் வந்துள்ளன. எனவே ஆச்சிரமத்தை அரசு தனது பொறுப்பில் ஏற்றுகொள்வது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கர்நாடக சட்ட அமைச்சர் சுரேஷ் குமார் தெரிவித்தார்.

இதுகுறித்து சுரேஷ் குமார் தார்வாடில் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

ஆட்சேபனைக்குரிய, விரும்பத்தகாத செயல்கள் நித்தியானந்தா ஆச்சிரமத்தில் நடைபெற்று வருகின்றன. இது கவலையளிக்கிறது. எனவே ஆச்சிரமத்தை அரசே கையகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது. இதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

இதுதொடர்பான முடிவை முதல்வர் சானந்த கௌடாவும், உள்துறை அமைச்சர் அசோக்கும் மேற்கொள்வார்கள். ஆச்சிரமத்தைக் கைப்பற்றி அங்கு அரசு சார்பில் நிர்வாகியை நியமிக்க கர்நாடக அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிகிறது- என்றார். (வ)

# போட்டியின்றி எம்.பியானார் டிம்பிள்



உத்தரப்பிரதேசத்தின் கன்னோஜ் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக அந்த மாநில முதல்வர் அகிலேஷின் மனைவி டிம்பிள் தெரிவு செய்யப்பட்டுள்ளார். முதல்வராகப் பதவியேற்றதால் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அகிலேஷ் ராஜினாமாச் செய்ததை அடுத்து, டிம்பிள் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டது.

டிம்பிளை எதிர்த்து எந்த முன்னணிக் கட்சியும் போட்டியிடாத நிலையில் இரு சுயேச்சைகள் மட்டும் வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தனர். அவர்களும் நேற்று முன்தினம் வாபஸ் பெற்றதைஅடுத்து டிம்பிள்போட்டியின்றித் தெரிவு செய்யப்படுவதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

# பிரதமரை விசாரிக்க விசேட குழு ஏதும் நியமிக்க முடியாது: அரசு

## ஹசாரே எளிமையானவர்; சுற்றியுள்ளோர் தேச விரோதிகள்

பிரதமர் மற்றும் மத்திய அமைச்சரவையில் உள்ளவர்கள் மீது முன்வைக்கப்பட்டுள்ள நிலக்கரிச் சுரங்க ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு ஹசாரே குழுவினர் பரிந்துரைத்ததன்படி விசேட குழுவினர் எவரையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்தவிடயம் தொடர்பில் பிரதமருக்கு அன்னா ஹசாரே எழுதிய கடிதத்துக்கு பதில் அளிக்கையிலேயே பிரதமர் அலுவலகம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

'பிரதமர் மீது நீங்கள் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு இன்னமும் ஒரு ஆதாரம் சாட்சிப்படுத்தவில்லை. மேலும், இது குறித்து விசாரணை மேற்கொள்ள தற்போதுள்ள சட்டவரைபுக்கு உட்பட்ட அரசியல் அமைப்பு முறையே போதுமானது. ஆதலால் உங்களது கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது' என்று கூறியுள்ளது என பிரதமர் அலுவலகம் சார்பில் மத்திய அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

பிரதமர் மற்றும் 15 அமைச்சர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களை மூன்று ஓய்வுபெற்ற நீதிபதிகளைக் கொண்டு அமைக்கப்பட்ட குழுவினர் மூலம் சுதந்திரமான முறையில் நடத்தப்பட வேண்டும் என அன்னா ஹசாரே முன்னர் கோரியிருந்தார்.

இதேவேளை அன்னா ஹசாரே குழுவினரை தேச விரோதிகள் எனக் கூறப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என பா.ஜ.க. தலைவர் நிதின் கட்காரி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சென்னைக்குச் சென்ற மத்திய அமைச்சர் நாராயணசாமி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

அன்னா ஹசாரே எளிமையான மனிதர்தான். ஆனால் அவரை சுற்றியுள்ளவர்கள் தேச விரோதிகள், வெளிநாட்டு சக்திகளின் ஆதரவு பெற்றவர்கள். குறிப்பாக அவரது குழுவில் இடம் பெற்றுள்ள அர்விந்த் கேஜ்ரிவால் மற்றும் கிரண் பேடி ஆகியோர் மீது கடுமையான குற்றச்சாட்டுக்கள் உள்ளன. கடந்த ஆண்டு ஹசாரே ஊழலுக்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டம் நடத்திய போது அவர்களால் திரட்டப்பட்ட நிதிக்கு என்ன ஆனது என தெரியவில்லை- என்றார்.

இதற்கு பதில் அளித்து பேசுகையிலேயே நிதின் கட்காரி இக்கருத்துக்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். நாட்டு மக்களிடையே வெறுப்பு வேறுபாடு இருக்கலாம். ஆனால் அரசுக்கு எதிராக போராட்டம் நடத்துபவர்களை தேச விரோதிகள் என [illegible]மால் ஒரு போதும் நியாயப்படுத்த முடியாது - என்றார்.

# நடிகை த்ரிஷாவின் ரூ.1 கோடி தனியார் வங்கியில் திருட்டு



சென்னை, ஜூன் 11

அண்ணாசாலையில் உள்ள தனியார் வங்கி ஒன்றில் சேமிப்பிலிடப்பட்ட த்ரிஷாவின் பணத்தை வங்கி ஊழியர் ஒருவர் நூதன முறையில் களவாடி விட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

தனியார் வங்கியில் கணக்கு ஆரம்பித்த த்ரிஷா, கோடிக்கணக்கான ரூபாய்களை அந்த வங்கியில் சேமிப்பிலிட்டார்.

இந்த நிலையில் கடந்த வாரத்தில் வங்கி கணக்கை சரி பார்த்த ஊழியர் ஒருவர், த்ரிஷா கணக்கில் ஒரு கோடி ரூபாய் குறைந்தது கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார். பின்னர் வங்கி அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்த உடனே பொலிஸுக்குப் போக வேண்டாம் என்று வங்கி அதிகாரிகள் மன்றாடியுள்ளனர்.

இதனால் த்ரிஷாவும் முறைப்பாடு கொடுக்காமல் விட்டு விட்டார். வங்கி அதிகாரிகள் அதே வங்கியில் பணவசூல் பகுதியில் உள்ள ஒருவர் மீது சந்தேகிக்கப்பட்டு விசாரித்தனர்.

வாடிக்கையாளர்கள் கொடுக்கும் பணத்தை அவர்களது கணக்கில் வரவு வைக்கும் ஊழியர், த்ரிஷாவின் கணக்கு விவரங்களை கணினியில் இருந்து தரவிறக்கம் செய்துள்ளார். பின்னர் அதைப் பயன்படுத்தி ஒரு கோடியை சிறிதளவாக எடுத்திருக்கிறாராம்.

த்ரிஷாவின் வங்கிக் கணக்குக்கு பணம் போய் சேர்ந்ததா என்பது பற்றி இது வரை எந்தத் தகவலும் இல்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாபெரும் பேரணி

## எதிர்வரும் 22 ஆம் திகதி நேபாள மக்கள் போராடத் தொடங்குகின்றனர்

காத்மாண்டு, ஜூன் 11



நேபாளப் பிரதமர் பாபுராம் பட்டாரை பதவி விலகக்கோரி, எதிர்க்கட்சியினர் எதிர்வரும் 22ஆம் திகதி மாபெரும் பேரணி ஒன்றை நடத்த உள்ளனர்.

நேபாளத்தில், கடந்த 2008இல், மன்னராட்சி முடிவுக்கு வந்த பின், மாவோயிஸ்டுகள் தலைமையில், ஜனநாயக ஆட்சி நடைமுறையானது. ஆனால், இதுவரை அங்கு ஸ்திரமான ஆட்சி அமையாததால், புதிய அரசியலமைப்பை நிறைவேற்றுவதற்கு, அனைத்துக் கட்சிகளிடையே உடன்பாடு ஏற்படவில்லை.இந்த நிலையில், அனைத்துக் கட்சிகளும் பங்கு கொண்ட தேசிய அரசு அமைக்கப்பட்டது. அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்புடன், அரசியலமைப்புச் சட்டத்தை, கடந்த மாதம் 27ஆம் திகதிக்குள் நிறைவேற்றி இருக்க வேண்டும். கூட்டணி கட்சிகளுக்குள் ஒற்றுமை ஏற்படாததால், அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்படவில்லை. நேபாள அரசியலமைப்பு மாதிரியை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்ட, அரசியல் நிர்ணய சபையின் கால அவகாசத்தை மேலும் நீடிக்க, அந்த நாட்டு உயர் நீதிமன்றம் தடை விதித்தது.

இதையடுத்து, நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு, எதிர்வரும் நவம்பர் 22ஆம் திகதி தேர்தலை அறிவித்துள்ளார் பிரதமர் பாபுராம் பட்டாரை.அனைத்துக் கட்சிகளையும் கூட்டி இது குறித்து அறிவிக்காமல், திடீரென நாடாளுமன்றைக் கலைத்து விட்டுத் தேர்தலை அறிவித்துள்ள பிரதமர் பட்டாரை பதவி விலகக் கோரி, வரும் 22ஆம் திகதி நேபாள காங்கிரஸ் கட்சி தலைமையில் மாபெரும் பேரணி, காத்மாண்டு நகரில் நடைபெற உள்ளது. கூட்டணிக் கட்சிகளை ஆலோசிக்காமல் திடீரென நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு, தேர்தல் அறிவித்துள்ள பிரதமர் இது குறித்து விளக்கம் அளிக்க வேண்டும் என, உயர் நீதிமன்றம் ஆணை பிறப்பித்துள்ளது. எதிர்வரும் 22ஆம் திகதி, பிரதமருக்கு எதிரான பேரணி நடைபெற இருப்பதால், நேபாள அரசு பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

## மன்னிப்புக் கோரியது நேட்டோ

காபூல், ஜூன் 11



ஆப்கானிஸ்தானில் இரண்டு நாள்களுக்கு முன் லோகர் மாகாணத்தில் அப்பாவிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்கு, நேட்டோ படை அதிகாரிகள் மன்னிப்புக் கோரியுள்ளனர்.

பாகிஸ்தானில் கடந்த ஆண்டு நேட்டோ படைகள் தவறுதலாகத் தாக்குதல் நடத்தியதில், பாகிஸ்தான் இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டனர். இதற்கு, அமெரிக்கா வருத்தம் தெரிவித்ததே தவிர மன்னிப்புக் கேட்கவில்லை. இதனால், நேட்டோ படைகளுக்கு எரிபொருள்கள் கொண்டு செல்லப்படும் பாதையைப் பாகிஸ்தான் மூடிவிட்டது. இந்தப் பாதையை திறக்கக்கோரி அமெரிக்கா வற்புறுத்தி வருகிறது.இதற்கிடையே ஆப்கானிஸ்தானில், கடந்த 6ஆம் திகதி, நேட்டோ படைகள் லோகர் மாகாணத்தில் தாக்குதல் நடத்தின. அங்கு தீவிரவாதிகள் பதுங்கியுள்ளனர் என நினைத்து, அப்பாவிகள் வசித்த வீட்டின் மீது, தாக்குதல் நடத்தப்பட்டதில் பெண்கள், குழந்தைகள் உட்பட, 18 பேர் உயிரிழந்தனர்.இந்த சம்பவத்தைக் கேள்விப்பட்ட, ஆப்கானிஸ்தானில் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க கடற்படைத் தளபதியும், நேட்டோ படைகளின் அதிகாரியுமான ஜோன் ஆலன், அப்பாவிகள் கொல்லப்பட்ட கிராமத்துக்குச் சென்று, அந்தப் பகுதியினரிடம் மன்னிப்புக் கேட்டார். உயிரிழப்பு ஏற்பட்ட குடும்பத்தினருக்கு உரிய நிவாரணம் அளிக்கப்படும் எனவும் அவர் உறுதியளித்தார்

## 31 மொழிகளில் கற்கும் மாணவர்கள்

லண்டன், ஜூன் 11

பிரிட்டனில் உள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றில், 31 மொழிகளில் ஒன்றைத் தாய் மொழியாகக் கொண்டுள்ள மாணவர்கள் படித்து வருகின்றனர்.

பேர்மிங்ஹாமில் உள்ளது ஆங்கில மோர்ட்டயர்ஸ் கதோலிக்கப் பாடசாலை. இங்கு வெவ்வேறு தாய் மொழி பேசும் 414 மாணவர்கள் படிக்கின்றனர். இவர்கள் உருது, பெங்காலி, தமிழ், பஞ்சாபி, குஜராத்தி, ஆபிரிக்கன்ஸ், அரபு, செக், காலிக், ஹிந்கோ, ஜமாய்க்கான் பாடோய்ஸ், காச்சி, லிங்காலா, மிர்புரி, நேபாளி, பாஷ்தோ, போலிஷ், ரோமானியன், சோமாலி, ஸ்பானிஷ், சுவிஸ் பிரெஞ்சு, யோருபா உள்ளிட்ட 31 மொழிகளில் ஒன்றை தங்கள் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர்.

இதில் ஆங்கிலம் பேசும் மாணவர்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர். இங்கு பயிலும் பெரும்பான்மையான மாணவர்கள் பாகிஸ்தானைப் பூர்விகமாகக் கொண்டவர்கள். எனவே, உருது மொழியையே பெரும்பாலான மாணவர்கள் பேசுகின்றனர்.

இந்தக் மாணவர்களுக்கு ஆங்கிலத்தைக் கற்பிக்க ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. புதிதாகப் பாடசலையில் சேர்ந்துள்ள மாணவர்களுக்கு ஆங்கிலத்தைக் கற்பிக்க மொழிபெயர்ப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், அவர்கள் எளிதாக ஆங்கில வார்த்தைகளைக் கற்றுக் கொள்ள வசதியாக, அவர்கள் மொழியையே பேசும் ஏற்கெனவே அந்தப் பாடசாலையில் படித்துவரும் மாணவர்களுடன் பழகவிடப்படுகின்றனர்.

இந்தப் பாடசாலையில் மட்டுமல்ல, பேர்மிங்ஹாமில் மொத்தமுள்ள 430 பாடசாலைகளில் 117இல் ஆங்கிலத்தை விட பிற மொழிகளைப் பேசும் மாணவர்கள் தான் அதிக எண்ணிக்கையில் இருக்கின்றனர் என அரசு கல்வித் துறை ஆவணங்களில் தெரிய வந்துள்ளது.

## விண்வெளி வீரர்களை அனுப்புகிறது சீனா

மூன்றுவிண்வெளி வீரர்களைக் கொண்ட விண்வெளி ஓடமொன்றை இந்த மாத மத்தியில் விண்வெளிக்கு செலுத்தவுள்ளதாக சீனா அறிவித்துள்ளது.

2020 ஆம் ஆண்டில் விண்ணில் தனக்காக நிரந்தர விண்வெளி நிலையமொன்றைக் கொண்டிருக்க வேண்டுமென்ற சீனாவின் திட்டத்தின் கீழான புதிய நடவடிக்கையாக இது அமையவுள்ளது.

ஷென்ஸோ -9 என பெயரிடப்பட்ட இந்த விண்வெளி ஓடமும் அதை ஏவுவதற்கான செய்மதியும் ஏற்கனவே ஏவுதளத்திற்கு நகர்த்தப்பட்டுள்ளன என ஸின்ஹுவா செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

2008 ஆம் ஆண்டின் பின்னர் விண்வெளிக்கு விண்வெளி வீரர்களை சீனா அனுப்பவுள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

மூன்று விண்வெளி வீரர்கள் இந்தப் பயணத்தில் இடம்பெறுவர். இவர்கள் தற்போது பூமியை வலம்வரும் சூடியான்கோங் - 1 விண்கலத்தை நெருங்கித் தற்காலிகமாக அதில் தங்கியிருந்து விஞ்ஞான பரிசோதனைகளில் ஈடுபடுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஒபாமா திறமையற்றவர்

## மாநில ஆளுநர் தெரிவிப்பு

வொஷிங்டன், ஜூன் 11

தாராளமயம், திறமையின்மையின் கூட்டுதான் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் ஆட்சி என்று லூயிஸியானா மாநில ஆளுநர் பாபி ஜின்டால் கூறியிருக்கிறார்.

பாபி ஜின்டால் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர். அமெரிக்க மாநிலம் ஒன்றின் ஆளுநராகப் பதவி வகிக்கும் முதல் இந்திய வம்சாவளியினரான இவர், குடியரசுக் கட்சியின் சார்பில் அமெரிக்காவின் துணைக் குடியரசுத் தலைவர் வேட்பாளராக வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், சிக்காகோவில் நடைபெற்ற கட்சியின் மாநாடு ஒன்றில் கலந்து கொண்டபோது அமெரிக்க ஜனாதிபதியைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார் பாபி ஜின்டால்.

அமெரிக்க ஜனாதிபதிகள் இடையே ஜிம்மி கார்ட்டருக்குப் பிறகு மிகவும் தாராளமயக் கொள்கையைக் கொண்டவர் ஒபாமா.

அதே சமயம் திறமை சற்றும் இல்லாதவர். இந்த இரண்டும்ஒரே இடத்தில் இருப்பது மிகவும் ஆபத்தானது.

2008இல் நடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது ஒபாமா மிக சாமர்த்தியமாகப் பிரசாரம் செய்தார்.

தனியார் துறை தொழில் என்றால் ஒபாமாவுக்கு வேறு ஏதோ அன்னிய நாடு என்ற நினைப்பு இருக்கிறது. அவருடைய ஆட்சியின் கீழ் பதவியில் இருப்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் தனியார் தொழில் துறையைப் பற்றி அக்கறை இல்லாதவர்கள். அரசின் திட்டங்களுக்காக வரி செலுத்துவோர் என்ற அளவில் மட்டுமே அந்தத் துறையினரை இவர்கள் சகித்துக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது.

மெக்சிகோ வளைகுடாவில் எண்ணெய்க் கசிவு ஏற்பட்டபோது ஒபாமா செயல்பட்ட விதம் அவரது திறமையின்மைக்கு ஒரு சிறந்த உதாரணம். எரிவாயு விவகாரங்களில் அரசு அதிகாரிகளை முழுக்க முழுக்க நம்பியே அவர் செயல்படுகிறார். இந்த விஷயங்களில் அமெரிக்க மக்கள் என்ன சொல்கிறார்கள் என்பது அவர் காதில் விழுவதே இல்லை. எந்தவிஷயத்தையும் நிர்வாகம் செய்வதில் எந்த அனுபவமும் இல்லாத ஒருவரைக் கொண்டு வந்து வெள்ளை மாளிகையில் உட்கார வைத்திருக்கிறோம் என்றார்.

அவருடைய கடுமையான அரசியல் தாக்குதல் பேச்சு முடிந்ததும் கூடியிருந்த செய்தியாளர்கள், துணை அதிபர் பதவிக்கு உங்களை முன்னிறுத்திக் கொள்ளும் விதமாகவே இவ்வாறு பேசினீர்களா என்று கேட்டபோது, ஜின்டால் அதை மறுத்தார்.

தான் விரும்பிய பணியை இப்போது செய்து வருவதாகக் கூறிய ஜின்டால், குடியரசுக் கட்சி சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போகும் மிட்ரோம்னியின் திட்டம் என்ன என்பது குறித்து நான் எதுவும் சொல்வதற்கில்லை.

நான்கு ஆண்டுகளுக்கு முன் இதே போன்ற கேள்வி எழுந்தபோதும் நான் எதுவும் சொல்லவில்லை. துணைக் குடியரசுத் தலைவர் பதவிக்கு ரோம்னி யாரைத் தேர்ந்தெடுத்தாலும் அவருக்கு எனது முழு ஆதரவு உண்டு என்று மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் என்று ஜின்டால் கூறினார்.

### ஆப்கனில் நான்கு பிரெஞ்ச் இராணுவத்தினர் சாவு

ஆப்கனில் உள்ள நேட்டோ படையினர் மீது தலிபான் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப் படைத் தாக்குதலில் பிரான்ஸ் இரணுவத்தினர் 4 பேர் உயிரிழந்தனர்; பலர் காயமடைந்தனர்.

கபிஸா மாகாணத்தில் உள்ள நிஜ்ராப் மாவட்டத்தில் இந்தத் தாக்குதல் நடந்தது.

ஆப்கானில், பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 3,500 இராணுவத்தினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில் அதிகமானோர் கபிஸா மாகாணத்தில்தான் உள்ளனர்.


கடந்த மாதத்தில் ஆப்கானுக்கான பயணம் ஒன்றை மேற்கொண்ட பிரான்ஸ் ஜனாதிபதி தமது நாட்டு படையினரை திருப்பி அழைக்க வேண்டும் என கருத்து வெளியிட்டதன் பின்னர் இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



பாலஸ்தீனத்தின் காஸா பகுதியில் அமைந்திருக்கின்ற பாலஸ்தீனர்களின் பூர்வீக குடியிருப்புகளை இஸ்ரேல் இராணுவத்தைக் கொண்டு அகற்றி வருகிறது. இதற்கு சர்வதேச அளவில் எதிர்ப்புகள் தெரிவிக்கப்படுகின்றபோதும் தனது பணியை கடந்த வாரத் தொடக்கம் அந்நாடு தீவிரப்படுத்தி இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்காணிப்பாளர்கள் மீதும் சிரியப் படையினர் தாக்குதல்



சிரிய படையினரால் 78 பேர் கொல்லப்பட்ட சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு ஐ.நா. கண்காணிப்பாளர்கள் செல்வதை சிரிய படையினர் தடுத்தனர் என ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

இந்தக் காணிப்பாளர்களைத் தடுக்கும் வகையில், அவர்களுக்கு எதிராக கனரக ஆயுதங்கள், ஆளில்லா விமானங்கள், கவசத்தடுப்புத் தோட்டாக்கள் என்பன பயன்படுத்தப்பட்டன என ஐ.நா.பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் பான் கீ மூன் கூறியுள்ளார்.

அரச படைகள் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் இடத்திற்கு நிராயுதபாணிகளான இந்தக் கண்காணிப்பாளர்கள் செல்வதை தடுப்பதற்கான உபாயமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என பான் கீ மூன் கூறினார்

சிரியாவில் ஐ.நா. வாகனங்கள் மீது ஏறத்தாழ தினமும் தாக்குதல் நடத்தப்படுவதாக ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### ஐரோப்பா அமெரிக்காவையும் பாதிக்கிறது

ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பின்னடைவு தமது நாட்டின் பொருளாதார மீட்பு வேகத்தைப் பாதிக்கும் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபமா தெரிவித்துள்ளார்.

வொஷிங்டனில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஒபாமா இதனைக் கூறியுள்ளார் என ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன் ஐரோப்பாவை கண்டிக்காமலிருப்பதிலும், ஐரோப்பிய தலைவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று அறிவுறுத்துவதிலும் கவனமாகச் செயற்படுகின்றனர் என ஒபாமா சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் அமெரிக்க நிதி கட்டமைப்பு மிகவும் திடமான ஒன்றாக உள்ளதெனவும் இந்த அசாதாரண சூழ்நிலையை சமாளிக்கக் கூடிய, திறன் உண்டெனவும் அவர் கூறியுள்ளார்.

# மத்திய கிழக்குப் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்



மத்திய கிழக்கு சமாதான பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டுமென பிரான்ஸ் வலியுறுத்தியுள்ளது.

பாலஸ்தீன தனிநாட்டை அங்கீகரிக்க, நீண்ட காலம் தடைப்பட்டுள்ள இந்தப் பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டுமென பிரான்ஸ் ஜனாதிபதி பிரன்சுவா ஹோலண்ட் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன ஜனாதிபதி மொஹமட் அப்பாஸுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் அவர் இதனைத் குறிப்பிட்டுள்ளார்.

பாலஸ்தீனத்திடம் இருந்து கைப்பற்றப்பட்ட பகுதிகளில் இஸ்ரேல் யூதக் குடியேற்றங்களை தொடர்ந்தும் நிர்மாணித்து வரும் நிலையில் , சமாதானப் பேச்சுவார்த்தை தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மலாவியில் நடைபெறாது ஆபிரிக்க ஒன்றிய மாநாடு

மலாவியில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ள ஆபிரிக்க ஒன்றியத்தின் மாநாட்டை வேறொரு நாட்டுக்கு மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

போர்க் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள சூடான் ஜனாதிபதி ஒமர் அல் பஷீர் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதை தடைசெய்யும் நடவடிக்கையில் மலாவி தொடர்ந்தும் ஈடுபடும் நிலையில் இந்த நகர்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமது நாட்டில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் ஒமர் அல் பஷீர் கலந்துகொள்வதைத் தடைசெய்யுமாறு ஆபிரிக்க ஒன்றியத்திடம் மாலாவி கடந்த மாதம் கோரிக்கை விடுத்திருந்தது.

ஒமர் அல் பஷீர் கலந்து கொள்ளும் பட்சத்தில் தமது நாட்டிற்கான பொருளாதார உதவிகள் பாதிக்கப்படும் என மலாவி சுட்டிக்காட்டியிருந்தது.

# அப்பிளின் முதற் கணினி ஏலத்தில்

நியூயோர்க், ஜூன் 11 ஸ்டீவ் ஜோப்ஸ் உருவாக்கிய முதல் அப்பிள் கணினி ஏலத்துக்கு வருகிறது. பிரபல ஏல நிறுவனமான ஸ்தபஸ் இதனை ஏலத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

உலகின் ஆரம்ப கால தனிப்பட்ட கணினிகளை அதிக எண்ணிக்கையில் உருவாக்கி விற்பனைக்குக் கொண்டு வந்த நிறுவனம் அப்பிள். இன்றைய மிகப் பிரபலமான ஐ-பாட், ஐ-பேட் வகையறாக்களை உருவாக்கிய நிறுவனத்தின் முதல் நூதனத் தொழில்நுட்பப் படைப்பு இந்தக் கணினிகள் தான்.


அப்பிள் நிறுவனத்தைத் தோற்றுவித்தவர்களான ஸ்டீவ் ஜோப்ஸ், ஸ்டீவ் வோஸ்னியாக் இதனைத் தங்கள் கைகளாலேயே உருவாக்கினார்கள். 1976-ஆம் ஆண்டு ஜூலையில் விற்பனைக்கு வந்தபோது இதன் விலை 666.66 டொலர்கள். ஜூன் 15ஆம் திகதி நியூயோர்க்கில் நடக்கவுள்ள ஏலத்தில் முதல் அப்பிள் கணினி ஒரு கோடி ரூபா பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





எகிப்தின் தலைநகர் கெய்ரோ ஆர்ப்பாட்டங்களால் அதிர்ந்துகொண்டே இருக்கின்றது. கடந்த வாரம் எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி முபாரக்குக்கு வழங்கப்பட்ட தீர்ப்பை ஆதரித்தும் எதிர்த்தும் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. இந்த வாரம் ஜனநாயக வழியில் தேர்தலை நடத்தக் கோரி கெய்ரோவில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

# மீண்டும் திறக்கப்படுகின்றன ஜப்பானில் அணு உலைகள்



ஜேப்பானில் மின்சாரப் பற்றாக்குறை காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை சமாளிக்க 2 அணு உலைகளை மீண்டும் திறக்க ஜப்பான் முடிவு செய்துள்ளது. ஜப்பானில் கடந்த ஆண்டு மார்ச் 11ஆம் திகதி பயங்கர பூகம்பமும், அதை தொடர்ந்து சுனாமியும் ஏற்பட்டது. இதில் புகுஷிமாத் தீவில் இருந்த அணு உலைகள் வெடித்துச் சிதறின. பல இடங்களில் கதிர்வீச்சு ஏற்பட்டது. இதனையடுத்து அணு உலைக்கு எதிராக நடந்த போராட்டம் காரணமாக, படிப்படியாக ஜப்பானில் உள்ள 50 அணு உலைகளும் மூடப்பட்டன. அதன்பின், கடுமையான மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டு பல தொழிற்சாலைகள் கடும் நெருக்கடியில் மூழ்கி உள்ளன. பலர் வேலை இழந்துள்ளனர். இந்த நிலையில், வேலைவாய்ப்புகளைத் தக்க வைத்துக் கொள்ளவும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்கவும் மின்சார உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அதனால், ஜப்பானில் 2 அணு உலைகளை மீண்டும் திறக்க வேண்டியது அவசியம் என்று பிரதமர் நோடா கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில், குறைந்த செலவில் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். ஜப்பானில் அணு உலைகள் மூலம் 30 சதவீத மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. எல்லாவற்றையும் வெறுமனே பூட்டி வைப்பதால் எந்தப் பயனும் இல்லை. மின்சாரம் இல்லாமல் ஜப்பான் மக்கள் வாழ முடியாது. மின்சாரப் பற்றாக்குறையால் பல பெரிய நிறுவனங்கள் வெளிநாடுகளில் தங்கள் தொழிற்சாலைகளை அமைக்கும் அபாயம் உள்ளது. அதனால் நம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் பறிபோகும். இதைச் சமாளிக்க அணு உலைகளைத் திறந்தே ஆகவேண்டும். இது என்னுடைய முடிவு. மக்களின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்ற அணு உலைகளை மீண்டும் செயல்பட வைக்க வேண்டும் என்றார்.

# பாகிஸ்தான் அமைதியை விரும்பும் நாடு

பாகிஸ்தான் அமைதியை விரும்பும் நாடு, எந்த நாட்டுடனும் பகைமை உணர்வு கொண்டிருக்கவில்லை என்று அந்த நாட்டு இராணுவ தலைமை தளபதி பர்வீஸ் கியானி கூறியுள்ளார்.

1971 இல் இந்தியா - பாகிஸ்தான் போரின் போது உயிரிழந்த, பாகிஸ்தான் இராணுவ மேஜர் சபீர் ஷெரீப் தொடர்பான புத்தக வெளியிட்டு விழா ராவல் பிண்டியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சியில் புத்தகத்தை வெளியிட்டு பர்வீஸ் கியானி உரையாற்றுகையில் கூறியதாவது:-

பாகிஸ்தான் எந்த நாட்டுக்கு எதிராகவும் பகை உணர்வைக் கொண்டிருக்கவில்லை. யாருடனும் வலுச் சண்டைக்குப் போகும் நோக்கமும் கிடையாது.

அமைதியை நேசிக்கும் நாடாகவே பாகிஸ்தான் இருக்கிறது.

எனினும் நாட்டின் சுதந்திரம், பாதுகாப்பு, இறையாண்மை உள்ளிட்டவற்றுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறோம். நாட்டில் தீவிரவாதத்துக்கு எதிரான போர் நடைபெற்று வருகிறது.

இதில் இளம் இராணுவத்தினர் நாட்டுக்காகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்துள்ளனர். அவர்களின் தியாகத்துக்கு நிகராக வேறு எதையும் ஒப்பிட முடியாது என்று கியானி பேசினார்.

# பொறுமையின் எல்லையில் அமெரிக்கா

தீவிரவாதிகளுக்குப் பாகிஸ்தான் தொடர்ந்தும் அடைக்கலம் கொடுத்து வருவதால், அமெரிக்கா பொறுமையின் எல்லைக்கு வந்துவிட்டது என அந்த நாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சர் லியோன் பெனட்டா கூறியுள்ள கருத்தை, இது வழக்கமானது தான் என்று பாகிஸ்தான் ஜனாதிபதி சமாளித்துள்ளார்.

இந்த நிலையில் அதனைச் சமாளிக்கும் விதத்தில் பேசிய பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி, அமெரிக்கா - பாகிஸ்தான் உறவு சுமுகமாகவே உள்ளது. அமெரிக்காவில் தேர்தல் நடைபெறவுள்ளதால், சில அரசியல்வாதிகள் இப்படி சில விஷயங்களைப் பேசுவது வழக்கம்தான் என்று கூறியுள்ளார்.

பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் அமெரிக்கப் படையினர் ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தி தீவிரவாதிகளை அழித்து வருவதற்குப் பாகிஸ்தானில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. அதே நேரத்தில் இது போன்ற தாக்குதல்கள் தொடரும் என்று அறிவித்துள்ள அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் லியோன் பெனட்டா, தீவிரவாதிகளின் புகலிடமாக பாகிஸ்தான் உள்ளது என்று கடுமையாகக் குற்றம்சாட்டிப் பேசினார்.

இந்த நிலையில் சீனா சென்றுள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரியிடம் இது தொடர்பாகக் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர் பதிலளிக்கையில், அமெரிக்காவும் பாகிஸ்தானும் இரு தரப்புக்கும் நன்மை ஏற்படக் கூடிய வகையில் செயல்பட்டு வருகின்றன. உறவு மெதுவாக மேம்பட்டாலும் உறுதியாக உள்ளது. எங்களுக்குள் எந்தப் பிரச்சினையும் இல்லை -என்றார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், ''அமெரிக்காவில் இது தேர்தல் காலம். எனவே சில அரசியல்வாதிகள் அரசியல் காரணங்களுக்காக சில விஷயங்களைப் பேசுவார்கள். இப்போது அமெரிக்க அரசியல்வாதிகள் பேசுவது எல்லாம் தேர்தலை மையமாகக் கொண்டதாகவே இருக்கும். எனவே அதனைப் பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. நாங்களும் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட நாடுதான். தீவிரவாதிகளுக்கு எதிராகப் பாகிஸ்தான் கடுமையாகப் போராடி வருகிறது -என்றார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வாய்ப்பு வரும் நேரம்

(01)

**லிசிபஸ் வடிவமைத்த சிலை**

''வாய்ப்பு வரும் சமயத்தை நழுவ விடாமல் உடனே பயன் படுத்திக் கொள்ள வேண்டும்'' என்ற உண்மையை மறை முகமாக விளக்கும் சிற்பமே கிரேக்க கலை உலகம் முதலில் அறிந்து கொண்டிருந்த வரலாற்றுச் சிற்பம் ஆகும்.

அது ஒரு புதிய நாகரிகத்தின் உதயகால எண்ணமாக இருந் ததைப் போன்றது ஆகும். அது மாவீரன் அலெக்சாண்டர் வாழ்ந்த காலத்தில் சிற்பி லிசிபஸ் வடிவமைத்த சிலை ஆகும். அந்த வெண்கலச்சிலை தானாகவே நம்மிடம் வந்து சேரவில்லை. ஆனால், அந்தச் சிலையை லியான் நகர மக்



கள் பார்த்துள்ளதாக கேலிஸ்ட்ராடஸ் விவரித்துள்ளார்.

வாய்ப்பு இளமைப் பருவத்தின் ஒரு சிறுவனாக இருந் தது. அவன் அழகான முகத்தோற்றம் உடையவனாக இருந் தான். அவனது தலை முடி காற்றின் அசைவால் பறந்து கொண்டிருந்ததால் ஒழுங்காகப் படியாமல் பரட்டையாகக் காணப்பட்டது. அவனது நெற்றி டயோனிசியசைப் போல அழகுடன் பளபளப்புடன் காணப்பட்டது. அவனது கன்னங் கள் இளமை அழகுடன் பிரகாசித்தன. இறக்கைகள் உடைய பாதங்கள் அவனது வேகத்தன்மையைக் குறிப்பிட்டுக் காண் பித்தன. அவன் பறந்து செல்லத் தயாராக உள்ளதைப் போல ஒரு கோளத்தின் மீது விரல் நுனிகளில் நின்று கொண்டி ருந்தான். அவனது முன் தலை முடி சுலபமாகப் பிடிக்கும் விதத் தில் நெற்றியிலிருந்து சுருள் சுருளாக விழுந்து கொண்டி ருந்தது. அவனது பின் தலையில் முடி மிகவும் சிறியதாக வளர்ந் திருந்தது. அது, அவன் ஓடினால் பின் தலை முடியைப் பிடித்து அவனை நிறுத்திவிட முடியாத அளவு இருந்தது.

கிரேக்கக் கவிஞர்களில் ஒருவர் அந்தச் சிலையின் ஒரு நகலைப் பார்த்தபோது அதில் ஒரு சவரக் கத்தி இருப்பதைக் கண்டார்.

''சிலையே நீ யார்?''

''நேரம். அனைத்தையும் அடக்கி வெல்பவன்''

''நீ ஏன் கால்விரல் நுனிகளின் மீது நின்று கொண்டி ருக்கிறாய்?'' ''எப்போதும் வேகமாகச் செல்வதற்கு''. ''உன் ஒவ் வொரு பாதத்திலும் ஏன் இரட்டை இறக்கைகள் உள்ளன?''

''நான் காற்றுடன் பறந்து செல்பவன்''

''உன் கையில் ஏன் சவரக்கத்தி வைத்துக் கொண்டிருக் கிறாய்?''''அது எந்தக் கூர் முனையையும் விட நான் விரைவாகச் செயல்படுபவன் எனக் காட்டும் ஆண்களின் அடையாளச் சின்னம்'' ''உன் கண்ணின் மீது ஏன் முடி விழுந்து கொண்டிருக்கிறது''

''என்னைச் சந்திப்பவன் என்னைப் புரிந்து கொள் வதற்கு.'' ''உன் தலையில் பின்பகுதி ஏன் சொட்டையாக உள் ளது-'' ''நான் இறக்கைகளுடைய பாதங்களுடன் வேகமாகச் செல்லும் போது என் பின்னால் இருந்து ஒருவராலும் என்னைப் பிடிக்கமுடியாது''

''உன்னை இந்த விதமாக அந்தச் சிற்பி ஏன் உருவாக் கினான்?'' ''ஓ! புதியவனே, உனக்காகத்தான் அவன் இந்தப் பாடத்தை உன் வாசலில் வைத்துள்ளான்.''

**சூழ்நிலைகளின் ஒரு குழந்தை**

மேத்யூஸ் கூறுகிறார், ''மனிதன் பெரும் அளவில் வாய்ப் பின் குழந்தையாக இருக்கிறான். நாம் ஒருவரது சக்தியையும் அவர் பெற்றுள்ள வெற்றியையும் மதிப்பிட்டுப் பார்க்கும் போது, அங்கு சூழ்நிலையின் சக்தி என்ற மற்றொரு காரண மும் உள்ளதென அறியலாம். நாம் அந்தக் காரணத்தை முழு மையாக அசட்டை செய்துவிட முடியாது.''

அந்த அறிஞர் தனது கட்டுரையில் எழுதியுள்ள கருத்தை, நான்காம் ஜோர்ஜ் மன்னர் ஆண்ட காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச் சியின் வாயிலாக விளக்கிக் காண்பிக்கிறேன். ஒரு நாள் மன்னர் வலிப்பினால் நினைவிழந்து விட்டார். அந்தச் சமயத்தில், ஒரு கிராமத்து மருந்துக் கடைக்காரருக்கு அரண்மனைக்கு வருகை தரும் வாய்ப்பு தற்செயலாகக் கிடைத்தது. அவர் மன்னருக்கு ரத்தக் காயத்தை ஏற்படுத்தி நினைவு திரும்பப் பெறச் செய் தார். அவர் அன்பும் உற்சாகமும் கலந்த தனது நகைச்சுவைப் பேச்சால், மனச்சோர்வடைந்திருந்த மன்னரைச் சிரிக்கவைத் தார். மன்னருக்கு அவர் மீது விருப்பம் ஏற்பட்டது. அவர் அந்த மருந்துக்கடைக்காரரைத் தனது மருத்துவராக நியமித்து விட்டார். பொதுவாகச் சொல்வதைப் போல, மருந்துக்கடைக் காரரின் அதிர்ஷ்டம் உருவாக்கப்பட்டது.

-கண்ணதாசன்

(தொடரும்)

# பெற்றோர்கள் காட்டுகின்ற அக்கறையே பிள்ளைகளின் வளர்ச்சிக்கு வழிசமைக்கும்

## வடமாகாண கல்விப் பணிப்பாளர்

காரைநகர், ஜூன் 11

குறிப்பிட்ட சில வளங்களுடன் கடந்த 22 வருடங்களுக்குப் பின்னர் தனது சொந்த இடத்தில் மீள ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலையின் முதலாவது விளையாட்டுப் போட்டி மிகச் சிறப்பாக அமைந்தமைக்கு பெற்றோர்கள் வழங்கிய ஒத்துழைப்பே காரணமாக அமைந்தது.

பெற்றோர்கள் பிள்ளைகள் மீது காட்டுகின்ற அக்கறையே பிள்ளைகளின் சிறப்பான வளர்ச்சிக்கு காரணமாக அமைகின்றது என வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

காரைநகர் வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலையின் முதலாவது வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-


தீவக வலயக் கல்விப் பணிப்பாளரால் இந்த ஆண்டு ஆரம்பத்தில் மீளவும் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்தப் பாடசாலைக்கு நீண்ட வரலாறு உள்ளது. காரைநகரில் ஆரம்பக் கல்விக்கு அதிகளவு மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படும் பாடசாலையாகவும் மிகக் கூடிய மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் பாடசாலையாகவும் இந்தப் பாடசாலை கடந்த காலங்களில் விளங்கியது.

எனினும் இந்தப் பாடசாலை நீண்ட காலமாக மீள ஆரம்பிக்கப்படாமல் இருந்தது துரதிஷ்டவசமே. தற்போது இந்தப் பகுதி பெற்றோர்களினதும் அபிமானிகளினதும் விடா முயற்சியால் இந்தப் பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்கள் அனைவருமே துடிப்பு மிக்கவர்களாகவும் திறமைசாலிகளாகவும் காணப்படுகின்றனர். அவர்களின் திறமைகளை நேரில் பார்த்து மகிழ்வடைந்தேன்.

இந்தப் பாடசாலைக்கு நல்லதொரு எதிர்காலம் உள்ளது. இந்தப் பாடசாலையின் வசதிகள் படிப்படியாக உயரக் கூடிய வாய்ப்பு உள்ளது. இதற்கான வேலைத்திட்டங்கள் அனைத்து மட்டத்திலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அனைத்துத் தரப்பினரும் இந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

பெற்றோர்கள் பிள்ளைகள் மீது காட்டுகின்ற அதிக அக்கறையே சிறந்த மாணவர்களாக வருவதற்கு வழிசமைக்கும் - என்றார். (எ-250)

**பெற்றோர்கள் பிள்ளைகள் மீது காட்டுகின்ற அதிக அக்கறையே சிறந்த மாணவர்களாக வருவதற்கு வழிசமைக்கும்.**



வவுனியா இறம்பைக்குளம் மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற வடமாகாண தமிழ்த்தினப் போட்டியில் தனி நடனத்தில் (பிரிவு 11) மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற காரைநகர் யாழ்ரன் கல்லூரி மாணவன் செந்தில்நாதன் பிரசாந்தனுடன் நடன ஆசிரியை சுதாகரன் சகிலா காணப்படுகிறார். பிரசாந்தன் மாவட்ட மட்டத்திலும் முதலாவது இடத்தைப் பெற்றதோடு, தீவக கல்வி வலயத்தில் முதல் தடவையாக மாகாண மட்டத்துக்குத் தெரிவான மாணவன் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-29)

## இடர் முகாமைத்துவ திட்டக்குழு தெரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்.மாவட்ட இடர் முகாமைத்துவ திட்டக் குழு அரச அதிபர் அ.அருமைநாயகம் தலைமையில் தெரிவு செய்யப்பட்டது.

யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஏனைய துறைகள் சார்பாக ஒவ்வொருவரும், கடற்படை, பொலிஸ் பிரிவுகளில் இருந்து 19 பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தக் குழு மாவட்ட மட்ட இடர் முகாமைத்துவ குழுவுக்கு பங்களிக்கும். (எ-50)

## பொறுப்பேற்றார் வைத்திய அத்தியட்சகராக

யாழ்ப்பாணம், ஜூன் 11

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையின் புதிய வைத்திய அத்தியட்சகராக டாக்டர் ஏ.வினோதன் கடந்த 2 ஆம் திகதி தொடக்கம் தமது பதவியைப் பொறுப்பேற்று கடமையாற்றி வருகிறார். இவர் வைத்திய நிர்வாகம் பகுதி 1 ஐ நிறைவு செய்து இந்தப் பதவியைப் பொறுப்பேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-300)

# போட்டித்தன்மை வாய்ந்த உலகு அறப்பண்புகளைச் சிதைத்து விட்டது

சுன்னாகம், ஜூன் 11

போட்டித்தன்மை வாய்ந்த உலகு நம்மிடையே நிலவிய அறப் பண்புகளைச் சிதைத்து விட்டது. எதையும் குறுக்கு வழியில் சாதித்து விடலாம் என்ற மனோநிலை மேலோங்குவது எமது சமூகத்தை ஆபத்தான பாதைக்குள் தள்ளப் போகின்றது என கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் தெரிவித்தார்.

இணுவில் மத்திய கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றம் நடத்திய ஒன்றுகூடல் நிகழ்வு மன்றத் தலைவர் ம.திசோதரன் தலைமையில் கல்லூரிப் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே லலீசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

இன்று கல்வி முறையில் மென்திறன்கள் போதியளவில் வளர்த்தெடுக்கப்படவில்லை என்ற குறை முன்வைக்கப்படுகின்றது. ஆனால் எமது முன்னோர்கள் காட்டிய வாழ்வியல் அறநெறிப் பண்புகளூடாக மென்திறன்களைப் போதிப்பதாக அமைந்திருந்தது.

வேலை வாய்ப்பைப் பெறுவது முதல் பரீட்சையில் தோற்றுவது வரை எங்கும் எதிலும் போட்டித்தன்மை மேலோங்கிவிட்டமையால் குறுக்கு வழியை நாடும் மனோநிலை உருவாகிவிடுகின்றது. ஆனால் இந்த நிலை எமது சமூகத்துக்கு ஆபத்தானது. எந்தத் துறையிலும் பொய்மையைத் திணித்து வாழ்ந்துவிடலாம் எனச் சிலர் முயல்கின்றனர். இத்தகைய சிக்கல்கள் ஏற்படா வண்ணம் மாணவப் பருவத்திலேயே அறப் பண்புகள் போதிக்கப்பட வேண்டும்.

தமிழ் இலக்கியங்கள் போதிக்கின்ற வாழ்வியலை கற்றுக்கொள்வது நல்ல மனப்பாங்குகளை நம்மிடையே விருத்தி செய்ய உதவக்கூடியது- என்றார்.

இணுவில் மத்திய கல்லூரி அதிபர் அ.சதானந்தன், மாணவர் மன்றப் பொறுப்பாசிரியை திருமதி கே. பிரபாகரன் ஆகியோரும் உரையாற்றினர்.

(எ-38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ–9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## தொடரும் நில அபகரிப்பு; இராணுவ ஆட்சியின் கோரம்

மீண்டும் நில அபகரிப்பு தொடர்பான செய்திகள் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன. அதிர்ச்சி தருவனவாகவும், பேரச்சத்தை தரக்கூடியனவாகவும் இருக்கும் இந்த விடயம் வடக்கில் தமிழ் இனத்தின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

தமிழர்களிடமிருந்து கூர்மையான விடுதலைப் போராட்டத்தைப் பறித்தெடுத்த இனவாத சிங்களவர் இப்போது தமிழர்களிடம் எஞ்சியிருப்பவற்றையும் பிடுங்கி எடுக்க கங்கணம் கட்டி நிற்கின்றனர். காலம் காலமாக வாழ்ந்து வந்த வாழ்விடங்களையும் விட்டு வைக்காத பெரும்பான்மை அரசு தனது இராணு வத்தை ஏவி தமிழர் நிலத்தை அபகரிக்கும் பணியை முடுக்கிவிட்டுள்ளது.

போர் ஓய்வோடு வன்னியில் காயப்பட்டிருந்த பல ஆயிரம் ஏக்கர் நிலத்தை யாருக்கும் தெரியாமல் அபகரித்துக் கொண்ட இராணுவமும் சிங்களவர்களும் இப்போது யாழ்ப்பாணத்தில் கைவைத்திருக்கின்றனர்.

1995 ஆம் ஆண்டோடு யாழ்ப்பாணத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த இராணுவம் இன்றுவரைக்கும் பல இடங்களில், பொதுமக்கள் காணிகளில் முகாம் அமைத்து தங்கியுள்ளது. சில காலங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் பரவலாக இருந்த உயர் பாதுகாப்பு வலயம் என்ற பகுதிகளிலும் அதிகளவான தனியார் காணிகளே உள்வாங்கப்பட்டிருந்தன. இப்போது 1996 ஆம் ஆண்டிலிருந்து இராணுவம் ஆக்கிரமித்திருக்கும் தமிழரின் காணிகள் இராணுவத்துக்குச் சொந்தம் என்ற தொனியில் யாழ்ப்பாணத் தமிழரின் காணிகள் இராணுவ உடைமையாக்கப்பட்டு வருகின்றன.

கடந்த வாரத்தில் தெல்லிப்பழை, கோப்பாய், நல்லூர் போன்ற பிரதேச செயலங்களில் மட்டும் அரச காணிகளும் தனியார் காணிகளும் அடங்கலாக 61ஏக்கர் காணி இராணுவத்துக்குச் சொந்தமாகக் கோரப்பட்டுள்ளது. அதேவாரத்தில் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு உள்பட்ட பகுதியில் 300 ஏக்கர் காணியை இராணுவம் தனது உடைமையாக்க சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்தோடு ஆளுநரும் யாழ்ப்பாணக் காணிகளை கையகப்படுத்தும் தீவிர முயற்சியில் இறங்கியிருக்கிறார். இராணுவம் ஆக்கிரமித்திருக்கும் அரச மற்றும் தனியார் காணிகள் பற்றிய விவர அறிக்கையை உடனடியாகத் தனக்கு அனுப்புமாறு பிரதேச செயலகங்களுக்கு அவர் கட்டளை பிறப்பித்திருக்கின்றார். இதனூடாகப் பெரியளவிலான நில அபகரிப்பு வடக்கில் – அதுவது யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படப் போகிறது என்பதை ஊகித்தறியலாம்.

இராணுவத்துக்கு காணி வழங்குவது தொடர்பில் இறுதியாக முடிவெடுக்க வேண்டிய பொறுப்பு பிரதேச செயலர்களுக்கே இருப்பதாகச் சொல்லப்படுகிறது. முடிவெடுப்பதில் அவர்களுக்கு எவ்வளவு சுதந்திரத்தை இராணுவத்தினரும், ஆளுநரும் வழங்கியிருக்கின்றனர்? வடக்கில் இயங்கும் பெரும்பாலான உயர் மட்ட அதிகாரிகள் 'மேலிடத்து ஓடர்களுக்கு' பணி செய்பவர்களாகவே இருக்கின்றனர். அதற்கு எதிராகத் திருப்பிக் கதைப்பவர்கள் உடனடியாக இடமாற்றத்துக்கும், ஓய்வுபெறுவதற்கும் பணிக்கப்படும் சந்தர்ப்பங்கள் இன்று நம் கண்முன்னால் நடந்து வருபவையே.

ஆக வடக்கில் இராணுவத்தால் முன்னெடுக்கப்படும் நில அபகரிப்பைத் தடுப்பதற்கு இப்போதைக்கு எந்தத் தரப்புக்களும் முன்வரமாட்டா. முற்றுமுழுதான இராணுவக் கட்டமைப்புக்குள் இயங்கும் வடக்கு இன்னும் பல அட்டூழியங்களை எதிர்கொள்ளத்தான் போகின்றது. அதில் தமிழர்களின் வாழ்விடங்களும் சிங்கவவர்களுக்குச் சொந்தமாகிவிடும்.

# சமந்தா பவர் மஹிந்தரை உடைப்பவள்

■ *தமிழில்- வியெஸ்ரீ*

*சிங்களம் மூலம் - உப்புல் யோசெப் பெர்னாண்டோ*

வன்னிப் போரின் இறுதி நாள்களிலும், போர் முடிவுக்கு வந்த நாள்களிலும் அலரி மாளிகையில் ஜனாதிபதிக்கும் அவரது சகோதரர்களுக்கும் இடையேயான வட்டமேசை ஆலோசனைகளில் அடிக்கடி உச்சரிக்கப்பட்டதொரு பெயர் சமந்தா பவர். யார் இந்த சமந்தா பவர்? அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு உலக நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பான ஆலோசனைகளை வழங்கி வரும் பெண்மணியே இந்த சமந்தா பவர். இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தையும் வெள்ளை மாளிகையையும் உஷார்படுத்தி வருபவர் இந்தச் சமந்தா பவரே என்று இலங்கை அரசு நம்புவதாகத் தோன்றுகிறது.

கடந்த 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் சமந்தா பவர் இலங்கைக்கு முதல் முதலாக விஜயம் செய்திருந்தார். அவரது அந்த விஜயத்தின் பின்னரே ஐ.நா.பொதுச் செயலாளர் பான் கீ-மூன் இலங்கை போர்க் குற்றங்கள் குறித்து ஆராய நிபுணர்கள் குழுவொன்றைத் தாம் நியமிக்கவுள்ளதாக உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

பராக் ஒபாமா அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினராக இருந்த காலகட்டத்தில் சமந்தா பவர், ஒபாமாவுக்கு அறிமுகமானார். அந்தவேளையில் உலக நாடுகளில் இடம்பெறும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து 'Problem From Hell' என்ற தலைப்பில் நூலொன்றை எழுதி வெளியிட்டிருந்தார் சமந்தா பவர். உலக நாடுகளில் போர்க் குற்றங்கள் இடம்பெறாது தவிர்க்கும் திறன் அமெரிக்காவுக்கு உள்ளதாகவும், அமெரிக்கா அதனை மேற்கொள்ளாது தவிர்ப்பது தவறெனவும் சம்பந்தா பவர் தமது அந்தநூலில் விமர்சித்திருந்தார். அத்துடன் போர்க் குற்றங்களை மேற்கொள்ளும் நாடுகள் மீது அது குறித்துக் குற்றம் சுமத்தப்படும் போது, தமக்கு அது குறித்து எதுவும் தெரியாதெனவோ அல்லது அத்தகைய குற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லையெனவோ சம்பந்தப்பட்ட நாடுகள் சாதிப்பதாகவும் அவர் தமது அந்தநூலில் தர்க்கித்திருந்தார். அந்த வகையில் தமது கட்டளைக்கமைய போர்க்குற்றங்களை மேற்கொள்ளும் படையினரைக் குற்றச்சாட்டுகளிலிருந்து சம்பந்தப்பட்ட நாடுகளின் அரசுகள் காப்பாற்றி விடுகின்றன என்பது சமந்தா பவரின் குற்றச்சாட்டு.

குறிப்பிட்ட அந்த நூலை வாசித்த பராக் ஒபாமா, தம்மை வந்து சந்திக்குமாறு சமந்தா பவருக்கு அழைப்பு விடுத்தார். சமந்தா பவருடனான சந்திப்பின் முடிவில் தம்முடன் இணைந்து செயற்படுமாறு அவர், சமந்தா பவரைக் கேட்டுக் கொண்டார். அந்தவேளையில் அமெரிக்க பல்கலைக் கழகமொன்றில் பேராசிரியையாகக் கடமையாற்றி வந்த சமந்தா பவர், தமது அந்தப் பதவியை விட்டுவிலகி பராக் ஒபாமாவின் கீழ் கடமையாற்ற முன்வந்தார். பராக் ஒபாமாவின் நெருங்கிய நண்பரான சமந்தா பவரின் கணவரும் சமந்தா பவரும் இணைந்து ஒபாமாவின் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேளை ஒபாமாவின் வெற்றிக்காக களத்தில் இறங்கிச் செயற்பட்டனர். உலக நாடுகளில் இடம்பெறும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து அமெரிக்க அரசு தலையிட்டு செயற்பட வேண்டும் என்ற தமது நிலைப்பாட்டை ஏற்கனவே பராக் ஒபாமாவின் மனதில் நிலைபெற வைத்திருந்த சமந்தா பவர், பராக் ஒபாமா அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதையடுத்து, மனித உரிமைகள் தொடர்பான அவரது ஆலோசகராகவும் செயலாளராகவும் பதவியேற்றுக் கொண்டார்.

தமக்கான பொறுப்புக்கமைய கடமையை மேற்கொள்ள, மோதல்கள் இடம்பெறும் நாடுகளை உலக வரைபடத்தில் தேடிக் கண்டறியும் சமந்தா பவரின் முயற்சியில் இலங்கையும் சிக்கிக் கொண்டதொன்றும் ஆச்சரியமான தொன்றல்லவே.

2008 ஆம் ஆண்டில் பராக் ஒபாமா அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற வேளையில் இலங்கையின் உள்நாட்டுப் போர் தீவிர நிலை கண்டிருந்தது. இலங்கையில் இடம்பெறும் மோதல்களில் குடிசார் பொது மக்கள் பெருமளவில் உயிரிழக்கும் அபாயமுள்ளதென ஐ.நா.சபையின் மனித உரிமைகள் சபையின் தலைவி லூயிஸ் கருத்து வெளியிட்டிருந்தார். சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் கூட அத்தகைய அபாய அறிவிப்பை வெளியிட்டு வந்தன. இவை யாவும் சமந்தா பவரின் கவனத்துக்கு உள்ளாகின.

விடுதலைப் புலிகளுடனான போரில் இலங்கை அரச படைகள் கிளிநொச்சியைக் கைப்பற்றி பொதுமக்களை போர் தவிர்ப்பு வலயத்துள் முடங்க வைத்த வேளையில், அந்த விடயத்தில் மத்தியஸ்தம் வகித்து அமெரிக்க அரசு பொதுமக்களை விடுவிக்க வேண்டுமென சமந்தா பவர் அமெரிக்க அரசிடம் கோரிக்கை முன்வைத்தார். பொதுமக்களை விடுவிக்க கடற்படையை அனுப்பி மனிதாபிமான நடவடிக்கையொன்றை மேற்கொள்ளத் தாம் தயாராவதாக அமெரிக்கா, இலங்கை அரசுக்குத் தெரியப்படுத்துவதற்கு முன்னர் அதுகுறித்து முதலில் இந்திய அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்தது. ஆயினும் அமெரிக்காவின் அந்த முடிவுக்கு இந்தியா தனது எதிர்ப்பை வெளியிட்டது. அந்த வேளை இந்திய வெளியுறவுச் செயலர் மேனன், அவசர அவசரமாக அமெரிக்காவுக்கு ஓடிச் சென்று போர் தவிர்ப்பு வலயத்துள் சிக்கிக் கொண்டுள்ள பொதுமக்களைப் பாதுகாக்க இந்திய அரசு கடும் முயற்சியை மேற்கொள்வதாகவும், அந்த விடயத்தில் அமெரிக்காவின் தலையீடு அவசியமில்லை எனவும் விளக்கமளித்தார்.

போர் முடிவுக்கு வந்த பின்னர் புலம் பெயர் தமிழர் தரப்புக்கள், சர்வதேசமனிதஉரிமைஅமைப்புக்கள், மற்றும் சர்வதேச ஊடகங்கள் என்பவை இலங்கையில் போரின் இறுதிக்கட்டத்தில் பெரும் மனிதப்படுகொலைகள் இடம்பெற்றதாகக் குற்றம் சாட்டிய வேளை, சமந்தா பவர் உஷாரானார். ஜனாதிபதி ஒபாமா, உலக நாடுகளில் இடம்பெறும் மனிதப்படுகொலைகளைத் தடுத்துநிறுத்த முன்வராததன் மூலம், ஏற்கனவே ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் நிர்வாகத்தால் அனைத்துலக ரீதியில் நலிவு நிலை கண்டிருந்த அமெரிக்காவின் மதிப்பை மீண்டும் தூசு தட்டி தலைதூக்க வைக்கக் கிடைத்த வாய்ப்பை தவறவிட்டு விட்டதாக குற்றம் சாட்டினர். மனித உரிமைகளுக்காகக் குரல்கொடுக்கும் தனக்கும் அது வெட்கக்கேடு என சமந்தா பவர் எண்ணியிருக்கக் கூடும். இலங்கையில்மனிதப்படுகொலையைத் தடுத்து நிறுத்த இயலாது போய் விட்ட தோல்வியை, வெற்றியாக மாற்றிக் கொள்ளும் நோக்கில் இன்றும் சமந்தா பவர், வெள்ளை மாளிகையையும், அமெரிக்க இராஜங்கத் திணைக்களத்தையும் மஹிந்தவின் அரசுக்குப் பின்னால் விரட்டோ விரட்டென்று விரட்டிக் கொண்டிருக்கிறார்.

லிபிய விடயத்தில் மட்டுமன்றி, அரேபிய நாடுகளின் மக்கள் எழுச்சிகளின் பின்னணியிலும் சமந்தா பவர் முக்கிய பாத்திரமேற்றுச் செயற்பட்டிருந்ததால் சமந்தா பவர் குறிப்பிட்டது போன்று இலங்கையில் இடம்பெற்ற போரின் கடைசி நாள்களில் தலையீடு மேற்கொள்ளத் தனக்கு வாய்ப்பிருந்தது என அமெரிக்கா எண்ணுகிறது. அமெரிக்கா தலையிட நினைத்திராத நாடுகள் பற்றிக் கூட தேடித்துருவிக் கண்டறிந்து சமந்தா பவர் ஆட்டிப் படைத்துக் காட்டியுள்ளார்.

அரபு மக்களைத் தூண்டி விட்டமை போன்று, இலங்கையிலும் ராஜபக்ஷக்களின் ஆட்சிக்கு எதிராகவும் அரசியல் சுனாமியொன்றை சமந்தா பவர் உருவாக்கக் கூடுமென இலங்கை அரசு அஞ்சுகிறது. மஹிந்தவின் சக்தியை ஒடுக்க சமந்தா பவர் என்ற இந்தப் பெண்மணி தனது சக்தியைப் பயன்படுத்த முயல்கிறாரா என்று ராஜபக்ஷமார் தற்போது தேடித்துருவி ஆராய்ந்து வருகின்றனர்.

### யார் இந்த சமந்தா பவர்?

**அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு உலக நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பான ஆலோசனைகளை வழங்கி வரும் பெண்மணியே இந்த சமந்தா பவர். இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தையும் வெள்ளை மாளிகையையும் உஷார் படுத்தி வருபவர் இந்தச் சமந்தா பவரே என்று இலங்கை அரசு நம்புவதாகத் தோன்றுகிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த இலக்கு?

எஸ்.எஸ்..திருச்செந்தூரன்
முதுகலை மாணவன்
சர்வதேச உறவுகள் கற்கை நெறி.

அமெரிக்கா ஈரானைத் தாக்கும் நோக்கத்தினை கைவிடுதல் வேண்டும். அவ்வாறு போர் தொடுக்கும் எண்ணம் அமெரிக்காவிடம் இருப்பின் அது அமெரிக்காவிற்கு எதிராக இஸ்லாமிய நாடுகளை ஒன்று திரட்டும் செயலாகும்

அமெரிக்காவின் அடுத்த இலக்காக இருக்கப் போவது எது? என்ற வினாவுடன் உலகம் காத்திருக்கின்றது. அமெரிக்காவின் அடுத்த இலக்காக ஈரானே இருக்கப் போகின்றது என்பதை, கடந்த மாதம் பத்திரிகை மாநாடு ஒன்றில் உரையாற்றிய அமெரிக்காவின் இஸ்ரேலுக்கான தூதுவர் டான்சஹா பேச்சு தெரிவித்திருக்கின்றது. அமெரிக்கா ஈரானின் யுரேனியம் செறிவாக்கத்திட்டத்தினை கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை இராஜதந்திர மற்றும் பொருளாதார ரீதியில் மேற்கொண்டது. இந்த முயற்சிகள் தோல்வி அடைந்து வருவதனால், மிக விரைவில் இராணுவ யுத்திகள் ஊடாகவே ஈரானின் அணுச் செறிவாக்கலினை தடுக்க முடியும் என அவர் தெரிவித்திருந்தார்.

ஆனால் இதற்கான சாத்தியப்பாடுகள் இப்போதைக்கு இருக்கின்றனவா எனப் பார்த்தால், அது சாத்தியமில்லை என்றே குறிப்பிடத் தோன்றுகின்றது. கடந்த வருடம் வொசிங்டனில் உள்ள இராணுவக் கல்லூரி ஒன்றில் உரையாற்றிய அமெரிக்காவின் முன்னாள் பாதுகாப்பு செயலர் நோபற்கெதீஸ் ''அமெரிக்கா ஈரானைத் தாக்கும் நோக்கத்தினை கைவிடுதல் வேண்டும். அவ்வாறு போர் தொடுக்கும் எண்ணம் அமெரிக்காவிடம் இருப்பின் அது அமெரிக்காவிற்கு எதிராக இஸ்லாமிய நாடுகளை ஒன்று திரட்டும் செயலாகும்'' என்றார். அவரின் கருத்துக்களில் உண்மையிருப்பதற்கு அப்பால், அது போன்றதொரு சூழ்நிலை தவிர்க்கப்படுதலே அமெரிக்காவுக்கு நன்மைபயக்கக் கூடியது என தெரிவிக்கப்படுகின்றது.

ஆனாலும் அமெரிக்கா, ஈரான் தொடர்பிலான கழுகுப் பார்வையை தளர்த்தாமல் வைத்திருக்கின்றது. அது அச்சம் தரும் பார்வையாக இருப்பினும், அதற்கான காரணமும் உண்டு. ஈரானின் அணு விரிவாக்கல் நடவடிக்கைகள் தனக்கும் தனது தோழமை நாடுகளினதும் தேசிய பாதுகாப்பிற்கு மிகுந்த அச்சுறுத்தல் ஆக இருக்கும் என அமெரிக்கா கருதுகின்றது. ஈரானின் அணு செறிவாக்கல் முயற்சிகளினை தடுப்பதற்கு அமெரிக்கா தலைமையில் ஏனைய ஆறு அணு ஆயுத நாடுகளும் ஐந்து கட்டப் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டு அவை தோல்வியில் முடிந்துள்ளன. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை ஈரான் மீது மூன்று தடைவைகள் பொருளாதாரத் தடையை விதித்தும் அவை தோற்றுப்போன வரலாறே காணப்படுகின்றது.

மத்திய கிழக்கின் பெரும்பாகத்தைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விட்ட அமெரிக்கா, மிச்சமாய் இருந்து சவால் விட்டுக் கொண்டிருக்கும் ஈரானிலும் தனது அதிகாரப் பலத்தினை நிலைநிறுத்துவதனை பிரதான மூலோபாயமாகக் கொண்டு செயற்படுகின்றது. அத்தோடு அமெரிக்காவின் செல்லப்பிள்ளையான இஸ்ரேலுக்கு ஈரானிடமிருந்து விடுக்கப்படும் அச்சுறுத்தலை தடுக்கவும் அமெரிக்கா தன்னாலான செயற்திட்டம் ஒன்றை முன்னெடுக்க முனைகின்றது.

இவ்வாறான நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்கா ஈரான் மீது போர் தொடுக்குமாயின் அந்தப்போர் அமெரிக்காவிற்கு வெற்றியளிக்கப் போவதில்லை. மாறாக அந்தப் போரில் அமெரிக்கா கண்டு கொள்ளவிருக்கும் தோல்வியானது அமெரிக்காவின் வரலாற்றில் கறுப்பு எழுத்துக்களால் பதிக்கப்படும். எனவே தான் அமெரிக்கா இப்போதைக்கு ஈரான் மீது போர் தொடுப்பதை விரும்பவில்லை. அவசரப்பட்டு எந்த முடிவுகளையும் ஈரான் விடயத்தில் அமெரிக்கா எடுக்காதிருப்பதற்குப் பல காரணங்களுண்டு.

அமெரிக்கா ஈரான் மீது போர் தொடுக்குமாயின் அமெரிக்காவுக்கு ஏற்படும் இராணுவச் செலவுகள் அபரிதமான பொருளாதார வீழ்ச்சியை அந்த நாட்டுக்கு ஏற்படுத்தும். இது தற்போது அமெரிக்கா கண்டுள்ள பொருளாதார வீழ்ச்சியினை மேலும் ஆதாள பாதாளம் நோக்கி நகர்த்தும். 2009 ஆம் ஆண்டு வெளியான உலக வங்கியின் அறிக்கையின் படி அமெரிக்கா தனது வருடாந்த செலவில் 21.8 வீதத்தை ஈராக், ஆப்கானிஸ்தான் போருக்கு செலவழித்துள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அந்தவறிக்கையில் அமெரிக்கா ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறுமாயின் ஆண்டுக்கு 235 மில்லியன் டொலர்களை சேமித்துக் கொள்ள முடியும் என குறிப்பிடுகின்றது. மேலும் ஈரான் மீது அமெரிக்கா போர் தொடுக்குமாயின் உடனடியாகப் மின்னல் வேகத்தில் பெற்றோலின் விலை சர்வதேச மட்டத்தில் அதிகரிக்கும். இந்த அதிகரிப்பினைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் அமெரிக்காவிடம் இல்லை. எனவே அமெரிக்கா ஈரான் மீதான போரைத் தவிர்த்து வருவதற்கு நியாயம் இருக்கின்றது.

ஈரானுக்கு எதிராக போரினை மேற்கொள்வதற்கான ஆணையை அமெரிக்கா ஐ.நா சபையினூடாகவே நிறைவேற்ற வேண்டும். ரஷ்யா மற்றும் சீனா ஈரானுக்கு சார்பான போக்கினை கடைப்பிடித்து வருவதனால் அமெரிக்காவின் முயற்சி வெற்றியளிக்கப் போவதில்லை. அத்தோடு அரபு நாடுகள் அமெரிக்காவின் மத்திய கிழக்கு அரசியல் விவகாரங்களில் மிகத் தெளிவாக உள்ளன. அதாவது அமெரிக்கா மீண்டும் மத்திய கிழக்கில் கால்பதிப்பதை அவர்கள் ஒரு போதும் விரும்பவில்லை. எனவே அரசியல் ரீதியாக மத்திய ஆசிய நாடுகளின் செல்வாக்கினை அமெரிக்கா இந்த விடயத்தில் இழக்க நேரிடும். மேலும் ஈரான் மீதான அமெரிக்காவின் போரானது ஈராக், ஆப்கானிஸ்தான், லிபியா, சிரியா வரிசையில் அமையுமாயின் இஸ்லாமிய நாடுகளை அமெரிக்கா குறி வைப்பதனை மத்திய கிழக்கு நாடுகள் தெளிவாக அறிந்து கொள்ளும். இதனால் அமெரிக்காவுக்கான எதிர்ப்பு வாதம் அங்கு பலமடையும். இதனையே இஸ்ரேலின் புலனாய்வுத் துறையான மொசாட்டின் தலைவர் மெரிராக்கன், ''ஈரான் மீதான அமெரிக்காவின் போர் அமெரிக்காவுக்கு வெற்றி, தோல்வி, அளிக்கும் என்பவற்றுக்கு அப்பால் அமெரிக்காவிற்கு எதிராக அரபு நாடுகள், இஸ்லாமிய அடிப்படைவாத பயங்கரவாத அமைப்புக்கள் தீவிரமாகச் செயற்பட தூண்டும் செயலாகும்'' எனக் குறிப்பிடுகின்றார். எனவே இவ்வாறான சூழலில் அமெரிக்காவின் முயற்சி மென் மேலும் பலவீனமடையும்.

கடந்த தசாப்தத்தில் ஈரானின் பொருளாதார வளர்ச்சி காரணமாக அது ஆயுத உற்பத்தி, பரிசோதனை, கொள்வனவுக்கென பெருந்தொகை நிதியினை செலவழித்து வருகின்றது. எவ்வாறாயினும் அமெரிக்காவுக்கு இணையான மரபு ரீதியான இராணுவப் பலத்தினை ஈரான் கொண்டிருக்கவில்லை. எனினும் ஈரானிடம் காணப்படுகின்ற சிறப்பான விமானப்படை, ஏவுகணைகள் என்பன அமெரிக்காவின் கடற்படையினை துல்லியமாகத் தாக்கி அழிக்கும் திறன் கொண்டவை. அத்தோடு போர் மூழ்கின்ற சூழலில் அமெரிக்காவின் விமானம் தாங்கிக் கப்பல்கள் ஈரானினை அணுகுவதில் சிக்கல் நிலை தோன்றும் ஏனெனில் போர்மூஸ் கால்வாய் ஈரானின் முழுக்கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இஸ்லாமிய அடிப்படைவாதம் கொண்ட, அமெரிக்கா ஏகாதிபத்தியத்துக்கு எதிரான கருத்தியல் ஊட்டப்பட்ட இளைஞர்களை கொண்டதாக தற்போதைய ஈரானிய இராணுவம் காணப்படுகின்றது. இது அமெரிக்காவுக்கு சிம்ம சொற்பனாக திகழும். மேலும் ஈராக் போரினைப் போன்று ஓர் இரு நாள்களில் அமெரிக்காவினால் தெஹ்ரானைக் கைப்பற்ற முடியாது. மாதக் கணக்கில், வருடக்கணக்கில் போரடிலீடுபட வேண்டிய நிலையுருவாகும். இவ்வாறு மாதக்கணக்கில் போர் நீடிக்குமாயின் அமெரிக்கா அத்தகைய போருக்குப் போகப் போவதில்லை. அமெரிக்கா நேட்டோ படையின் உதவியுடனேயே ஈரானைத் தாக்கும் திட்டம் கொண்டிருக்கின்றது. நேட்டோவின் உறுப்பு நாடுகளில் பெரும்பாலான கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஈரானிடம் இருந்தே தமக்கு தேவையான 26 வீதமான இயற்கை எரிவாயுவினை துருக்கியூடாகப் பெற்று வருகின்றன. எனவே அமெரிக்காவின் ஈரான் மீதான போருக்கு நேட்டோ அங்கத்துவ நாடுகளின் ஆதரவினைப் பெறுவதில் அமெரிக்காவுக்குப் பின்னடைவு ஏற்படலாம்.

இவற்றைக் கருத்தில் கொண்டே அமெரிக்கா, ஈரான் மீதான போரைத் தாமதப்படுத்தி வருகின்றது. இதனைவிட சிந்திப்பதற்கு வேறுகாரணங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

# காயங்கள் மாறினாலும் வடுக்கள் மறைவதில்லை

கு.மிருசா

30 வருடகால தொடர் போரின் இழப்புக்களும் ஏமாற்றங்களும் பழமையாகி விட்டன. காலம் கொடுத்த வடுக்களைத் தாங்கியவாறு மீண்டெழும் சமூகம் வரலாறு ஆகிவிடுகின்றது. இழப்புகளை ஈடுசெய்ய அரசு எப்படித்தான் முயன்றாலும் சிலவற்றைச் செய்ய முடியாது என்பது காலத்தின் பதில்களே. இதுவரை அதிலிருந்து மீளாத மனிதர்கள் எத்தனையோ பேர்.

இன்றுவரை பேசப்பட்டுக் கொண்டிருக்கும் வன்னி இறுதிப் போர், முள்ளிவாய்க்கால் பேரவலம் இன்றும் எத்தனையோ பேர் மனக் கண்ணில் விரிகின்றது. பத்திரிகை பார்க்காத பல இதயங்கள், பத்திரிகை பார்த்து தகவல்களை அறியத்துடித்த கணம் அந்த இறுதிப் பகுதிதான். இலங்கை மக்கள் தானே எமக்கென்ன என்று இருந்து விடாது சர்வதேசம் திரும்பிப் பார்த்த அந்தப் பொழுது தான். எங்கிருந்தாலும் தமிழன் தானே, என் உறவு தானே என்ற உணர்வில் இந்தியாவின் தமிழகம் கொந்தளித்தது. போரினை நிறுத்தக்கோரி பல போராட்டங்களும் நடத்தப்பட்டன. பலர் உயிர்த் தியாகங்களும் செய்திருந்தனர். குருதியை உறையவைக்கும் அந்த நிமிடங்கள் மீண்டும் ஒரு முறை வந்துவிடக் கூடாது என்பதைத்தான் இன்னும் எத்தனையே உள்ளங்கள் வேண்டிக்கொள்கின்றன.

விதவைகளாக்கப்பட்ட இளம் பெண்கள் அநாதைகளாக்கப்பட்ட இளஞ்சிறார்கள் எனப்பலரின் வாழ்க்கையில் நீங்காத வடுக்களைத் தோற்றுவித்த போரின் பின்னர் அவர்களின் வாழ்க்கை தொடரும் வரை அவலங்களும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கும்.

இவை அனைத்தையும் தாங்கி வாழும் நோக்கில் வாழ்வதற்கு என்று இறைவனால் அழைக்கப்பட்டவர்களை அழைத்துக் கொள்கின்றது அந்த ஆதரவு அற்றோர் இல்லம். காயம் மாறினாலும் வடுக்கள் ஒரு போதும் மறைவதில்லை என்பதை அந்தப் பிஞ்சு உள்ளங்கள் நினைவு படுத்தின. ஆடல் பாடல் என மகிழ்ச்சியை உண்டு பண்ண முயன்றாலும் இனம்புரியாத ஒருசோகம் அவர்கள் மனதைத் தாக்கிக் கொண்டு தான் இருந்தது. எதிர்பார்ப்புக்கள் நிறைந்த பார்வைகள் இனி இழக்க என்ன இருக்கிறது? இதை எல்லாம் தாண்டி இனியும் இங்கே தான் வாழப்போகின்றோம் என்ற விரக்தி, இன்னும் எத்தனை பேருக்குத் தான் இருக்கின்றதோ?

சமூக சேவையை நோக்கமாகக் கொண்டு செயற்படும் யாழ்.ரோட்டறிக் கழகம் இவர்கள் வாழ்விற்கு உதவ வேண்டும் என்ற நோக்கில் கடந்த வாரம் உடைகளை வழங்கியிருந்தனர். புதிய உடைகள் கிடைத்து விட்ட மகிழ்ச்சியும் தம்மைத் தேடி உறவுகள் வந்திருக்கின்றனர் என ஆரவாரமும் இனம் புரியாத உணர்வு எம்மைத் தொற்றிக் கொண்டது.

ஆதரவற்ற சுடலையின் குழந்தைகளுடன் சில நிமிடங்கள் இருந்தமை மனதுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்திருந்தது. 1953இல் கன்னியாஸ்திரிகள் மடமாக இருந்த பற்றிமா கன்னியாஸ்திரிகள் மடம் தற்போது ஆதரவற்றோர்களைத் தாங்கி நிற்கும் ஆச்சிரமமாக விளங்குகின்றது. போரினால் ஆனாதைகள் ஆக்கப்பட்ட சிறுவர்களுக்கும், காலத்தால் அனாதரவாக்கப்பட்ட சிறுவர்களுக்கும் ஆதரவளிக்கும் ஒரு இல்லமாக பற்றிமா மகா வித்தியாலயத்துக்கு அண்மையில் இயற்கை அழகுடன் அமைதியான அடைக்கலமாக இது விளங்குகின்றது.

சுமார் 33 பெண் சிறார்கள் அங்கே தங்கியிருந்து கல்வி கற்கின்றார்கள். நான்கு அருட் சகோதரிகள் கத்தோலிக்க மறைமாவட்ட உதவியுடன் அதனைப் பராமரித்து வருகின்றனர். இங்கு ஒன்று முதல் உயர்தரம் வரையில் பயிலும் மாணவர்கள் அரவணைப்பைப் பெற்றுக்கொள்கின்றனர். வாழ்க்கையில் எதனை இழந்தாலும் விடாமுயற்சியையும் தன்னம்பிக்கையையும் இழக்கவில்லை என்பதனை அவர்களது உரையாடலில் புரிந்தது. தமக்கு இருந்த குடும்ப உறவை பிரிந்து வாழ்ந்தாலும் நண்பர் என்ற அழகிய குடும்பத்தில் அங்கத்தவர் ஆனதில் மகிழ்ந்து கொள்கின்றனர். திருக்குடும்ப சிறுவர் இல்லம் உண்மையில் அழகான ஒரு குடும்பம் தான். அர்ப்பணிப் புடனான அருட் சகோதரிகளின் உதவியுடன் சிறப்பான வழி நடத்தலுடன் எதிர்காலம் நோக்கிப் பயணிக்கிறது. இங்கு தங்கியிருக் கும் சிறுவர்கள் புனித பற்றிமா பாடசாலை யில் கல்வி கற்கின்றனர். உயர்தரத்துக்காக உருத்திர புரம் மகாவித்தியாலயம் செல்கின்றனர்.

அவ்வாறு செல்லும் மாணவர்களுக்கு திருக்குடும்ப சிறுவர் இல்லத்தால் துவிச்சக்கர வண்டிகளும் வழங்கப்படுகின்றன. இதனைப்போன்றே உருத்திரபுரத்தில் காந்தியம் சிறுவர் இல்லம் கருணை இல்லம் போன்றனவும் கரித்தாஸ் கியூடெக் ஆதரவுடன் கத்தோலிக்க மறைமாவட்ட உதவியுடனும் இயங்கி வருகின்றன.

காந்தியகம் சிறுவர் இல்லத்தில் உள்ளத்தை நெருடவைத்த காட்சி புற்றுநோயால் பாதிக்கப்பட்ட மூன்று வயதுச் சிறுவன். தாய், தந்தையின் அரவணைப்பில் இருந்து விலகி காந்திய சிறுவர் இல்லத்தில் வாழும் அந்தச் சிறுவனுக்கு வைத்தியர்களால் இன்னும் இரண்டு ஆண்டுகள் வாழ்க்கைக்கே உத்தரவாதம் கொடுக்கப்பட்டுள்ளது. அழகான உரையாடல், பலவிதமான சினிமாப் பாடல்களை மனப்பாடம் செய்து மழலை மொழியில் பாடியும் அசத்தினான் அந்தச் சிறுவன்.

கருணா இல்லம் போரின் பின்னர் மீளக் கட்டுமான பணியுடன் பயணிக்கின்றது. இங்கும் போரினால் பாதிக்கப்பட்ட பல சிறுவர்கள் ஆதரவு தேடி இணைக்கப்பட்டுள்ளனர். இந்த மூன்று சிறுவர் இல்லங்களிலும் அனுமதிக்கப்படும் சிறுவர்கள் சட்டரீதியான அணுகுமுறைகள் மேற்கொள்ளப்பட்டு நீதிமன்ற அனுமதியுடனேயே அனுமதிக்கப்படுகின்றனர். தொடர் இழப்புகளைச் சந்தித்து இருந்த போதிலும் எதையோ சாதிக்கத்துடிக்கும் இந்த இளசுகளின் பயணம் தொடந்து கொண்டிருக்கிறது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவானந்தம்

ஒரு சமயம் பம்பாய் தமிழ்ச் சங்கத்தில் பாரதி விழா நடந்து கொண்டிருந்தது. அந்த விழாவில் கலந்து கொள்வதற்காக தமிழ் நாட்டிலிருந்து ஒருவர் போயிருந்தார். அவர் நான்கு நாள்கள் அங்கு தங்கியிருந்து, வெவ்வேறு இடங்களில் தமிழ்ச் சங்க விழாவில் சொற்பொழிவு செய்ய வேண்டியிருந்தது. ஒவ்வொரு நாளும் இரவில் படுக்கப் போவதற்கு முன்னர் அவர் தன்னுடைய வேட்டியைத் துவைத்துக் காயப் போட்டு விட்டு -ஒரு துணியைக் கட்டிக் கொண்டு படுத்துக்கொள்வார். மறுநாள் காலையில் அந்த வேட்டியை எடுத்துக் கட்டிக் கொண்டு விழாவில் பேசுவதற்குப் போய்விடுவார்.

அவரிடம் அப்போது ஒரே ஒரு வேட்டிதான் இருந்தது. அதனால்த் தான் அவர் இப்படிச் செய்தார் இதை அங்கிருந்த தமிழ்ச் சங்க உறுப்பினர்கள் புரிந்து கொண்டார்கள். உடனே அவர்கள் ஒரு துணிக் கடைக்குப் போய் பன்னிரண்டு வேட்டிகளை வாங்கிக் கொண்டு வந்து அவருக்குப் பரிசாகக் கொடுத்தார்கள். இவர் அதை வேண்டாம் என்று சொல்லவில்லை., பேசாமல் வாங்கி வைத்துக் கொண்டார். ஆனால் அதையெல்லாம் பம்பாயை விட்டுப் புறப்படுவதற்கு முன்னர் அந்த ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு சென்னைக்கு ரயில் ஏறினார்.

அந்தப் பெரிய மனிதர் யார் தெரியுமா?அவர் தான் பிரபல தேசபக்தரான தோழர் ப.ஜீவானந்தம்.ஆரம்ப காலத்தில் அவர் செட்டிநாட்டில் சிறாவயல் என்ற ஊரில் காந்தி ஆசிரமம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது மகாத்மாகாந்தி அந்த ஆசிரமத்துக்கு ஒரு தடவை வந்திருந்தார். ஆசிரமத்தின் சூழ்நிலை காந்திஜிக்கு மிகவும் பிடித்திருந்தது. பேச்சின் நடுவில், ''ஆசிரமத்தின் பொருளாதார நிலை எப்படி இருக்கிறது? ஆசிரமத்துக்குச் சொத்து என்ன இருக்கிறது? என்று காந்திஜி விசாரித்தார். அதற்கு, ''இந்தத் தேசம்தான் என்னுடைய சொத்து'' என்றார் ஜீவா.அதைக் கேட்டதும் உடனே காந்திஜி, ''இல்லை.. இல்லை.. நீங்கள்தான் இந்தத் தேசத்தின் சொத்து''என்று கூறினார்.

இப்படி காந்திஜியால் அடையாளம் காட்டப்பட்ட ஜீவா ஒரு சிறந்த சொற்பொழிவாளர். அவர் ரஷ்யப் புரட்சியை விளக்குவதற்காகச் கூறிய ஒரு குட்டிக்கதை மிகப் பிரபல்யம்.

ஓர் ஊரில் ஒரு பூதம் இருந்தது. அது வயலை உழுது விவசாயம் செய்தது.. காலாகாலத்தில் களை எடுத்தது. நல்ல விளைச்சல்.. . தானியம் குவிந்தது. இருந்தாலும் அந்தப் பூதமும் அதன் குடும்பமும் உப்பில்லாத கூழைத்தான் குடித்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் பூதம் நிறைய வீடுகளைக் கட்டியது.. மாடமாளிகைகளை எழுப்பியது. ஆனால் அதன் குடும்பம் ஒரு சாதாரண குடிசையில்தான் சிரமத்துடன் வாழ்ந்து கொண்டிருந்தது. அந்தப் பூதம் பள்ளிகளையும், கல்லூரிகளையும் கட்டியது.. ஆனால் அந்தப் பூதத்துக்கும் அதன் குடும்பத்துக்கும் எழுத்து வாசனையே கிடையாது. அது பஞ்சு ஆலைகளில் வேலை செய்து.. நிறையத் துணிகளை உற்பத்தி செய்தது.. ஆனால் அதுவும் அதன் குடும்பமும் கிழிந்த துணியைத்தான் கட்டியிருந்தன.

அந்தப் பூதம் செய்த வேலைகள் அதிகம். ஆனால் அது எப்போதும் எலும்பும் தோலுமாக இருந்தது.. அதன் குடும்பம் வறுமையில் மிகவும் கஷ்டப்பட்டது. அந்த ஊரில் நல்ல மனிதர் ஒருவர் இருந்தார். அவர், 'இந்தப் பூதம் இவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கிறது.. ஆனால் இதனுடைய நிலைமை இப்படி மிகவும் பரிதாபமாக இருக்கிறதே என்று நினைத்தார். ஒருநாள் அதன் அருகில் சென்று உற்றுப் பார்த்தார். அந்தப் பூதத்தின் இரண்டு கண் இமைகளும் வீங்கிப் போய் பார்வையில் முக்கால் வாசியை மறைத்திருந்தது. உடனே அவர் தன் கையில் வைத்திருந்த ஒரு கருவியால் அந்த இமைகளைத் தூக்கிவிட்டார். அப்போது தான் அந்தப் பூதத்தின் பார்வைக்கு எல்லாம் 'பிளிச்' என்று தெரிந்தது.

அது, 'உற்பத்தி செய்பவனுக்கு ஒன்றும் கிடைக்க வில்லையே' என்று யோசிக்க ஆரம்பித்தது. அந்த யோசனையின் விளைவாக, ''எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும்.. அதற்காகப் பாடுபடுவேன்' என்று அந்தப் பூதம் வீரமுழக்கமிட்டது. யார் இந்தப் பூதம்? உழைக்கும் தொழிலாளர்களும் விவசாயிகளும்தான் இந்தப் பூதம்.

சமூக சூழ்நிலை அந்தப் பூதத்தின் கண்களை மறைத்திருந்தது. அது விலக்கப்பட்டது. அதன் காரணமாகச் சமதர்மம் வந்தது.

இதுதான் ஜீவா சொன்ன பூதக்கதை.

இன்னொருவர் உழைப்பைச் சுரண்டுவதுதான் திருட்டிலேயே பெரிய திருட்டு. சுவாமி விவேகானந்தரின் கருத்துக்கள் ஜீவானந்தத்துக்கு மிகவும் பிடிக்கும். அவர் இளைஞராக இருந்தபோது முதன் முதலில் ஒரு கட்டுரை எழுதினார். சுவாமி விவேகானந்தரைப் பற்றிய கட்டுரை அது.

ஜீவா நல்ல அனுபவசாலியாகத் தமது முதிய வயதில் தாம் மறைவதற்கு முன்பு கடைசியாக ஒரு கட்டுரை எழுதினார். அந்தக் கட்டுரை யாரைப் பற்றிய கட்டுரை தெரியுமா? அதுவும் சுவாமி விவேகானந்தரைப் பற்றிய கட்டுரைதான். இப்படி ஜீவா தமது வாழ்நாளில் எழுதிய முதல் கட்டுரையும், கடைசிக் கட்டுரையும் சுவாமி விவேகானந்தரைப் பற்றி கட்டுரையாகவே அமைந்தது குறிப்பிடத்தக்கது.

1963 ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழா நாடு முழுவதும் பெரிய அளவில் கொண்டாடப்பட்டது. அப்போது சுவாமி விவேகானந்தரைக் குறித்து தமது 'தாமரை' பத்திரிகையில் ஜீவா ஒரு கட்டுரை எழுதினார். அந்தக் கட்டுரையில் ஒரு பகுதி இது.

''பாருலகைக் குலுக்கிய பாரதத் துறவி- துறவிகளிலும் தனக்கு நிகர் தானேயான அரசியல் துறவி-பாரதமணித் திருநாடே-தான் என உருவகித்து வாழ்ந்த பரிபூரண தேசபக்தத் துறவி-நவீன இந்தியாவின் ஞானாசிரியர்-இந்திய ஆன்மிக ஞானமும் மேலைநாட்டு விஞ்ஞானமும் சேர்மானமும் பிசகாது கலந்து உறவாடி ஒளிவிட்ட கூட்டு மேதை-'எம்மதமும் சம்மதம்' என்ற பொது நெறிப் பெரியார்-ஏழை எளிய மனிதர்களுக்காகக் காலம் முழுவதும் இதய இரத்தம் பெருக்கிய கருணைக் கடல்- தீர்க்கதரிசிகளில் தீர்க்கதரிசி-பெருநாவலர்களில் பெருநாவலர்-துவராடையில் திகழ்ந்த புரட்சிவேள்=பேச்சில், நடையில், பார்வையில் வீராதி வீரர் -காட்டுத் தீ-கர்ஜிக்கும் சிங்கம்-'கர்மத்தில் அகர்மத்தைக் கண்டவர்- இவர் தான் சுவாமி விவேகானந்தர்.



**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# மும்மொழிக் கல்வி வழங்கும் மன்னார் அல்- அஸ்ஹர் ம.வி.

மன்னார் அல்-அஸ்ஹர் மகா வித்தியாலய நவோதய பாடசாலை வட மாகாணத்தில் மிகவும் பழைமை வாய்ந்த பிரபலமாகிய பாடசாலையாகும். இந்தப் பாடசாலை மன்னார் நகரின் முதலாவது அரச பாடசாலையாகும். 1908ஆம் ஆண்டு அரச தமிழ்க் கலவன் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது.




மும்மொழிகளையும் கொண்ட பாடசாலையாக விளங்குகிறது. இந்தப் பாடசாலையில் முஸ்லிம், இந்து, கிறிஸ்தவம், பௌத்தம் ஆகிய நான்கு மதங்களையும் கொண்ட ஒரே நேரத்தில் கல்வி கற்ற சிறப்பு மிக்க பாடசாலையாக திகழ்கிறது.

1908 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி இப்பாடசாலை ஆரம்பிக்கப் பட்டது. அப்போது அந்த பாடசாலையின் பெயர் தமிழ்க் கலவன் பாடசாலை என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்டது. 1947 ஆம் ஆண்டு மன்னார் அரசினர் ஜீனியர் பாடசாலையாக இயங்கியது தொடர்ந்து. 1950 ஆம் ஆண்டு மன்னார் அரசினர் ஜுனியர் ஆங்கிலப் பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. அதனையடுத்து 1952 ஆம் ஆண்டு மன்னார் அரசினர் சிரேஷ்ட ஆங்கிலப் பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. 1956 ஆம் ஆண்டு மன்னார் அரசினர் சிரேஷ்ட பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது.1960 ஆம் ஆண்டு மன்னார் முஸ்லிம் ம.வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது.

1963 ஆம் ஆண்டு மன்-அல்-அஸ்ஹர் ம.வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது.1964 ஆம் ஆண்டு மன்-அல்-அஸ்ஹர் ம.வி (1ஏ.வி) பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது.

1990 ஆம் ஆண்டு முஸ்லிம்கள் வெளியேற்றப் பட்டமையினால் பாடசாலை மூடப்பட்டது.1992 ஆம் ஆண்டு பாடசாலை மீண்டும் திறக்கப் பட்டது. 2005 ஆம் ஆண்டு வெளிச்ச வீடு ஆங்கில மொழி மூல பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது.

2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி(01-04-2006) மன்-அல்-இஸ்ஹர் ம.வி. நவோதய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டு இன்று வரை பல சாதனைகளை இப்பாடசாலை புரிந்து வருகின்றது.

1908ஆம் ஆண்டு முதல் கணவதிப்பிள்ளை, முத் துக்குமார், கே.எட்வேட், எஸ்.ஜோசப்,ஜனாப் எம்.எம்.யூசுப், ஜனாப் எம்.எம்.மன்சூர்,ஜனாப் எம்.ஏ.ஏகிம்,ஜனாப் எம்.எம்.ஏ.காதர், ஜனாப் கே.எம்.அபுபக்கர்,ஜனாப் ஏ.சி.அப்துர்கக்,ஜனாப் ஏ.சகாப்தீன்,ஜனாப் எம்.எம்.யூனுஸ், ஜனாப் கே.எச்.எம்.மரைக்காயர்,ஜனாப் எஸ்.எம்.ஹினாயத்துள்ளா, ஜனாப் எச்.எம்.மனாப் ஆகியோர் பாடசாலை அதிபர்களாகக் கடமையாற்றி இருந்தனர்.

2009 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை இந்தப் பாடசாலையின் அதிபராக எம்.வை மாஹீர் கடமையாற்றுகின்றார்.-1908 ஆம் ஆண்டு 102 மாணவர்களுடனும் 3 ஆசிரியர்களுடனும் ஆரம்பமான இந்தப் பாடசாலையில் 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் 1900 மாணவர்கள் வரை கல்வி கற்றனர். 1990 ஆம் ஆண்டு முஸ்லிம்கள் மன்னார் மாவட்டத்தை விட்டு இடம் பெயர்ந்த சென்றனர். பின்னர் 1992 ஆம் ஆண்டு இப்பாடசாலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இப்பாடசாலையில் சுமார் 1500 மாணவர்களும் 50 வரையிலான ஆசிரியர்களும் உள்ளனர்.

**சாரணர்**

மன்னார் நகரின் முதல் அரச கனிஷ்ட பாடசாலையாக இருந்த போது மாவட்டத்தின் முதல் சாரணியம் ஸ்தாபிக்கப்பட்டது. தற்போது சாரணியம் இந்தப் பாடசாலையில் வளர்ச்சியடைந்துள்ளது.

**பாண்ட் இசைக்குழு**

மாவட்டத்தில் பாண்ட் வாத்தியக்குழு இந்தப் பாடசாலையிலேயே தான் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டு தேசிய மட்டத்தில் வெற்றியீட்டியுள்ளது.

**விளையாட்டு மைதானம்**

மாவட்டத்தின் பழம் பெரும் விளையாட்டு மைதானமாக இந்தப் பாடசாலையின் விளையாட்டரங்கு திகழ்ந்து வருகின்றது.இந்த மைதானம் பல நூற்றுக்கணக்கான வீர வீராங்கனைகளை உருவாக்கிப் பெருமை சேர்த்துள்ளது.

இந்தப் பாடசாலையில் ஆரம்ப காலத்தில் இடம் பெற்ற விளையாட்டுப்போட்டி மற்றும் முக்கிய நிகழ்வுகளின் போது அன்றைய காலங்களில் பதவியில் இருந்த பிரதமர்களும்,ஜனாதிபதியும் கலந்து கொண்டிருந்தனர்.

1949 ஆம் ஆண்டு இடம் பெற்ற பாடசாலை நிகழ்வில் அன்றைய பிரதமராக இருந்த டி.எஸ். சேனநாயக்க,1953 ஆம் ஆண்டு இடம் பெற்ற நிகழ்வில் அன்றைய பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவை,1954 ஆம் ஆண்டு இடம் பெற்ற நிகழ்வின் போது பிரதமர் டட்லி சேனநாயக்கா கலந்து கொண்டார்.

> 1979 ஆம் ஆண்டு இடம் பெற்ற நிகழ்வில் ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்தனா,1989 ஆம் ஆண்டு இடம் பெற்ற நிகழ்வில் அன்றைய ஜனாதிபதியாக இருந்த ஆர்.பிரேமதாஸ ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை சிறப்பான அம்சமாகும்.

1979 ஆம் ஆண்டு இடம் பெற்ற நிகழ்வில் ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா,1989 ஆம் ஆண்டு இடம் பெற்ற நிகழ்வில் அன்றைய ஜனாதிபதியாக இருந்த ஆர்.பிரேமதாஸ ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை சிறப்பான அம்சமாகும். கடந்த பல வருடங்களாக இந்தப் பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த.சாதாரண தரம், உயர் தரம் ஆகியவற்றில் முதன்மை தேர்வுகளைப் பெற்றுள்ளது. கலை, விளையாட்டு, தமிழ்த் தினப் போட்டி ஆகியவற்றில் இந்தப் பாடசாலை மாணவ மாணவிகள் மாவட்ட மட்டம், மாகாண மட்டம்,தேசிய ரீதியில் பல சாதனைகளைப் புரிந்துள்ளது. மன்னார் நகரில் ஒரே ஒரு முஸ்லிம் பாடசாலையாக இந்தப் பாடசாலை இருந்தாலும் இந்தப் பாடசாலையில் தமிழ், முஸ்லிம் மாணவர்கள் ஒற்றுமையுடன் கல்வி கற்று வருகின்றனர்.

இந்தப் பாடசாலை பல பட்டதாரிகளையும், கல்விமான்களையும், வைத்தியர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும், அமைச்சர்களையும்,சமுதாயத்தலைவர்களையும், ஊடகவியலாளர்களையும் உருவாக்கியுள்ளது. இந்தப் பாடசாலை சாதி,மத, பேதமற்ற நிலையில் மும்மத மாணவர்களையும் ஒன்று சேர்த்து பல சாதனைகளைப் புரிந்து வெற்றி நடைப்போட்டு வருகின்றது. தனது 104 ஆவது வருடபூர்த்தியை (1908-2012) எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதியில் கொண்டாடவுள்ளது.

**லெம்பேட்**

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரங்கள் கடத்தியோருக்கு ரூ.90 ஆயிரம் அபராதம்



எருவில்,ஜூன்11

மட்டக்களப்பு மாவட்டத்தில் உன்னிச்சை காட்டில் சட்விரோதமான முறையில் மரங்களை வெட்டி கடத்திச் சென்ற அறுவருக்கு மாவட்ட நீதிபதி என்.எம்.அப்துல்லாஹ் 90 ஆயிரம் ரூபா அபராதத்தை விதித்துள்ளார்.

இந்த நபர்கள் உன்னிச்சைக் காட்டிலிருந்து மரங்களை வெட்டி கடத்திவருகையில் வவுணதீவில் வைத்து மாவட்ட வன அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட அறுவரும் நீதிமன்றத்தில் முன்னி லைப்படுத் தப்பட்டபோதே குறித்த அபராதம் விதிக்கப்பட்டது. (ச-31)

# சுதந்திரக் கட்சியில் இணைந்தாலே பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு

## சுதந்திரக்கட்சி அமைப்பாளரின் அடாவடியைக் கண்டிக்கிறது கூட்டமைப்பு

மட்டக்களப்பு,ஜூன்11

வேலையற்ற பட்டதாரி களுக்கு ஆண்டின் அடிப்ப டையிலேயே நியமனங்கள் வழங்கப்படும் என தெரி விக்கப்பட்டுள்ள நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யில் இணைவோருக்கு வேலை வாய்ப்பு என்று அக்கட்சியின் கல்குடா தொகுதி அமைப் பாளர் தெரிவித்துள்ளர். அவ் வாறான நிலைமையேற்பட் டால் அதற்காக சட்ட நட வடிக்கையெடுக்க தயங்கப் போவதில்லை என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் பா.அரிய நேத்திரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மையில் வேலை யற்ற பட்டதாரிகளுக்கு நிய மனம் வழங்குவது தொடர் பில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேர்முகப் பரீட்சை இடம்பெற்றது.

**வேலையற்ற பட்டதாரிகளை பொறுத்த வரையில் பல்வேறு கஷ்ட நிலைக்கு மத்தியில் கல்வி கற்று இன்று ஒரு தொழிலை எதிர்பார்த்து நீண்ட நாள்களாக பல்வேறு துன்பத்துக்குள் வாழ்ந்து வருகின்றனர்.**

இந்தப் பட்டதாரிகள் நியமனங்கள் தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் நில விய நிலையிலும், எதுவித அரசியலும் இன்றி ஆண்டு அடிப்படையில் பட்டதாரி களுக்கு நியமனங்கள் வழங் கப்படும் என்று மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கல்குடா தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப் பாளர் ஒருவர், பட்டதாரி களை வந்தாறுமூலையில் அம்பலத்தடி ஆலயத்துக்கு வருமாறு அழைத்து அவர் களை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணையுமாறும் இல்லாவிட்டால் நிய மனங் கள் வழங்கப்படாது என்றும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் பட்டதாரி கள் எனது கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர். வேலையற்ற பட்டதாரிகளை பொறுத்தவரையில் பல் வேறு கஷ்ட நிலைக்கு மத் தியில் கல்வி கற்று இன்று ஒரு தொழிலை எதிர்பார்த்து நீண்ட நாள்களாக பல்வேறு துன்பத்துக்குள் வாழ்ந்து வருகின்றனர்.

அண்மையில் மீள்குடி யேற்ற பிரதி அமைச்சர் விநாய கமூர்த்தி முரளிதரன் பட்ட தாரிகள் நியமனம் ஆண்டு அடைப்படையிலும் திறமை யின் அடிப்படையிலுமே வழங்கப்படும் என்று தெரி வித்திருந்தார்.

இந்த நிலையில் ஸ்ரீலங்கா அமைப்பாளர், பட்டதாரி களை அழைத்து கட்சியில் சேர்ந்தால்தான் தொழில் வாய்ப்பு, மற்றவர்கள் கூறு வது போன்று இல்லையென தெரிவித்திருப்பதானது முரண் பாடுகளைத் தோற்றுவித் துள்ளது.

அழைப்பு விடுத்த பட்ட தாரிகளிடம் தலா நூறு ரூபா பணத்தையும் அமைப்பாளர் பெற்றுள்ளதாக என்னிடம் பட்டதாரிகள் தெரிவித்துள் ளனர். இவ்வாறான நிலை யில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரின் செயற் பாடுகள் தொடர்பில் அரசு தெளிவுபடுத்த வேண்டும்- என்றார். (ச)

# கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டி இம்முறை அட்டாளைச்சேனை மைதானத்தில்

## சிறப்பாக நடத்துவதற்கு ஏற்பாடு

எருவில்,ஜூன்11

அட்டாளைச்சேனையில் இம்மாத இறுதியில் நடை பெறவுள்ள கிழக்கு மாகாண விளையாட்டுப்போட்டி சிறந்த முறையில் நடைபெறுவதற் காக அட்டாளைச்சேனை விளையாட்டுக்கழக சம்மேள னம் பல்வேறு நடவடிக்கை களை எடுத்து வருகிறது என சம்மேளனத்தின் தலைவர் ஹம்சா சனூஸ் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை விளை யாட்டுக்கழக சம்மேளனத் தின் விசேட நிர்வாக சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற் றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாண விளை யாட்டுப்போட்டி இம்முறை அட்டாளைச்சேனையில் நடைபெறுவது ஒரு வரலாற்று ரீதியான நிகழ்வாகும். அட்டா ளைச்சேனைக்கென்று ஒரு பொது விளையாட்டு மைதா னம் இல்லாத நிலையில், அன்று நாங்கள் போட்டி களில் கலந்து கொண் டோம். ஆனால், இன்று மாகாண விளையாட்டுப் போட்டியை நடத்தும் அள வுக்கு அட்டாளைச்சேனை யில் ஒரு மைதானம் உரு வாகியிருப்பதை எண்ணி சந்தோஷம் அடைகின்றோம்.

அம்பாறை மாவட்டத் தில் மாகாண விளையாட் டுப் போட்டி நடந்ததே இல்லை. ஆனால், இன்று அட்டாளைச்சேனை மண் ணுக்கு அந்த வரலாற்று ரீதியான வாய்ப்புக் கிடைத் துள்ளது. இந்த வாய்ப்பை நாங்கள் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அட்டாளைச்சேனை அஷ் ரப் ஞாபகார்த்த பொது விளையாட்டு மைதானத்தை அழகுபடுத்தும் செயற்பாட்டி லும், வீதி அலங்காரச் செயற் பாட்டிலும் விளையாட்டுக் கழக சம்மேளனம் முன் னின்று செயற்படும்.

எமது பிரதேசத்தில் நடைபெறவுள்ள மாகாண விளையாட்டுப் போட்டி திருப் திகரமாக அமைய வேண் டும் என்பதே எல்லோரினதும் விருப்பமாகும். அந்த வகை யில் எமது மண்ணுக்கு வரு கின்ற விளையாட்டு வீரர் களை சிறந்த முறையில் வர வேற்று உபசரிக்க வேண்டும்.

கடந்த காலங்களில் நடைபெற்ற மாகாண விளை யாட்டுப் போட்டிகளுக்கு கூடுதலான ரசிகர்கள் கலந்து கொள்வதில்லை என்ற கருத்து இருக்கின்ற நிலை யில், அட்டாளைச்சேனை யில் கூடுதலான ரசிகர்களை உள்ளீர்ப்பதற்கு நாம் முயற் சிக்கவேண்டும். அத்தோடு சம்மேளனத்தில் அங்கம் வகிக்கின்ற அனைத்து விளை யாட்டுக் கழகங்களும் பூரண ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும் - என்றார். (ச-31)



வாழைச்சேனையிலுள்ள கடையொன்றில் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக குறித்த கடை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

# சூழல் பாதுகாப்பு திட்டம்

மட்டக்களப்பு,ஜூன்11

பாதுகாப்பு அமைச்சின் அனுசரணையுடன் மட்டக் களப்பு மாவட்டத்தில் மாவட்ட கரையோரம் பேணல் திணைக் களத்தினூடாக சூழல் பாது காப்பு நடவடிக்கைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

நீடித்து நிலைக்கக்கூடிய கரையோர வலய முகாமைத் துவத்துடனான மீளமைப்புத் திட்டம் எனும் கருப்பொரு ளில் நேற்றுமுன்தினம் மாலை மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் இந்தத் திட்டம் அங்குரார்ப் பணம் செய்து வைக்கப் பட்டது. பிரதேச செயலாளர் கே.கிரிதரன் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ் வில், மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் கே.சிவநா தன், மாவட்ட கரையோரம் பேணல் திணைக்கள மாவட்ட பணிப்பாளர் கே.கோகுல தீபன், சூழல் அதிகாரி கே.தர் சன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

# பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களையே நடைமுறைப்படுத்துகிறது 'ஒஃபர்' நிறுவனம்

## நிறுவனத்தின் தலைவி தெரிவிப்பு

திருகோணமலை,ஜூன்11

இலங்கைத் தமிழ் மக் கள், கையேந்தும் சமூகமாக மாற்றப்பட்டுவிட்டனர் என்று சொல்வதற்கு இடம் கொடாது அவர்கள் பொரு ளாதார உயர்ச்சிபெற்று நிற் கக்கூடிய விதத்தில் வாழக் கூடியதான செயற்றிட்டங் களை இலங்கை ஒஃபர் நிறுவனம் நடைமுறைப் படுத்தி வருகின்றது என்று இலங்கை ஒஃபர் நிறுவனத் தின் தலைவி செல்வி.சி. சூரியகுமாரி தெரிவித்தார்.

இலங்கை ஒஃபர் நிறு வனம் திருகோணமலை நக ரில் ஆரம்பித்துள்ள உதயம் பசுப்பால் பதனிடல் மற்றும் விநியோக நிலையம் ஆகிய வற்றை திருகோணமலை பட் டினமும் சூழலும் பிரதேச செயலாளர் திருமதி சசி தேவி ஜலதீபனால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இடப்பெயர்வு மற்றும் இயற்கை இடர்கள் காரண மாக மக்கள் தன்னம்பிக்கையை இழந்துவிடக்கூடாது. அம் மக்கள் மத்தியில் தன்னம் பிக்கையைக் கட்டியெழுப்பி, அவர்கள் வாழ்வில் ஒளிமய மான எதிர்காலத்தை உருவாக் கிப் புதிய சமுதாயம் ஒன் றைக் கட்டியெழுப்ப வேண்டு மென்ற உன்னத உயரிய நோக்கத்துடன்தான் ஒஃபர் அமைப்பு வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலுள்ள எல்லா மாவட்டங்களிலும் செயற் பட்டு வருகின்றது. என்றா லும், ஒஃபர் அமைப்பின் இறுதிக் கனவு திருகோண மலையை மையமாக வைத்தே அமைந்துள்ளது - என்றார். (ச-40)

# பஸ் விபத்தில் 31 பேருக்கு காயம்

மாத்தளை,ஜூன்11

மாத்தளை - மஹியங் கனை பிரதான வீதியில் பஸ் ஒன்று குடை சாய்ந்து விபத்துக்குள்ளானதில் 31 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் சனிக் கிழமை இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரத்துக்கான சுற் றுலா பயணமொன்றை முடித் துக் கொண்டு திரும்பும் போதே பஸ் விபத்துக்குள் ளாகியுள்ளது. மணல் ஏற்றிச் சென்ற லொறி ஒன்றை விலத்திச் செல்ல முற்பட்ட போது பஸ் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகி யுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# இராசதுரைபுரம் கிராமத்தின் பெயர்ப்பலகைக்கு மை வீச்சு



முன்னாள் அமைச்சர் செ.இராசதுரை ஞாபகார்த்தமாக உள்ள இராசதுரைபுரம் கிராமத்தின் பெயர்ப் பலகைக்கு விஷமிகளால் கறுப்பு மைபூசி சேதப்படுத்தப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக மட்டக்களப்பு நகர் மற்றும் ஆரையம்பதிப் பகுதியில் அமைந்துள்ள பெரியார்களின் சிலைகள் உடைக்கப்பட்டுவரும் நிலையிலேயே இந்தச் செய லும் இடம் பெற்றுள்ளது. இந்தச் சிலை உடைப்பு செயல்களில் ஈடுபட்டு வரும் விசமிகளாலேயே குறித்த செயலும் இடம் பெற்றிருக்கலாம் என்று கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய் நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உறவினர்கள் தொடர்பான, விடயங்களில் பட்டும்படாமல் நடந்து கொள்ள வேண்டும். உடல் ரீதியாக சிறு தொந்தரவுகள் ஏற்பட்டு, பின்னர் சரியாகும். கடன் வாங்கி எந்த வேலையையும் செய்வதைத் தவிர்ப்பது நன்மை தரும். பெண்கள், வீட்டுப் பெரியவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டும். ஊக்கம், உற்சாகத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம்.

**இடபம்:** வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும் நாள். விருந்தினர்கள் வருகையால், கலகலப்பான சூழ்நிலை காணப்படும். சில வேலைகளைச் செய்யலாம் என்று திட்டமிட்டு, பின்னர் மாற்றி அமைக்கலாம். பிள்ளைகள் கல்வி விடயங்களில் அக் கறை காட்டுவீர்கள். உங்களிடம் வாக்குக் கொடுத்தவர்கள், அதை காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம்.

**மிதுனம்:** பொது விடயங்களில், அக்கறை காட்டுவீர்கள். நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர், உங்களின் வீடு தேடி வரலாம். தந்தை வழி உறவுகளால் அனுகூலம் பெறலாம். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். பெண்கள் கடும் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். வீட்டு உபயோகப் பொருள்கள் வழியில் செலவு ஏற்படலாம்

**கடகம்:** ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில், உதவிகளைப்பெறும் நாள். வீடு, நிலம் போன்றவற்றில் மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள். மனைவி உடல் நலன் தொடர்பான விடயங்களில், அதிக அக்கறை காட்டுவீர்கள். எதிலும் தடுமாற்றம் இல்லாமல், திட புத்தியுடன் செயற்பட்டு பாராட்டுக்களைப் பெறுவீர்கள். வசதி, வாய்ப்பு அதிகரிக்கும்.

**சிங்கம்:** உங்களைப்பற்றி புறம் பேசும் சிலரை, அடையாளம் கண்டுகொள்வீர்கள். பிள்ளைகள் பொறுப்போடு நடந்து பெருமை சேர்பார்கள். வெளியூர் பயணங்கள் விரும்பும் வகையில் அமையலாம். வியாபாரிகள் கடன் பிரச்சினைகளைச் சமாளிக்க நேரிடலாம். சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில், முன்னேற்றம் உண்டு. நட்பு வட்டம் விரிவடையும்.

**கன்னி:** கடனாகப்பெற்ற பணம் ஒன்றை, உடனே திருப்பிக் கொடுக்க வேண்டிய கட்டாயச் சூழ்நிலை உருவாகும். வெளியூர் பயணங்களால் அலைச்சல், சோர்வு உண்டாகும். சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்யலாம். குடும்ப உறுப்பினர்கள் சிலரை விமர்சித்து அவர்களின் அதிருப்திக்கு ஆள்படலாம். செலவு அதிகரிக்கும்.

## நாளை

வைகாசி 30 செவ்வாய்க்கிழமை 12.06.2012
திதி: அட்டமி மு.ப. 09.13 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி மு.ப 09.06 வரை
சுபநேரம்: 10.22 - 11.52 வரை
ராகு காலம்: 02.52 - 04.22 வரை

**துலாம்:** தேக ஆரோக்கியம், தெம்பு உற்சாகம் தரும். வாகனங்கள் வழியில் செலவுகளைத் தவிர்க்க, எதிலும் அவசரப்பட்டு செயற்படுவதைத் தவிர்க்க வேண்டும். நீங்கள் கேட்டபோது கிடைக்காத பணம் ஒன்று, இன்று கேட்காமலேயே கிடைக்கலாம். வியாபாரிகள் தொழில் ரீதியாக வெளியூர் பயணங்கள் செல்லும் வாய்ப்பு உருவாகும்.

**விருச்சிகம்:** வீண்பேச்சுக்கள் பேசி, நேரத்தை வீணடிப்பீர்கள். பொழுதுபோக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். உடன் பிறப்புகளின் வளர்ச்சியைக் கண்டு பெருமைப் படுவீர்கள். பெண்கள் விடயத்தில் சபலங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலர், கேட்ட உதவியை மறுக்காமல் செய்து, பெருமைப்பட்டுக் கொள்வீர்கள்.

**தனுசு:** பிள்ளைகள் விடயத்தில், அதிக கண்டிப்புடன் நடந்து கொள்வதைத் தவிர்க்க வேண்டும். உங்களின் தொழில் ரீதியான விடயங்கள் பற்றி, மற்றவர்களிடம் விவாதிக்க வேண்டாம். நோய்களால் உபாதைகளைச் சந்திக்கலாம். பேராசைகளைத் தவிர்த்து, கிடைப்பது கிடைக்கட்டும் என, பொறுமையாக இருப்பது நல்லது. மறதியால் அவதி உண்டு.

**மகரம்:** உறவினர்கள் சிலர் உங்களின் மூலம், காரியம் சாதித்துக் கொள்வர். மற்றவர்கள் உங்களைப் பார்த்து பொறமைப்படும் வகையிலான சம்பவங்கள் நடக்கலாம். பெண்கள் ஊக்கம், உற்சாகமாக காணப்படுவர். உறவினர் ஒருவர் தங்களுக்கு தெரிந்தவரை உங்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கலாம்.

**கும்பம்:** தந்தை தொடர்பான விடயங்களில், விட்டுக் கொடுத்து செல்லவும். தொழில் ரீதியான பிரச்சினை ஒன்றில், வழக்கத்தை விட கூடுதல் அக்கறையுடன் செயற்படுவீர்கள். உடன் பிறந்தவர்களுக்கு நல்ல ஆலோசனைகள் சொல்லி, அவர்களை நல்வழிப்படுத்துவீர்கள். கிடைத்த வருமானம் ஒன்றை சேமிப்பாக மாற்ற முற்படுவீர்கள்.

**மீனம்:** புதியவர்களை நம்பி, எந்த வேலையையும் ஒப்படைக்க வேண்டாம். மனைவி வழி உறவுகளால் அனுகூலம் பெறலாம். வீட்டைச் சீரமைப்பதில், அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். வெளியூர் பயணங்களால் சந்தோஷம் பெறலாம். பல நாள்களாகப் பார்க்காமல் இருந்த உறவினர் ஒருவரை, திடீரெனப் பார்க்க நேரிடலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | | | | | 1 | 5 | |
| | 3 | 6 | 1 | | 4 | | 2 | 8 |
| | | 5 | 8 | | 9 | 4 | | |
| | | | 2 | 3 | 6 | | | 5 |
| | | 9 | | | | 2 | | |
| 4 | | | 5 | 9 | 7 | | | |
| | | 3 | 7 | | 1 | 6 | | |
| 7 | 2 | | 6 | | 3 | 5 | 9 | |
| | 4 | 1 | | | | | | 2 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 6 | 9 | 4 | 2 | 3 | 8 | 5 |
| 8 | 5 | 9 | 7 | 6 | 3 | 1 | 2 | 4 |
| 3 | 4 | 2 | 5 | 1 | 8 | 7 | 9 | 6 |
| 2 | 3 | 4 | 6 | 9 | 1 | 8 | 5 | 7 |
| 9 | 7 | 1 | 3 | 8 | 5 | 6 | 4 | 2 |
| 5 | 6 | 8 | 4 | 2 | 7 | 9 | 3 | 1 |
| 6 | 2 | 7 | 8 | 5 | 9 | 4 | 1 | 3 |
| 4 | 8 | 5 | 1 | 3 | 6 | 2 | 7 | 9 |
| 1 | 9 | 3 | 2 | 7 | 4 | 5 | 6 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



ஷஷ்டியப்த பூர்த்தி விழா (மணிவிழா) வாழ்த்து
11.06.2012 இன்று இந்தியா, தமிழ்நாடு, திருக்கடவூர் அமிர்தகடேஸ்வரர் சந்நிதியில் மணிவிழா கொண்டாடும்
சிவஸ்ரீ இராம சூரியபிரபாகரக் குருக்கள்
ஸ்ரீமதி பாலகௌரி
தம்பதியினரை கும்பழாவளை விநாயகரின் பாதக்கமலங்களின் ஆசியுடன் பல்லாண்டு காலம் வாழ மேன்மேலும் வாழ்த்துகின்றோம்
அடுவம்பற்று அளவெட்டி.
வாழ்த்துபவர்கள் ச. பரமேஸ்வரக்குருக்கள் குடும்பத்தினர்.
(இ/549) (45.6.9)

வீடு வாடகைக்கு
கொடிகாம வீதி, நெல்லியடியில் வீடு வாடகைக்குண்டு.
நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு : 077 6116058
(19172)(6-8-9)

வீட்டுக்கு ஹோட்டலுக்கு
நாடுமுழுவதும் விநியோகம்
மொத்தமான கொள்வனவுக்கு விஷேட கழிவு
TITUS
பூவே செட்
கண்ணாடிக் குவளைகள்
www.titusstores.com
டைட்டஸ் ஸ்டோர்ஸ்
புறக்கோட்டை லிபேட்டி பிளாஷா மஜெஸ்டிக்சிடி
HOTLINE: 0777-384671
(C/687)


ஷஷ்டியப்த பூர்த்தி விழா (மணிவிழா) வாழ்த்து
11.06.2012 இன்று இந்தியா, தமிழ்நாடு, திருக்கடவூர் அமிர்தகடேஸ்வரர் சந்நிதியில் மணிவிழா கொண்டாடும்
சிவஸ்ரீ இராம சூரியபிரபாகரக் குருக்கள்
ஸ்ரீமதி பாலகௌரி
தம்பதியினரை கொழும்பு செட்டித்தெரு முத்துவிநாயகரின் ஆசியுடன் சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.
கொழும்பு செட்டித்தெரு.
வாழ்த்துபவர்கள் ந. கேதீஸ்வரக்குருக்கள் குடும்பத்தினர்.
(இ/550) (45.6.9)

Blender
Price Rs. 6,200/- Up
Kettles
1.5 Lt, 1.7 Lt & 1.8 Lt
Price Rs. 3,200/- Up
Induction Cooker
Price Rs. 7,800/-
Rechargeable Fans
Price Rs. 4,800/- Up
Steam Iron
Price Rs. 3,300/-
Emergency Lamp
Price Rs. 2,600/- Up
Emergency LED Lamp
Price Rs. 4,800/- Up
Subwoofers- 5.1
Price Rs. 16,500/- Up
Laptop Speakers
Price Rs. 1,100/- Up
Portable DVD
7.5 Inch with TV Option
Price Rs. 11,700/-
DVD Player with HDMI Connector
Price Rs. 8,400/- Up
Hot Line 077 3126712
MICRO PC SYSTEMS
Consumer Electronics
#115 C, W.A. Silva Mawatha, Colombo- 06
Tel: 0114 000 686, 0112 367 675
Email: mail@micropcsystems.com
Website: www. micropcsystems.com
SHOWROOMS
யாழ்ப்பாணம் : # 218, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.p- 021 2225893
நெல்லியடி : கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.p- 021 2262929
வெள்ளவத்தை : # 155C, W.A சில்வா மாவத்த, வெள்ளவத்தை. T.p- 011 22867405
கொட்டாஞ்சேனை : # 82, புதிய செட்டித்தெரு, கொட்டாஞ்சேனை. T.p- 011 2395775
80% Energy saving
Rechargeable Torch
Min 300 to 2500 meter coverage
Price Rs. 3,600/- up
LED Bulbs
Price Rs. 1,400/-
Mr. Plus Something for everyone
Mr. Light Lights your life
Quintas Ads
(19156)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்துகள் தொடர்பான சட்டத்தை விரைவாக கொண்டுவர வேண்டும்

## அரசுக்கு நீதிமன்றம் பணிப்பு

கொழும்பு,ஜூன்11

சகல நபர்களினதும் உரிமைகளைப் பேணிப் பாதுகாக்க இயன்றளவு விரைவாக மருந்துகள் தொடர்பான சட்டத்தை இயற்றுவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று உயர்நீதிமன்றம் கருத்து வெளியிட்டுள்ளது.

மருத்துவத்துக்கான மருந்துகள், உபகரணங்கள், அலங்காரப்பொருள்கள், போஷணைப் பொருள்களை ஒழுங்குபடுத்தும் சட்டம், நீதிமன்றத்தின் முன்வந்தபோது நீதிபதிகள் குழாம் மேற்கண்டவாறு தெரிவித்தது.

இந்தச் சட்டத்தை கொண்டுவரக்கோரும் மனு கடந்த 2009ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதி தாக்கல் செய் யப்பட்டது. இந்தச் சட்ட வரைவை பூரணப்படுத்தும்படி பல காலக்கெடுக்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. இந்தச் சட்டமூலம் இன்னும் சட்டவரைஞர் திணைக் களத்தில் இருப்பதாக நீதிமன்றம் சுட்டிக் காட்டி, தேசிய மருந்துப் பொருள்கள் கொள்கையை உருவாக்குவதில் சகல நபர்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக உரிய சட்டங்களை நிறைவேற்ற அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டுமென கருத்து வெளியிட்டது.

இது தொடர்பில் விரைவான நடவடிக்கை எடுப்பதற்காக இந்த கட்டளையின் பிரதிகளை சுகாதார அமைச்சர், அமைச்சின் செயலாளர், சட்ட வரைஞர் திணைக்களம் என்பவர்களுக்கு அனுப்புமாறு நீதிமன்றம் நீதிமன்ற பதிவாளருக்கு அறிவுறுத்தியது.

இந்த வழக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ச)



கொழும்பு பிஷப் கல்லூரி மாணவிகளின் வருடாந்த நடைபவனி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடை பெற்றது. இந்தநிகழ்வில் மாணவிகள், ஆசிரியைகள்,, பழைய மாணவிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# இலங்கை மாணவர்களுக்கு இந்தியாவால் புலமைப் பரிசில்

## இலங்கைக்கான இந்திய உதவித் தூதர் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்11

இலங்கை மாணவர்களுக்கு இந்தியா பல துறைகளில் புலமைப் பரிசில்களை வழங்கத் தயாராக உள்ளது என்று இலங்கைக்கான இந்திய உதவித் தூதர் ஏ.நடராஜன் தெரிவித்தார்.

கண்டி அசோக்கா வித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இந்தநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

> சில குறிப்பிட்ட சிறப் புத் துறைகளுக்கு புலமைப் பரிசில்களை வழங்கி கல்வி நடவடிக்கைக்கு உதவத் தயாராக இந்தியா உள்ளது.

கல்வித்துறையில் இந்தியா, இலங்கைக்கு பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது. அதன் அடிப்படையில் சில குறிப்பிட்ட சிறப்புத் துறைகளுக்கு புலமைப் பரிசில்களை வழங்கி கல்வி நடவடிக்கைக்கு உதவத் தயாராக இந்தியா உள்ளது.

பொறியியல், பல் வைத்தியம், ஹோட்டல் முகாமைத்துவம், சுற்றுலாத்துறை, விஞ்ஞானத்துறை, சமூக விஞ்ஞானத்துறை, தகவல் தொழில்நுட்பம் போன்றவற்றுக்கு எல்லை இல்லாத வாய்ப்புக்கள் இன்று திறந்து விடப்பட்டுள்ளன. இவற்றுக்கு பெருமளவு பணம் செல வழித்து அக்கல்வியை பலர் பெற்றுக் கொள்கின்றனர். இவ்வாறான துறைகளுக்கு குறைந்த செலவில் நிறைய வாய்ப்புக்கள் இந்தியாவில் காணப்படுகின்றன- என்றார். (ச)

# குருக்களிடம் கப்பம் கேட்ட 2 பேர் கைது

கொழும்பு,ஜூன்11

இரத்தினபுரி - றக்குவானை முத்துமாரியம்மன் ஆலயக் குருவை பய முறுத்தி கப்பம் கோரிய குற்றச்சாட்டில் இரண்டு பேர் நேற்று முன்தினம் சனிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட வர்களைப் பிணையில் செல்ல அனுமதிக்கப் போவதில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் றக்குவானை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆரியரத்ன மற்றும் சப்ரகமுவ மாகாண உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குமாரசிறி ஆகியோரிடம் தொடர்பு கொண்டு கலந்துரையாடியுள்ளார்.

சந்தேகநபர்கள் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்படும் என்று பொலிஸ் அதிகாரிகள் உறுதியளித்தனர் என்று மனோகணேசன் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

16 வயதான இளைஞனே ஆலய குருக்களிடம் மோசடியாக நிதிபெற முனைந்ததாக தெரியவந்துள்ளது. மற்றையவர் அவருக்கு உடந்தையாக செயற்பட்டவர் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

# டெங்கு காய்ச்சலால் ஆசிரியை சாவு

கொழும்பு,ஜூன்11

கற்பிட்டி, ஏத்தாளை கிராமத்தில் டெங்கு காய்ச்சல் காரணமாக ஆசிரியை ஒருவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை உயிரிழந்துள்ளதுடன் குறித்த கிராமத்தில் ஒரு மாதத்துக்குள் 30 இற்கும் மேற்பட்டோர் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கற்பிட்டிக்குட்பட்ட பாடசாலையொன்றில் ஆசிரியராக கடமையாற்றும் 2 பிள்ளைகளின் தாய் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

டெங்கு காய்ச்சல் காரணமாக குருநாகல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# மயில்களிலிருந்து பரவும் ஒருவகை காய்ச்சல்

## மக்கள் மத்தியில் பீதி

கொழும்பு,ஜூன்11

மயில்களிலிருந்து பரவுவதாக நம்பப்படும் வெள்ளை நிற உண்ணிகளால் ஹபராதுவ, இமதுவ தேயிலைத் தோட்டத்தை அண்மித்த கிராமவாசிகள் பீதிக்குள்ளாகியுள்ளனர்.

அரைக் கொத்தமல்லியின் அளவைக் கொண்டுள்ள இந்த உண்ணிகள், மயில்கள் பறக்கும்போது கீழே விழுந்து மனித உடல்களில் ஒட்டிக்கொள்கின்றன என்று தெரியவந்துள்ளது. தோளில் ஒட்டிக்கொள்ளும் இந்த உண்ணியை அகற்ற வேண்டுமாயின் உப்பு நீர் அல்லது சுண்ணாம்பு நீர் பயன்படுத்த வேண்டியுள்ளது. இதனையும் மீறி அவற்றை அகற்ற முற்பட்டால் காயங்கள் ஏற்படுகின்றன என்று பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். இந்த உண்ணிகள் காரணமாக, அரிப்பு, வீக்கத்துடன் காய்ச்சல் ஏற்படுவதாகவும் இதனால் டைபிஸ் காய்ச்சல் ஏற்படும் வாய்ப்பு உள்ளது என்றும் வைத்தியர்கள் எச்சரித் துள்ளனர். (ச)

## 12 வயதுக்கு குறைந்த

# பசுவைக் கொல்லத் தடை கடுமையாகிறது சட்டம்

கொழும்பு,ஜூன்11

12 வயதுக்கு குறைந்த பசுக்களை இறைச்சிக்காக கொலைசெய்வது உட்பட விலங்குகளை துன்புறுத்துவதற்கு எதிரான சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்கவுள்ளனர்.

தற்போதுள்ள சட்டத்தின் பிரகாரம், 12 வயதிலும் குறைந்த பசுக்களை இறைச்சிக்காக கொல்ல முடியாது.

இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்யும் முகமாக இறைச்சிக்காக பசுக்களை கொலை செய்யும் மடுவங்கள் கடுமையாகக் கண்காணிக்கப் படவுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# மலவாயிலில் ஹெரோயினை மறைத்து வைத்திருந்தவர் கைது

ஆயுள்தண்டனைக் கைதி ஒருவரின் மலவாயிலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஐந்து கிராம் ஹெரோயின் போதைப்பொருளை நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கண்டிப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கண்டி,போகம் பரை சிறைச்சாலையிலுள்ள ஆயுள் தண்டனைக் கைதி ஒருவரே தனது மலவாயிலில் ஹெரோயின் போதைப் பொருளை மறைத்து வைத்திருந்துள்ளார்.

வழக்கு விசாரணைக்காக கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்ட கைதிகள் மீண்டும் போகம்பரை சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்டபோது, கைதியொருவரிடம் போதைப்பொருள் இருப்பதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து கண்டி நீதிவானின் அனு மதியுடன் பொலிஸார் போகம்பரை சிறைச்சாலையில் சந் தேகத்துக்குரிய இரண்டு கைதிகளை சோதனைக்கு உட்படுத்தியபோது குறித்த கைதியிடம் இருந்து ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச)

# போதை அடிமை பற்றி ஆய்வு நடத்துவதற்குத் தீர்மானம்

## சுகாதார அமைச்சு தகவல்

கொழும்பு,ஜூன்11

இலங்கையில் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் தொடர்பில் அடுத்த மாதம் தொடக்கம் விசேட ஆய்வுகளை நடத்தவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த நடவடிக்கை அரச அதிபர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம சேவகர் மற்றும் பிரதேச சுகாதார சேவையாளர் பிரிவு களின் ஊடாக செயற்படுத் தப்படவுள்ளது.

நாட்டில் தற்போது 40 தொடக்கம் 55 வயதுக்கு உட்பட்டவர்கள் போதைப்பொருள் மற்றும் புகைத்தல் பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக சுகாதார மற்றும் சமூக ரீதியான முறைகேடுகள் இடம்பெற்று வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. வருடாந்தம் போதைப்பொருள் மற்றும் புகைத்தல் தொடர்பான நோய்களால் பாதிக்கப்படுவோருக்கு சிகிச்சையளிப்பதற்கு நாட்டின் தேசிய வருமானத்தில் பெரும் தொகை நிதி செலவிடப்படுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டு ஆய்வுகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

இந்த ஆய்வில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் முழு மையான புள்ளிவிவரங்கள் கிடைக்கும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எனவே, எதிர்காலத்தில் போதைப் பொருள்களுக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான விரிவான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலைக்கேள்விக்கான கோருதல்
## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

1. தவிசாளர், பிரதேச சபை பெறுகைக்குழு, சார்பில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூரிற்காக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.

2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

3. விலைக்கேள்வியாளர்கள் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு M7/C8 தரத்தினை அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம்பெறாதவராயிருத்தலும் வேண்டும்.

4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி IV (Section-IV) இலும், மேலதிகத் தகவல்கள் பகுதி V(Section-V) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

5. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் (தொலைபேசி இல.: 021-3735445) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் இம்முகவரியில் 9.00 மணியிலிருந்து 15.00 மணி வரை அலுவலக நாள்களில் விலைக்கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.

6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தவிசாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் (தொலைபேசி இல.: 021-3735445) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 11.06.2012 முதல் 02.07.2012 வரை 9.00 மணியிலிருந்து 15.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான ரூபா 2,000/= ஐ கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

7. விலைக்கேள்விகள் 03.07.2012 ஆம் திகதியன்று 14.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தவிசாளர், பிரதேச சபை பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதர விரும்பும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் 03.07.2012 ஆம் திகதியன்று 14.00 மணிக்கு விலைக் கேள்விகள் திறக்கப்படும்.

8. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூரில் 18.06.2012 அன்று 10.30 மணிக்கு நடைபெறும்.

9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்வி பிணைப்பொறுப்பு கேள்வியுடன் இணைக் கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விவரம் | அண்ணள வான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்தக் காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணை விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை | தேவைப்படும் காலம் |
| CLG/VEPS/BUS/2012/02 | அச்சுவேலி நகரில் பேருந்து நிலையம் நிர் மாணித்தல் | 3.94 | 2½ மாதங்கள் | M7/C8 அல் லது அதற்கு மேல் (கட்ட டங்கள்) | 60,000.00 | 15.10.2012 வரை |

அ.உதயகுமார்,
தவிசாளர்,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.

(சீ/561)

## அமில மழைக்கான சாத்தியம்

இலங்கையில் அமில மழை பெய்யக் கூடிய ஆபத்து இருப்பதாக கொழும்பு மாநகர சபையின் பிரதி சுகாதார அதிகாரி ருவன் விஜேமுனி தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் பெய்த மழையில் அமிலத் தன்மை காணப்பட்டமை பேராதனைப் பல்கலைக்கழக இரசாயனப் பிரிவினால் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (16)

**யனோசிகா புத்தகசாலை**

சகல பாடசாலை உபகரணங்கள் புலமைப்பரிசில்-
O/L, A/L வினாவிடைத் தாள்கள் - (கடந்தகால)
சமய, சுற்றாடல் பாலர் புத்தகங்கள் விற்பனையில்
சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய்.
(19175) (45.6.9)

**The Royal College of Jaffna**

சுலபமான முறையில் ஆங்கிலத்தில்
கதைக்கப்பயில தனியாகவோ,
சிறுகுழுக்களாகவோ. By. ந. விக்னேஸ்வரன்
ஆச்சாரி சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய்.
தொ.பே. 077 675 1649 (19174) (45.6.9)

சிவமயம்

"வீரமாகாளியை சரண் புகுந்தால் வீரசக்தி பெறலாம்"



## மனமார்ந்த நன்றிகள்


யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை
அருள் மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன்
ஆலய வருடாந்த மஹோற்சவ
பெருவிழாவை

முன்னிட்டு அடியார்களின் நலன் கருதி ஆலய வெளி வீதி எங்கும் மணல் பரப்பியும், காலையும் மாலை யும் தண்ணீர் விசிறுவதற்கும், ஆலய வெளி வீதியில் எங்கும் மின்சார வசதி களை ஏற்படுத்திக் கொடுத்தமைக்கா கவும் கௌரவ அமைச்சர் **கே.என். டக்ளஸ் தேவானந்தா** (பாரம்பரிய சிறுகைத்தொழில் அமைச்சு) அவர்களுக்கும் மற்றும் இப்புனித பணியில் உதவிய அனை வருக்கும் எமது நன்றிகளைத் தெரி வித்துக் கொள்கின்றோம்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

தேவஸ்தானம்
சி.கமல்ராஜ்குருக்கள்.
(19177) (45.6.9)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## உயர் திரு. சுந்தரம் அருமைநாயகம்
(G.A)

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தின் புகழ் பெற்ற கிராமமான அக்கரைப்பற்றைப் பிறப்பிடமாகக் கொண்ட, இலங்கையின் நிர்வாக சேவையில் உயர்தரத்தில் இருக்கும் என்னுடன் பல்கலைக்கழகத்தில் ஒன்றாகக்கல்வி கற்ற என் ஆருயிர் நண்பன் சுதாகரனின் அன்புத்தந்தை உயர் திரு. சுந்தரம் அருமைநாயகம் அவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசஅதிபராகக் கடமையாற்றி யாழ். மாவட்டத்தின் அரச அதிபராகப் பதவி ஏற்றிருப்பதை இட்டும் அவரின் நிர்வாகப் பணி தொடரவும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
திரு. வன்னிமரம் அரவிந்தன்
B.A (Hons) 2nd Upper
Political Science Special, M.A. Pub .Ad
திருமதி அரவிந்தன் சுமீரா

(சி/563)(6-8-9)

உங்கள்
தராதரத்தை
உயர்த்திக் கொள்வதற்கான
அரிய சந்தர்ப்பம் !



**ஒளிமயமான எதிர்காலத்துக்கான முன்னோடிகளுடன் இணைந்திடுங்கள் !!**

## சர்வதேசத் தராதரமுடைய சான்றிதழுக்கான கற்கைநெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

ICDL International Computer Driving Licence — Just 6,500/= ONLY

e - Citizen — Just 3,500/= ONLY

**ஆரம்பம் 16.06.2012 சனிக்கிழமை காலை 10.30**

காலம் : 03 மாதங்கள் / 120 மணித்தியாலங்கள்


USAID | SRI LANKA
FROM THE AMERICAN PEOPLE

ASAP
Accelerated Skills Acquisition Program
Empowering Youth Through Career Skills

## துரித திறன்பெறுகை நிகழ்ச்சித் திட்டம்

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில மொழித் திறன்கள், கணனித்திறன்கள் மற்றும் வியாபார தொழில் முயற்சியாண்மைத் திறன்கள் அடங்கலான கற்கைநெறி முற்றிலும் இலவசமாக நடாத்தப்படவுள்ளது.

## Photoshop CS5



தொழில் வாய்ப்பைக் கொண்ட திறன் சார் கற்கை நெறி


காலம் : 03 மாதங்கள்

மேலதிக தகவல்களுக்கு : (சி/564)

GATEWAY

347, Kasthuriyar Road, Jaffna
Phone : 021 567 5555 Fax : 021 222 7967
E - mail : gatewayjfn@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# இலங்கைப் பொருள்களை புறக்கணியுங்கள் சென்னையில் விழிப்பூட்டல் பரப்புரை

சென்னை, ஜவஹர் நகரில் உள்ள சந்தை ஒன்றுக்கு முன்னால், இலங்கை உற்பத்திப் பொருள்களைப் புறக்கணிக்கக்கோரும் விழிப்பூட்டல் பரப்புரை போராட்டமொன்று இடம்பெற்றுள்ளது.

'இலங்கைத் தயாரிப்பு பொருள்களைப் புறக்கணியுங்கள்' என்ற முழக்கத்துடன், குறித்த சந்தைக்கு முன்னால் ,வாடிக்கையாளர்களை நோக்கி துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.




இதுதொடர்பில் ஒருவர், பல வாடிக்கையாளர்களுக்கு எது இலங்கைத் தயாரிப்புகள் என்றே தெரியவில்லை. அதனால் அவர்களுக்கு இலங்கை தயாரிப்பு பிஸ்கட், இனிப்புகள், கேக்குகள் முதலியவற்றை அடையாளம் காட்டினோம் எனத் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்றில், இலங்கை அரசு மீது பொருளாதாரத் தடையைக் கொண்டுவருமாறு, இந்திய மத்திய அரசை, தமிழக அரசு கடந்தாண்டு கோரியிருந்தது. இலங்கைப் பொருள்களைப் புறக்கணிக்கக்கோரும் விழிப்பூட்டல் போராட்டங்கள் , சென்னையின் பல இடங்களில் ஏலவே இடம்பெற்றுள்ளன.

இனப்படுகொலை செய்த இலங்கை அரசைப் புறக்கணிப்போம் என்று முதன்மை முழக்கத்துடன், இலங்கையின் பொருள்கள், கிரிக்கெற், விமானசேவை, பரிவர்த்தனைகள், உல்லாசத்துறை ஆகியனவற்றைப் புறக்கணித்தலே, இந்த விழிப்பூட்டல் பரப்புரையை மேற்கொள்பவர்களின் கோரிக்கைகளாக அமைந்துள்ளன. (வ)

# சட்டவிரோதமாக லண்டனில் தங்கியிருந்த இலங்கையர் கைது

உள்நுழைவு வீசா காலாவதியானதன் பின்னும் சட்டவிரோதமான முறையில் பிரிட்டனில் தங்கியிருந்த இலங்கையைச் சேர்ந்த ஆண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். 30 வயதான இந்த நபர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு லண்டனில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

**இந்தநபர் புகலிடம் கோருவதற்காக அங்கு ஒரு பெண்ணைத் திருமணம் செய்ய முயற்சித்த வேளையில் கைது செய்யப்பட்டுள்ளார்.**

இந்தநபர் புகலிடம் கோருவதற்காக அங்கு ஒரு பெண்ணைத் திருமணம் செய்ய முயற்சித்த வேளையில் கைது செய்யப்பட்டுள்ளார். 68 வயதான பிரிட்டன் பிரஜை ஒருவரின் வீட்டிலேயே இவர் தங்கியிருந்துள்ளார். அந்த பிரிட்டன் பிரஜையிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது இலங்கையர் பற்றிய விவரங்கள் தெரிய வந்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டனில் வேலை மற்றும் பிற நன்மைகளைப் பெற முயற்சிக்கும் ஒரு வழிமுறையாக யாரையாவது திருமணம் செய்து போலியான திருமண வாழ்க்கையைப் பதிவு செய்வதாக குடிவரவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (வ)

## திண்மக்கழிவு முகாமைத்துவ செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 11

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களுக்கு திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான விசேட செயலமர்வு கொழும்பில் இடம்பெற்றுள்ளது. வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திர சிறி தலைமையில் இந்த முகாமைத்துவ செயலமர்வு இடம்பெற்றுள்ளது. இந்தச் செயலமர்வின் விரிவாக்கம் தொடர்பாக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் மாவட்ட மட்ட உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களுக்கு விளக்கமளிப்பர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-41)

## பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் கணினி வன்பொருள்பயிற்சிநெறிக்கு யாழ். பயிற்சி நிலையத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ஆர்வமுடையவர்கள் தமது சுயவிவரத்தை மாவட்ட முகாமையாளர்நாற்றா, இல. 07, கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கலாம். (வ-14)




தென்மராட்சி, ஜூன் 11

மட்டுவில் வடக்கு ஸ்ரீ மகா முத்துமாரியம்மன் ஆலய புனராவர்த்தன பிரதிஸ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.14 மணிக்கு நடைபெறும்

கும்பாபிஷேகக் கிரியைகள் நேற்று ஆரம்பமாகின. அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் நடைபெறும்.

'பண்டிதர்' 'கலாநிதி' சிவஸ்ரீ ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகக் கிரியைகள் நடைபெறும்.

முத்துமாரி அம்மனுடன், பிள்ளையார், முருகன், சந்தானகோபாலர், நவக்கிரகம், வைரவர், சண்டேஸ்வரி ஆகியோருக்கான மகா கும்பாபிஷேகமும் நடைபெறும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பராமாச்சார்ய சுவாமிகள் ஆசியுரையையும் பிரம்மஸ்ரீ சி. இராமச்சந்திர சர்மா வாழ்த்துரையையும் தெல்லிப்பழை துர்க்காபுரத்தைச் சேர்ந்த கா.சிவபாலன் சிறப்புரையையும் நிகழ்த்துவர். (வ-9)

* * *

சுன்னாகம், ஜூன் 11

அண்மையில் மஹாகும்பாபிஷேகம் இடம்பெற்ற ஆவரங்கால் சிவன்கோயிலில் 48 நாள்களாக மண்டலபிஷேகம் இடம்பெற்று நிறைவு நிகழ்வு இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இதனையொட்டி காலை 8 மணிக்கு சகஸ்ரகலச சங்காபிஷேகம் இடம்பெற்று நண்பகல் ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்தில் அன்னதானம் இடம்பெறும்.

மாலை 7 மணிக்கு விசேட பூசை, திருவூஞ்சல் இடம்பெற்று திருப்பூந்தண்டிகையில் சுவாமி ஊர்வலம் வரும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (வ-38)

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஜூன் 11

கோண்டாவில் பொதுநூலகத்தின் ஏற்பாட்டில் நூலக வலுவூட்டல் நிகழ்வை முன்னிட்டு தனிமனித ஆளுமை விருத்தி தொடர்பான பயிற்சிப்பட்டறை நடத்தப்படவுள்ளது.

வேலைவாய்ப்புகளிலும், வெற்றிகரமாக சமூக வாழ்விலும் எதிர்பார்க்கப்படும் தனிமனிதத் திறன்களை மேம்படுத்தும் நோக்குடனும், சுய மதிப்பீடு செய்வதற்காகவும் நடத்தப்படும் இந்தப் பயிற்சிப்பட்டறையில் ஆர்வலர்கள் கலந்து பயன்பெறலாம்.

நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் மேரிஜோசப் சாந்தசீலன் வளவாளராகக் கலந்து கொண்டு ஆலோசனைக் கருத்துரைகளை வழங்குவார்.

ஆர்வமுடையவர்கள் தமது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் உள்ள [illegible] கோண்டாவில் பொதுநூலகத்துக்கு நேரிலோ, தபால் மூலமோ அனுப்பி வைக்கலாம். (வ-14)


# கண்ணீர் அஞ்சலி



சைவ பரிபாலன சபையின் நீண்டகால ஆயுள் உறுப்பினராகவும், நிர்வாக சபை உறுப்பினராகவும், சபையின் வளர்ச்சியில் உறுதுணையாக இருந்தவருமான

## அப்புத்துரை தற்பரானந்தன்

அவர்கள் இறைபதமடைந்தமையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

(19134) யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை.

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:- 04.08.1937

மறைவு:- 11.06.2004

## அமரர் தில்லையர் குலவீரசிங்கம்

( கிறிக்கட் அங்கிள்)

( ஓய்வு பெற்ற நீதிமன்ற லிகிதர்)

ஆசையாய் என்னைப் பெற்று வளர்த்து
அறிவும் பண்பும் புகட்டி வளர்த்த என் அப்பாவே.....
தெய்வத்துள் நீங்கள் நிறைந்துவிட்டாலும்
வையத்துள் வாழும் நான்
நித்தமும் உங்கள் நினைவோடுதானப்பா
என் அன்புக்குரிய அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்

பெரிய மதவடி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம் (18839)(6-8-9)

ஆனந்தி (மகள்) மற்றும் குடும்பத்தினர்

# மணிவிழாக்காணும் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர்

## திரு. ப. விக்னேஸ்வரன்

அவர்களுக்கு வாழ்த்து



யாழ்ற்ரன் அன்னையிடம் கல்வியைக்கற்று
கல்லூரித் தாயினைப் பெருமையுறச் செய்த
விக்னேஸ்வரன் என்னும் பெருந்தகையே!
உயர்தரக்கணிதத்தின் நல்ஆசானாய்
கோட்டக்கல்வி அதிகாரியாய்
வலயக்கல்விப் பணிப்பாளராய்
வடமாகாணக்கல்விப் பணிப்பாளராய்
பதவிகள் பலவும் அலங்கரித்து
கல்விப்பணியினை சிறப்புறச்செய்யும்
மணிவிழாக்காணும் நாயகனை
மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

கல்வி, கல்விசாரா
ஊழியர் நலன்புரி சங்கம்
யா/யாழ்ற்ரன் கல்லூரி,
காரைநகர்.

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.

(19122) (6,9,10)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 15★06★1942

மறைவு 12★05★2012

## திருமதி கந்தையா மகேஸ்வரி

கடந்த (12.05.2012) சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி திருமதி கந்தையா மகேஸ்வரி அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் (09.06.2012) சனிக்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (11.06.2012) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் இதில் கலந்து கொண்டு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் பிரிவுச் செய்தி கேட்டு நேரடியாகவும், தொலைபேசி மூலமும் அனுதாபச்செய்தி கூறிய அன்பு உள்ளங்களிற்கும் மற்றும் பல வழிகளில் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்

கள்ளிநகர்
கைதடி கிழக்கு, கைதடி (சீ/560)(6-9-8)

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி ஒரு மந்திரி என்பதை நிரூபியுங்கள்



- சந்தியா

திருமணமான பெண்களுக்கு பன்முகத்திறமை உண்டு. சிறந்த இல்லத்தரசியாகவும், கணவருக்கு சிறந்த மனைவியாகவும், குழந்தைகளுக்கு சிறந்த தாயாகவும் கடமையாற்ற வேண்டும். இதில் சிக்கலான விடயம் கணவரிடம் சிறந்த மனைவி என்ற பெயரெடுப்பதுதான். மனைவி என்பதை அதிகாரம் செய்யும் பதவியாக எடுத்துக்கொண்டு கணவரை அடிமையாக நடத்துபவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். மனைவியாக இருப்பதைவிட கணவருக்கு நண்பியாக இருப்பதுதான் சிறந்தது என்று உளவியலாளர்கள் தெரிவித்துள்ளனர். சிறந்த மனைவியாகவும், ஆலோசகராகவும் திகழ நினைப்பவர்களுக்கு உளவியல் நிபுணர்கள் தெரிவித்த சில யோசனைகள்

**மனைவி ஒரு மந்திரி:-**

கணவரின் முதல் ஆலோசகரும், விமர்சகரும் மனைவிதான் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளுங்கள். மனைவி ஒரு மந்திரி என்பதை அனைத்து சந்தர்ப்பத்திலும் கணவருக்கு உணர்த்த வேண்டும். கணவரின் அனைத்து தேவைகளையும் நிறைவேற்றுவதோடு மட்டும் மனைவியின் கடமை முடிந்து விடுவதில்லை. தவறுகளை எடுத்துக் கூறித் திருத்துவதற்கும் உரிமை உண்டு.

**புரிதல்தான் வாழ்க்கை:-**

கணவன் மனைவிக்கிடையே ஒரு சில நேரங்களில் கருத்து மோதல்கள் ஏற்படுவது இயல்பு. ஆனால் அவற்றை சாதாரணமாக எடுத்துக்கொண்டு உடனடியாகத் தீர்ப்பதில் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். தேவையற்ற விவாதங்களைத் தவிர்த்தால் குடும்பத்தில் சிக்கல்கள் ஏற்படுவதைத் தடுக்கும்.

**ஈகோவை துரத்துங்கள்**

கணவரிடம் பேசும்போது, வெளிப்படுத்தும் வார்த்தைகளில் அன்பும் கனிவும் மட்டுமே இருக்கவேண்டும். அதிகாரமோ, ஆணவமோ தேவையில்லை. சிறு வார்த்தை கூட மனதளவில் காயத்தை ஏற்படுத்திவிடும். நீங்கள் பேசும் வார்த்தைகள் எளிதாக உங்கள் கணவரைச் சென்றடைந்து அதைச் செயற்படுத்தும் விதமாக அமைய வேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் ஈகோவை எட்டிப்பார்க்க விடாதீர்கள்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் பிறரின் முன் கணவரை விமர்ச்சிக்க வேண்டாம். குழந்தைகளின் முன் கூட கணவரை விமர்ச்சிப்பது தவறான முன் உதாரணமாகிவிடும். கணவர் செய்வது தவறாகவே தெரிந்தாலும், தனியாக இருக்கும் சந்தர்ப்பங்களில் பேசி அவரது தவறைப் புரிய வைக்க வேண்டும். கணவர் என்பவர் காலம் முழுவதும் நம்முடன் வரப்போகிறவர் என்ற எண்ணம் மனைவிக்கு இருக்க வேண்டும். கணவரின் மதிப்பை உயர்த்துவது மனைவியின் கடமை. அசாதாரண சந்தர்ப்பங்களில் கணவரின் நண்பர்கள் உங்கள் வீட்டுக்கு வர நேர்ந்தால் நீங்கள் நடந்து கொள்ளும் விதம்தான் அவர்களிடம் மதிப்பை உயர்த்தும் என்பதை மறவாதீர்கள்.

## அம்மா

ஒரு பெண்ணைப் பார்த்தவுடன்
நீ நேசிக்கின்றாய்..
இங்கு உன்னைப் பார்க்காமலே
நேசித்தவள் அம்மா.. அவளை
நேசிக்க மறந்து விடாதே மனிதா...!



# மௌனங்கள் உடையட்டும்!



மனிதன் தோன்றிய காலம் முதற்கொண்டே பல்வேறு கொடுமைகளை அனுபவித்து வாழ்கின்றான். அதிலும் பெண்களுக்கு கொடுமைகளும் வன்முறைகளும் அவள் கருவில் இருக்கும் போதே ஆரம்பித்துவிடுகின்றன. கருவில் இருப்பது பெண்தான் என்று தெரிந்துவிட்டால் அக்கரு கலைக்கப்படுகிறது. குழந்தை பெண்ணாகப் பிறந்துவிட்டால் அக்குழந்தை கொலைசெய்யப்படுகிறது. இந்நிலை முற்றிலும் மாறும் காலம் எக்காலம்?

பெண்களைப் பாதுகாக்கும் அமைப்புகளும் சட்டங்களும் எண்ணிலடங்காதவையாக இருந்தபோதிலும் ஒவ்வொரு நாளும் எத்தனையோ பெண்கள் ஏதேனும் முறையில் ஒடுக்கப்பட்டும் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுக்கொண்டும் தான் இருக்கின்றார்கள்.

தன் வாழ்நாளில் மூன்றில் ஒரு பெண் ஏதேனும் ஒருவகையில் தனக்கெதிரான வன்முறைகளை அனுபவித்துக்கொண்டுதான் இருக்கிறாள். ஆய்வுகளின்படி 70 சதவீதத்துக்கும் மேற்பட்ட பெண்கள் தங்கள் வாழ்நாளில் ஆண்களினால் உடல்ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் வன்முறைகளை அனுபவிக்கின்றனர்.

பெண்கள் மீதான வன்முறை இன்றைய சமூகத்தில் பற்பல வடிவங்களில் இடங்களில் வெளிப்படுகின்றன. வீட்டில், பள்ளிக்கூடங்களில், அலுவலகங்களில், பொது இடங்களில் இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். நாளுக்கு நாள் அவை வேறுபடுவதையும் துன்புறுத்துதல், கடத்தல், தரக்குறைவாக நடத்துதல், இவ்வாறாகப் பல வடிவங்களில் இன்று உலகெங்கினும் உள்ள பெண்கள் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

ஆய்வுகளின் வழி கண்டறியப்பட்ட கொடுமை; ஒவ்வொரு 90 நிமிடத்துக்கும் ஒரு பெண் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்படுகிறாள் என்று சோசலிஷ பெண்கள் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

உடலைக் காயப்படுத்துவதும் அடிப்பதும் உதைப்பதும் மட்டுமே பெண்களுக்கெதிரான வன்முறையென்றாகாது. தாகாத சொற்களை அவர்களிடம் பயன்படுத்துவதும், பெண் உணர்வுகளை மதிக்கத் தவறுவதும் கூட இதில் அடங்கும்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் என்று வரும்போது உலகில் நாகரிகமான சமுதாயம் என்று எதுவுமேயில்லை என்று ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலர் கொபி அனான் குறிப்பிட்டிருப்பதை இந்தச் சமயத்தில் நினைவுப்படுத்துதல் பொருத்தமே.

எல்லா சமூகத்திலும் பெண் உடல், உள மற்றும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு சிறிய அளவிலேனும் உள்ளாக்கப்படுகிறாள். இதனை வெளியுலகுக்குக் காட்டி அதற்கான முடிவுகளை எடுப்பதற்காகவே உலக மகளிர் தினம் முன்வைக்கப்பட்டது. ஆனால் அதன் பின்னரும் இந்த நிலைமை தொடர்வது வருத்தமான விடயமாக உள்ளது.

- சுகனியா

# ஆயிரம் காலத்துப் பயிரை பாதுகாப்போம்

- இலக்கியா



இனிய மணவாழ்க்கை அமையப்பெற்றவர்கள் இறைவனால் ஆசிர்வதிக்கப்பட்டவர்கள் என்பது உண்மை. சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படும் திருமணம், ஆயிரம் காலத்துப் பயிராக, தலைமுறைகளைக் கடந்து செழித்து வளர வேண்டும் எனில் தம்பதியர்களிடையே ஒற்றுமை அவசியம். விட்டுக் கொடுத்தலும், சகிப்புத்தன்மையும் இருந்தால் எத்தகைய இடர் வந்தாலும் மணவாழ்க்கையில் விரிசல் ஏற்பட வாய்ப்பில்லை. ஆனால் இன்றைய தலைமுறையினர், காதல் திருமணமோ, நிச்சயிக்கப்பட்ட திருமணமோ எதுவென்றாலும் அவசரமாக முடிவு செய்து எளிதில் பிரிந்து விடுகின்றனர்.

சிறு சிறு கருத்து மோதல்களுக்காக நீதிமன்றப் படியேறும் தம்பதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அதனைத் தவிர்க்க உளவியல் வல்லுநர்கள் கூறும் ஆலோசனைகள்:

**பொய்யைத் தவிர்ப்போம்**

ஆயிரம் பொய் சொல்லியாவது திருமணம் செய்ய வேண்டும் என்று நம் முன்னோர்கள் கூறியுள்ளனர். ஆனால், திருமணத்துக்கு முன்பு, பெற்றோர்கள் கூறும் பொய்களே, பல தம்பதியரின் பிரிவுக்கு அடிப்படையாக உள்ளது.

'ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம்' என்பார்கள். ஆனால் ஒரு குடும்பத்தில் கணவன், மனைவிக்கு இடையே பிரச்சினை ஏற்பட்டால் பலரின் ஆதிக்கம் அதிகரிக்கும். இதனால் பிரச்சினை மேலும் வலுவடைந்து பிரிவும் அதிகரிக்கிறது. பிரச்சினை ஆரம்பிக்கும்போதே அதைப் பற்றி இருவரும் மனம் விட்டுப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.

எதையும் அறிவு பூர்வமாக ஆராயாமல், மனப்பூர்வமாக ஆராய்ந்தால் நல்ல வழி கிடைக்கும்.

இல்லறவாழ்க்கை இனித்திட மூன்று தாரக மந்திரங்களைப்பின்பற்றினால் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழலாம்.

சூழ்நிலைக்கேற்ப நடந்து கொள்ளுதல், அனுசரித்துப் போதல், மற்றவர்களை மதித்து நடத்தல் என்பவையே அவை இவற்றைப் பின்பற்றினால் இல்லறம் நல்லறமாகும்.

இன்றைய இளம் தலைமுறையினரிடம் விட்டுக் கொடுத்தல், சகிப்புத்தன்மை போன்ற நற்குணங்கள் இல்லாத காரணத்தால்தான் விவாகரத்து வழக்குகளின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே போகிறது.

விவகாரத்தைத் தவிர்க்க தம்பதிகள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை குடும்ப நல நீதிமன்றங்களில் எழுதி வைத்துள்ளனர். இதனை அனைத்து தம்பதிகளும் பின்பற்றி வந்தாலே பெரும்பாலான குடும்பப் பிரச்சினைகள் வராது. அப்படியே தலைதூக்கினாலும் அவை பெரிய அளவில் உருவாகாது. எனவே ஆயிரம் காலத்துப் பயிரை வாடவிடாது பண்பெனும் நீரூற்றி செழிப்புடன் வளர வழி செய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவிடமிருந்து பறிக்கிறது இலங்கை

**தமக்குச் சொந்தமாக இல்லாத காணியில் அமைந்துள்ள எண்ணெய்க் குதங்களைக் குத்தகைக்கு விடும் உடன்பாட்டில் இலங்கைப் பெற்றோலியத்துறை அமைச்சு கையெ ழுத்திட முடியாது**

கொழும்பு,ஜூன் 11

திருகோணமலையில் லங்கா இந்தியன் எண்ணெய் நிறுவனத்துக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ள99எண்ணெய்க் குதங்களையும் இலங்கை அரசு மீளப்பெறவுள்ளதாக உயர்மட்ட வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

திருகோணமலையில் அமைந்துள்ள இந்த எண்ணெய்க் குதங்களை கடந்த 2002ஆம் ஆண்டு இலங்கைப் பெற்றோலிய அமைச்சு, 33 ஆண்டு குத்தகைக்கு லங்கா இந்தியன் எண்ணெய் நிறுவனத்துக்கு வழங்கியிருந்தது.

ஐ.தே.க ஆட்சிக்காலத்தில் செய்து கொள்ளப்பட்ட இந்த உடன்பாட்டை நிறுத்திவிட்டு, எண்ணெய்க் குதங்களை மீளப்பெறுவது குறித்து இலங்கை அரசு ஏற்கனவே சட்ட ஆலோசனைகளில் ஈடுபட்டுள்ளது.

இந்த எண்ணெய்க் குதங்கள் அமைந்துள்ள காணி திருகோணமலை அரசஅதிபர் செயலகத்துடன் இணைந்தது. தமக்குச் சொந்தமாக இல்லாத காணியில் அமைந்துள்ள எண்ணெய்க் குதங்களைக் குத்தகைக்கு விடும் உடன்பாட்டில் இலங்கைப் பெற்றோலியத்துறை அமைச்சு கையெழுத்திட முடியாது என்று இலங்கை அரசின் உயர்மட்ட அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இதனால் இந்த உடன்பாட்டை நிறுத்தி விட்டு எண்ணெய்க் குதங்களை மீளப் பெறுவது குறித்து ஆராயப் படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.அத்துடன் இந்த எண்ணெய்க் குதங்கள் பொருத்தமான முறையில் வழங்கப்படவில்லை என்றும் பெற்றோலியத்துறை அமைச்சு கருதுகிறது.

அதேவேளை, இந்த விவகாரம் தொடர்பாக தாம் எதையும் அறியவில்லை என்று லங்கா இந்தியன் எண்ணெய் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் கூறியுள்ளார்.

புதிய முன்னேற்றங்கள் குறித்து எமக்குத் தகவல் தரப்படவில்லை. நாம் ஏற்கனவே இந்த எண்ணெய்க் குதங்களை புதுப்பிக்கப் பெருமளவு பணத்தைச் செலவிட்டுள்ளோம். என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்காக, லங்கா இந்தியன் எண்ணெய் நிறுவனம் சுமார் 12 மில்லியன் டொலர் வரை செலவிட்டுள்ளதாக தெரியவருகிறது. (த)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் வயோதிபப் பெண் சாவு

யாழ்ப்பாணம், ஜூன்11

வல்வெட்டித்துறை மயிலியதனைப் பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 5.30 மணியளவில் வயோதிபப் பெண் மோட்டார் சைக்கிளிலிருந்து தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் யாழ்ப்பாணம் பிறவுண் வீதியைச் சேர்ந்த சண்முகசுந்தரம் அன்னபூரணம் (வயது-64) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது:

யாழ்ப்பாணத்திலிருந்து வல்வெட்டித்துறையிலுள்ள தனது உறவினர் வீட்டுக்கு குறித்த பெண் சென்றுள்ளார். வல்வெட்டித்துறையில் பஸ்ஸை விட்டு இறங்கி தனது உறவினர் ஒருவருடன் மயிலியதனை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தார். இந்த நிலையில் மோட்டார் சைக்கிளில் இருந்தவர் தவறி விழுந்துள்ளார்.

தலையில் படுகாயமடைந்த அவர், உடனடியாக வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் அங்கு அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். சடலம் பிரேத பரிசோதனையின் பொருட்டு வல்வெட்டித்துறை வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(10-15-8)

# மர்மப் பொருள் குறித்து அதிக அவதானம் தேவை

## பொலிஸார் கோரிக்கை

கொழும்பு,ஜூன் 11

வடக்கு-கிழக்கில் சந்தேகத்திற்கிடமான, மர்மப் பொருள்கள் குறித்துப் பெற்றோரும், பெரியோரும் அவதானமாக இருக்க வேண்டும் எனவும், அவர்கள் தமது குழந்தைகளை விழிப்புடன் கண்காணிக்க வேண்டும் எனவும் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மைக் காலங்களில் வடக்கு-கிழக்கில் ஆறு, குளம், களப்பு, கடற்கரை, காட்டுப் பகுதிகளில் மர்ம பொருள்கள் வெடித்ததனால் பலர் உயிரிழந்ததுடன் சிலர் காயமடைந்த சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

சந்தேகத்துக்கு இடமான பொருள்களைக் கையிலெடுத்துச் சோதனைக்குட்படுத்துகின்றமையே இவ்வாறான விபத்துக்களுக்கு காரணமாக அமைந்துள்ளன. ஏற்கனவே அவ்வாறான மர்மப் பொருள்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும்.

அத்தோடு அவ்வாறான பொருள்களை கண்டால் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் தலைமையகத்துக்கோ அல்லது படைத்தளங்களுக்கோ தெரியப்படுத்த வேண்டும் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் றோகன கேட்டுள்ளார்.

இவ்வாறான மர்மப் பொருள்கள் வெடித்ததில் அதிகமாகச் சிறுவர்களே பலியாகியுள்ளனர். ஆகையால் பெற்றோர்களும் ஆசிரியர்களும் இந்த விடயம் தொடர்பாக சிறுவர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். அதாவது சிறுவர்கள் அவ்வாறான மர்ம பொருள்களைக் கண்டால் உடனடியாகத் தமது பெற்றோருக்குத் தெரியப்படுத்துமாறு அவர்களை வலியுறுத்த வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (த)

# தமிழ் மக்களுக்கு அரசியல் கைதிகள் அவசரக் கடிதம்

கொழும்பு, ஜூன் 11

தமது விடுதலையை வலியுறுத்தி தமிழ் மக்கள் ஒன்று திரண்டு ஆதரவு வழங்க வேண்டும் என தமிழ் அரசியல் கைதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பொது அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், வர்த்தக சம்மேளனங்கள், மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் பொது அமைப்புகள் ஊடாக தமிழ் மக்கள் அரசியல் கட்சிகளுடன் ஒன்று திரண்டு தமது விடுதலைக்காக குரல் கொடுக்க வேண்டும் என கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பிலான கடிதம் ஒன்றை நீண்ட நாள்களாக சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் தமிழ் மக்களுக்கு எழுதியுள்ளனர். நீண்ட காலமாக எதுவித விசாரணையும் இன்றியும் காரணம் இன்றியும் தடுத்து வைத்திருக்கும் எமது விடுதலையை வலியுறுத்துமாறு அதில் கோரப்பட்டுள்ளது. (10)

# தென்மராட்சியிலும் 300 ஏக்கர் நிலம் பறிபோகிறது

## பிரதேச செயலர்களின் முடிவே இறுதியானது

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்ப்பாணம், நல்லூர், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுகளில் 61 ஏக்கர் நிலத்தைக் கபளீகரம் செய்வதற்குமுயன்றதுபோலவே தென்மராட்சிப் பிரதேசத்திலும் சுமார் 300 ஏக்கர் நிலத்தை அபகரிப்பதற்கு இராணுவம் முன்முயற்சிகளை எடுத்துள்ளது.

தென்மராட்சியில் தற்போது இராணுவம் நிலைகொண்டுள்ள 41 காணித் துண்டங்களைத் தமக்கு உரிமையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி தென்மராட்சிப் பிரதேச செயலரை இராணுவ அதிகாரிகள் கோரியிருக்கின்றனர்.

1996ஆம் ஆண்டு முதல் தாம் நிலை கொண்டுள்ள தனியார் காணிகளையும் தமக்கு உரிமைப்படுத்துமாறு இராணுவம் கோரியுள்ளது.

இவ்வாறு இராணுவம் தங்கியுள்ள வீடுகள், காணிகளின் உரிமையாளர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் தற்போது வாடகை வீடுகளில் தங்கியிருக்கிறார்கள்.

இதேவேளை யாழ்ப்பாணம், நல்லூர், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுகளில் அபகரிக்கப்பட உள்ள 61 ஏக்கர் நிலமும் 511ஆவது படையணியின் தேவைக்கு மட்டுமானது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள ஏனைய படையணிகளின் பயன்பாட்டில் உள்ள வேறு காணிகளும் இதேபோன்று அபகரிக்கப்பட உள்ளன.

இதேவேளை, இராணுவத்தினர் கோரும் காணிகளில் பெரும்பாலானவற்றை - அரச திணைக்களங்கள், அலுவலகங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றுக்கு சொந்தமான காணிகளை - வழங்குவதா இல்லையா என்று இறுதி முடிவு எடுக்கும் அதிகாரத்தையும் அந்தந்த பிரதேச செயலர்களே கொண்டிருக்கின்றனர் என்று கொழும்பிலுள்ள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

''பிரதேச செயலர்கள் உறுதியாக மறுக்கும் பட்சத்தில் படையினரால் அந்தக் காணிகளைப் பெறமுடியாது. சட்டத்தில் அதற்கு இடமில்லை. மீறி காணிகளை அபகரிப்பதாயின் அனைத்தையும் நாடாளுமன்றத்தின் அனுமதியுடன்தான் சுவீகரிக்க முடியும்'' என்று அந்த அதிகாரி தெரிவித்தார். (உ-5-9)

**பறிபோகும் 300 ஏக்கர் நிலங்களின் விவரம்**

| காணி | அரசு/ தனியார் | பிரதேச செயலகம் | அளவு |
|---|---|---|---|
| மிருசுவில் | அரசு | தென்மராட்சி | 4 ஏக்கர் |
| வரணி | அரசு | தென்மராட்சி | 2.5 ஏக்கர் |
| காப்பத்து | அரசு | தென்மராட்சி | 1.5 ஏக்கர் |
| சம்பாவெளி | அரசு | தென்மராட்சி | 62 ஏக்கர் |
| கோயிலாக்கண்டி | தேசிய வீடமைப்பு அதிகாரசபை | தென்மராட்சி | 6 ஏக்கர் |
| கேரதீவு | அரசு | தென்மராட்சி | 5 ஏக்கர் |
| நாவற்குழி | அரசு | தென்மராட்சி | 1 ஏக்கர் |
| புத்தூர் மேற்கு | அரசு | வலி.கிழக்கு | 3 ஏக்கர் |
| கல்வயல் | அரசு | தென்மராட்சி | 27 பேர்ச் |
| கோயில்குடியிருப்பு | அரசு | தென்மராட்சி | 1 ஏக்கர் |
| மிருசுவில் | தனியார் | தென்மராட்சி | 2.5 ஏக்கர் |
| கொடிகாமம் | தனியார் | தென்மராட்சி | 40 பேர்ச் |
| கொடிகாமம் | தனியார் | தென்மராட்சி | 30 பேர்ச் |
| கொடிகாமம் | மாவீரர் துயிலும் இல்லம் | தென்மராட்சி | 5 ஏக்கர் |
| வரணி | தனியார் | தென்மராட்சி | 6 ஏக்கர் |
| வரணி வடக்கு | தனியார் | தென்மராட்சி | 55 பேர்ச் |
| யாக்காடு | தனியார் | தென்மராட்சி | 1 ஏக்கர் |
| மந்துவில் கிழக்கு | தனியார் | தென்மராட்சி | 80 பேர்ச் |
| இயற்றாலை | தனியார் | தென்மராட்சி | 40 பேர்ச் |
| இயற்றாலை | புலிகளின் முன்னாள் பயிற்சி | தென்மராட்சி | - |
| மாசரி வடக்கு | முகாம் | தென்மராட்சி | 1 ஏக்கர் |
| கெற்பேலி | தனியார் | தென்மராட்சி | 2.5 ஏக்கர் |
| எழுதுமட்டுவாழ் | தனியார் | தென்மராட்சி | 34 ஏக்கர் |
| மிருசுவில் | தனியார் | தென்மராட்சி | 1 ஏக்கர் |
| உசன் | தனியார் | தென்மராட்சி | 1.5 ஏக்கர் |
| எழுதுமட்டுவாழ் | தனியார் | தென்மராட்சி | 1 ஏக்கர் |
| கச்சாய் | தனியார் | தென்மராட்சி | 1 ஏக்கர் |
| ஒட்டுவெளி | தனியார் | தென்மராட்சி | 6 ஏக்கர் |
| எழுதுமட்டுவாழ் | தனியார் | தென்மராட்சி | 10 ஏக்கர் |
| எழுதுமட்டுவாழ் | தனியார் | தென்மராட்சி | 8 ஏக்கர் |
| நுணாவில் | தனியார் | தென்மராட்சி | 4.332 ஹெக்டேயர் |
| நுணாவில் | தனியார் | தென்மராட்சி | - |
| நுணாவில் | தனியார் | தென்மராட்சி | - |
| தனங்களப்பு | தனியார் | தென்மராட்சி | 1ஏக்கர் |
| நுணாவில் மத்தி | தனியார் | தென்மராட்சி | 6 ஏக்கர் 1 ரூட் 272 பேர்ச் |
| கைதடி | தனியார் | தென்மராட்சி | 1.5 ஏக்கர் |
| இராமாவில் | தனியார் | தென்மராட்சி | 35 ஏக்கர் |
| கைதடி வடக்கு | தனியார் | தென்மராட்சி | 1 ஏக்கர் |
| இராமாவில் நலன்புரி நிலையம் | தனியார் | தென்மராட்சி | 31 ஏக்கர் |
| [illegible] | தனியார் | தென்மராட்சி | 34 ஏக்கர் |
| [illegible] | தனியார் | தென்மராட்சி | 3 ஏக்கர் |
| மீசாலை | தனியார் | தென்மராட்சி | 3 ஏக்கர் |

# தெஹிவளையில் மிருகங்களின் தலைகள் மாயம்

கொழும்பு, ஜூன் 11

தெஹிவளையிலுள்ள தேசிய மிருகக் காட்சிசாலையின் அதிகுளிரூட்டிகளில் வைக்கப்பட்டிருந்த சிங்கம், ஜாகுவார், மற்றும் சிறுத்தை ஆகிய மிருகங்களின் தலைகள் காணாமற் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தலைகள் காணாமற்போனதை தேசிய மிருகக் காட்சி சாலையின் பணிப்பாளர் பஷ்வர குணரட்ன உறுதிப்படுத்தி உள்ளார்.

ஊழியர் ஒருவரிடமிருந்து இது தொடர்பான தகவல் கிடைத்தது. நான் உடனடியாக செயற்பட்டு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளேன். இவ்விடயத்தை ஆராய்வதற்காக அமைச்சும் தனியான பிரிவொன்றை செயற்படுத்தி உள்ளது என அவர் கூறினார்.

உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக மிருகக் காட்சிசாலையில் ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# மலையக சிறார்களிடத்தே அதிகளவு போசாக்கின்மை

கொழும்பு, ஜூன் 10

போஷாக்கு குறைவான சிறுவர்களின் எண்ணிக்கையில் மலையக சிறார்களின் பங்கே அதிகளவில் காணப்படுவதாக குழந்தைகள் மருத்துவம் தொடர்பான நிபுணரும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் முன்னாள் தலைவருமான பேராசிரியர் ஹரேந்திர டி சில்வா கூறியுள்ளார்.

மலையக சிறார்களிடத்தில் காணப்படும் அளவுக்கதிகமான போஷாக்கின்மை பிரச்சினைக்கு அங்கு எடை குறைந்த குழந்தைகளின் பிறப்பு வீதம் அதிகளவில் இருப்பது முக்கிய காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

தேசிய மட்டத்தில் 20 வீதத்துக்கும் அதிகமாக இருக்கின்ற வளர்ச்சி குன்றிய சிறார்களின் எண்ணிக்கை மலையக தோட்டப்புறங்களில் 32 வீதமாக காணப்படுவதாகவும் தெரிவித்துள்ள பேராசிரியர் ஹரேந்திர டி சில்வா, இந்த நிலைமையே பல ஆண்டுகளாக நீடிப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.


தோட்டப் புறங்களில் நல்ல, சத்துள்ள உணவு கிடைப்பதற்கான வழிவகைகளை உத்தரவாதப்படுத்தக் கூடிய உணவுப் பாதுகாப்புக்கான சாத்தியக்கூறுகள் குறைவாகக் காணப்படுகின்றமையே சிறார்களிடத்தில் அதிகரித்த போஷாக்கின்மைக்கு காரணம் என்று ஹரேந்திர டி சில்வா கூறுகிறார்.

தோட்டத் தொழிலில் கிடைக்கும் மாதாந்த வருமானத்தில் நல்ல உணவுக்காக ஒதுக்கும் பணத்தின் அளவு குறைகின்றமையும் வருமானத்தில் பெரும்பகுதி குடிப் பழக்கத்துக்காக செலவிடப் படுகின்றமையும் முக்கிய பிரச்சினைகள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தோட்டப்புறங்களில் மக்களின் கல்வியறிவு மட்டத்தை அதிகரிப்பது, குடியிருப்புகளின் தரத்தை முன்னேற்றுவது, மருத்துவ வசதிகளை இலகுவில் அடையக்கூடிய வசதிவாய்ப்புகளை உறுதி செய்வது போன்ற விடயங்களில் அதிகாரிகள் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம் என்றும் பேராசிரியர் ஹரேந்திர டி சில்வா தெரிவித்தார். (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண பூப்பந்தாட்டப் போட்டி



## யாழ்.மகளிர் சம்பியன்

வவுனியா, ஜூன் 11

**வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திய மாகாண மட்டப் பூப்பந்தாட்டப் போட்டியின் பெண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.மாவட்ட மகளிர் அணியினர் வெற்றி பெற்று மாகாணச் சம்பியனானது.**

இந்தப் போட்டிகள் நேற்று முன்தினம் வவுனியா நகரசபை பூப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்றன. இதில் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய நான்கு மாவட்ட அணிகள் மோதிக் கொண்டன.

இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட மகளிர் அணியும் வவுனியா மாவட்ட மகளிர் அணியும் மோதிக்கொண்டன. மூன்று ஒற்றையர் ஆட்டம், இரண்டு இரட்டையர் ஆட்டங்களையும் கொண்ட இந்தச் சுற்றுப் போட்டியில் யாழ்.மாவட்ட அணி 3:0 என்ற அடிப்படையில் வவுனியாவை வென்று மாகாணச் சம்பியனானது.

முதலில் இடம்பெற்ற ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த நிசாந்தினியும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஜெனனியும் மோதிக் கொண்டனர். இதில் நிஷாந்தினி 21:11, 21:9 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஜெனனியை வென்று தமது அணிக்கான முதலாவது வெற்றியை பதிவு செய்தார்.

அடுத்து இடம்பெற்ற இன்னொரு ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்.மாவட்ட அணியைச் சேர்ந்த நிரசிவாவும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த தர்சினியும் மோதினர். இதில் நிரசிவா 21:10, 21:8 என்ற புள்ளி அடிப்படையில்வெற்றி பெற்று யாழ். மாவட்டத்திற்கான இரண்டாவது வெற்றியை பதிவுசெய்தார்.

மூன்றாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் யாழ்.மாவட்ட வீராங்கனையான நிஷாதாரணியும், வவுனியா மாவட்ட வீராங்கனையான அருள்பிரியாவை இலகுவாக 21:13, 21:12 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டார்.

மூன்று ஒற்றையர் ஆட்டங்களையும் யாழ்.மாவட்ட அணியினர் வெற்றிகொண்டதால் இரட்டையர் ஆட்டம் நடைபெறவில்லை. இதனால் 3:0 என்ற புள்ளி அடிப்படையில் யாழ். மாவட்ட அணி மாவட்ட சம்பியனாகியது.

## வவுனியா மாவட்ட ஆடவர் அணி சம்பியன்

**ஆடவருக்கான மாகாண மட்டப் பூப்பந்தாட்டத்தில் வவுனியா மாவட்ட ஆடவர் அணி வெற்றி பெற்று மாகாணச் சம்பியனானது.**

ஆண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட அணியை பலத்த போராட்டத்தின் மத்தியில் வீழ்த்தி வவுனியா மாவட்ட அணி தொடர்ந்து இரண்டாவது தடவையாக மாகாணச் சம்பியனாகி தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்டது.

நேற்றுமுன்தினம் வவுனியா நகரசபை பூப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கடந்த வருடம் மாகாணச் சம்பியனான வவுனியா மாவட்ட அணியும், யாழ்.மாவட்ட அணியும் மோதிக்கொண்டன. மூன்று தனிநபர் ஆட்டங்களையும் இரண்டு இரட்டையர் ஆட்டங்களையும் கொண்ட இந்தச் சுற்றுப் போட்டியில் பலத்த பரபரப்புக்கு மத்தியில் 3:2 என்ற அடிப்படையில் வவுனியா மாவட்ட அணி வெற்றிபெற்றது.

முதலில் நடைபெற்ற ஒற்றையர் ஆட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த துஷாந்தனும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கோபிஷனும் மோதிக்கொண்டனர். இந்தச் சுற்றில் கோபிஷான் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் 21:16, 15:21, 21:15 என்ற புள்ளிகளைப் பெற்று யாழ்.மாவட்ட அணி வீரன் துஷாந்தன் தனது அணிக்கான முதலாவது வெற்றியைப் பெற்றுக்கொடுத்தார்.

இதனையடுத்து இடம்பெற்ற இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்.மாவட்ட அணியைச் சேர்ந்த ரெமின்சனும் வவுனியா வீரர் சுபேசனும் மோதிக்கொண்டனர். இதில் முதலாவது செற்றை 21:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்ட ரெமின்சன் அடுத்த இரு சுற்றுகளிலும் தடுமாறத் தொடங்கினார். இந்த நிலையில் நன்கு சுதாகரித்துக் கொண்ட வவுனியா மாவட்ட அணி வீரன் சுபேசன் தனது அனல்பறக்கும் ஆட்டத்தினையும் மதிநுட்பத்தையும் பயன்படுத்தி கடும் சவாலுக்கு மத்தியில் 21:18 , 21:19 என்ற புள்ளி அடிப்படையில் யாழ். மாவட்ட அணி வீரரை தோற்கடித்து தனது முதலாவது வெற்றியைப் பதிவுசெய்தார்.

அடுத்து இடம்பெற்ற மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த இராஜ்குமாரும், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த விஜிந்தனும் மோதிக்கொண்டனர். வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த இராஜ்குமார் மிகவும் அபாரமாக விளையாடி 21:15, 19:21, 21:15 என்ற புள்ளி அடிப்படையில் வவுனியா மாவட்டத்துக்கான இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்தார்.

அடுத்து இடம்பெற்ற இரட்டையர் ஆட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தனுசாந்த் - றெமின்சன் இணையும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த செந்தில்குமரன்-சுபேசன் இணையும் மோதிக் கொண்டன.

இந்த ஆட்டத்தில் தமது உச்சத் திறனையும் கடும் தாக்குதல் யுக்திகளையும் கையாண்டு யாழ்.மாவட்ட அணியினர் விளையாடினர். அவர்களுடைய மட்டையில் இருந்து வெளியேறிய ஒவ்வொரு பூவும் இடியாக எதிரணியினரைத் தாக்கியது. இதனால் எதிர் அணியினர் நிலைகுலைந்தனர். இதனைப் பயன்படுத்திய யாழ்.மாவட்ட இணை மிக இலகுவாக 21:10, 21:15 என்ற புள்ளி அடிப்படையில் வென்றது. இதனால் 2:2 என்ற சமனிலையில் போட்டி இறுகியது.

இதன் காரணமாக ஐந்தாவது ஆட்டத்தில் வெற்றியீட்டும் அணியே சம்பியன் கிண்ணத்தை வெல்லும் சூழ்நிலை ஏற்பட்டது. இதில் வவுனியா மாவட்ட அணி வீரர்களான சுதர்சன்- இராஜ்குமார் இணை, முன்னைய போட்டிக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் யாழ்.மாவட்ட அணி வீரர்களான விஜிதன்- சஜீவன் இணையை ஆரம்பம் முதலே தடுமாற வைத்தது. இதனால் 21:13, 21:12 என்ற புள்ளிகள் அடிப்டையில் யாழ்.மாவட்ட இணையைத் தோற்கடித்து, வவுனியா மாவட்ட இணை வெற்றியீட்ட, மாகாண மட்ட சம்பியன் பட்டம் மீண்டும் வவுனியா வசமானது.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வடமாகண விளையாட்டுப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை, மன்னார் மாவட்ட விளையாட்டு அதிகாரி பார்சூத், வவுனியா மாவட்ட விளையாட்டு அதிகாரி ராஜரணசிங்க ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். (ங-400-433-23)

## வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கிரிக்கெட்




ஆண்கள் பிரிவில் சம்பியனான தலைமன்னார் பியர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அணி.




பெண்கள் பிரிவில் சம்பியனான சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி அணி.

வலிகாம வலயத் தடகளப் போட்டிகள்

## வெற்றிபெற்ற வீராங்கனைகள்

***5000 மீற்றர்***

*குமாரராஜா ஜனுஷா (பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி), பரமநாயகம் கினோபா (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி), தங்கராசா நித்தியா (மருதனார் மடம்இராமநாதன் கல்லூரி).*

***100 மீற்றர் தடை தாண்டல்***

*சிவலிங்கம் பிருந்தா (வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), யூலியஸ் கஜனா (உடுவில் மகளிர் கல்லூரி).*

***400 மீற்றர் தடை தாண்டல்***

*சத்தியசீலன் சயித்தா (வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்)*


***உயரம் பாய்தல்***

*சண்முகராசா தனுஜா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), சின்னத்தம்பி கிருத்திகா (உடுவில் மகளிர் கல்லூரி), திருச்செல்[illegible] (மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை).*

(தொடரும்)

ஆண்களுக்கான கரம் சுற்றுப் போட்டி

## இலகுவாக சென்.ஜோன்ஸ் இறுதிக்குள் நுழைந்தது



வலிவடக்கு, ஜூன் 11

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அவையும் ஆண்கள் கரம் அணியும் இணைந்து நடத்தும் ஆண்களுக்கான கரம் சுற்றுப் போட்டி அரையிறுதியாட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் விளையாட தகுதி பெற்றது.

மாணவி திருமதி முரளிதரன் பாணுரேகாவின் ஆதரவுடன் இடம்பெறும் அரையிறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும், யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் மோதிக் கொண்டன.

ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் மூன்று ஒற்றையர் சுற்றுக்களிலும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் விளையாடத்தகுதி பெற்றது.

முதல் ஒற்றையர் சுற்றில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எஸ் .சலிஸ்ரனும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஆர். டீன்ஒஸ்வேட்டும் போட்டியிட்டார்கள் .

இப்போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி வீரன் ஆர். டீன்ஒஸ்வேட் 2 புள்ளிகள் வித்தியாசத்தில் 25 :23 என்ற அடிப்படையில் சென் பற்றிக்ஸ் கல்லூரி வீரன் எஸ் .சலிஸ்ரனை வெற்றி கொண்டார்.

இரண்டாவது ஒற்றயர் சுற்றில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி வீரன் எஸ்.சஞ்சீவனும் சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.பிரவின்சனும் மோதிக் கொண்டார்கள். இச்சுற்றில் சென். ஜோன்ஸ் கல்லூரி வீரன் எஸ்.பிர வின்சன் மிகவும் இலகு வாக 21:7 புள்ளிகள் என்ற அடிப்படையில் சென். பற் றிக்ஸ் கல்லூரி வீரன் சஞ்சீ வனை வெற்றி கொண் டார்.

மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் வீரன் ஜே. அமலசுஜீபனும் சென். ஜோன்ஸ் கல்லூரி வீரன் வி.துஷிகரனும் போட்டியிட்டார்கள்.

இந்தப் போட்டியிலும் கூட சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரன் வி.துஷிகரன் இலகுவாக 23:8 புள்ளிகள் என்ற அடிப்படையில் சென்.பற்றிக்ஸ்கல்லூரிவீரன் ஜே.அமல சுஜீபனை வெற்றி கொண்டார். ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் மூன்று ஒற்றையர் சுற்றுக் களையும் சென். ஜோன்ஸ் கல்லூரி 3:0 என்ற சுற்றுக் கணக்கில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியை வெற்றி கொண்டதன் மூலம் இறுதிப் போட்டியில் விளையாட தகுதி பெற்றது.

(ங-86)



## இறுதி நிமிடத்தில் கோல்; வென்றது ஞானமுருகன்

பண்டத்தரிப்பு, ஜூன் 11

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் அமரர் ஈ.கே.குமரையா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுத்தொடரின் முதல் சுற்று போட்டிகள் நிறைவு பெற்று இரண்டாம் கட்டப்போட்டிகள் ஆரம்பித்துள்ளன. இரண்டாம் சுற்றின் ஒரு போட்டி கடந்த சனிக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியும் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியும் மோதிக்கொண்டன.

போட்டியின் ஆரம்பம் முதலே இரு அணிகளும் மிக இறுக்கமான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தன. எனினும் முதல் பாதி முடிவில் இரு அணிகளாலும் கோல்கள் எதனையும் அடிக்க முடியவில்லை. இரண்டாம் பாதியில் இரு அணிகளும் கோல்களை பெற கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டன. இந்த நிலையில் போட்டி நிறைவடைவதற்கு இரு நிமிடங்கள் இருந்த நிலையில் மயிலங்காடு ஞானமுருகன் அணி வீரர் சுபாஸ் தனது அணிக்கான கோலினை அடித்து வெற்றியை உறுதிப்படுத்தினார். ஆட்ட நிறைவில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி 1 : 0 என்ற கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.

[ங-130]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கங்களிடம் சிக்கி சின்னாபின்னமாகியது பாக்.


திஸ்ஸர பெரேரா

டில்ஷானின் அசத்தலான துடுப்பாட்டம் - பெரேராவின் வேகம் - இலங்கையின் கலக்கலான களத்தடுப்பு கை கொடுக்க பாகிஸ்தான் அணியை 76 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றியைப் பெற்று பதிலடி கொடுத்தது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு பாகிஸ்தான் அணி விளையாடி வருகின்றது. இதில் 5 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் தொடரின் முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றிருந்த நிலையில் இரண்டாவது ஒரு நாள் ஆட்டம் பல்லேகலவில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து. இலங்கை அணி எதுவித மாற்றங்களும் இன்றி களமிறங்கிய அதே வேளை பாகிஸ்தான் அணி மொஹமட் சமியை காயம் காரணமாக நீக்கி அறிமுக வீரரான ரஹாட் அலியை களமிறக்கியது.

நேற்றுமுன்தினம் ஆட்டத்தில் இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக டில்ஷான் - தரங்க ஜோடி களமிறங்கியது. கடந்த ஆட்டத்தைப் போல் அல்லாது ஆரம்பத்திலேயே அடித்தாட முனைப்புக் காட்டியது. சீரான வேகத்தில் அதிகரித்துச் சென்ற ஓட்ட எண்ணிக்கையை தன்வீர் தகர்த்தெறிந்தார். தரங்க 18 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார். சங்கா களமிறங்கிய வேகத்தில் பவுண்டரி விளாசி நம்பிக்கையளித்தார். டில்ஷான் - சங்கா ஜோடி இணைந்த வேகத்திலேயே பிரிப்பதற்கான சந்தர்ப்பத்தையும் வழங்கியது. ஆட்டத்தின் 10 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் இரண்டு 'ரன் அவுட்' சந்தர்பங்களை பாகிஸ்தான் அணி தவறவிட்டது. இதனைப் பயன்படுத்தி இருவரும் சிறப்பாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். பந்து வீச்சு 'பவர்பிளே' எடுக்கப்பட்ட பின்னர் ஹபீஸ் வீசிய பந்தில் அவரிடமே பிடி கொடுத்து சங்கா 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அப்போது இலங்கை அணி 84 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதன் பின்னர் நுழைந்த சந்திமால், டில்ஷானுடன் இணைந்து சிறப்பாக ஆட இலங்கை அணி 100 ஓட்டங்களை 126 பந்துகளில் தாண்டியது. இந்த ஜோடி மெதுவாகவே ஓட்டங்களைச் சேர்த்தது.

மூன்றாவது இலக்குக்காக 70 ஓட்டங்களைப் பகிர்ந்த நிலையில் சந்திமால் 32 ஓட்டங்களுடன் அப்ரிடியின் பந்து வீச்சில் வெளியேற்றப்பட்டார். தொடர்ந்து நுழைந்த அணித்தலைவர் மஹேல, டில்ஷானுடன் இணைந்து ஓட்டங்களை அதிரடியாகக் குவிக்க முற்பட்டார். துடுப்பாட்ட 'பவர்பிளே' எடுக்கப்பட்ட முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே டில்ஷானின் 'ரன்அவுட்' சந்தர்ப்பத்தை பாக். மீண்டும் தவறவிட்டது. இருந்தும் இலங்கை அணியால் 32 ஓட்டங்களை மட்டுமே பவர்பிளேயில் பெற முடிந்தது.

120 பந்துகளில் டில்ஷான் தனது 13 ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தார். இறுதிக் கட்டப் பந்துப் பரிமாற்றங்கள் நெருங்க இலங்கை அணி அதிரடியாக ஆடியது. பாகிஸ்தானின் வியூகங்கள் தகர்த்தெறியப்பட்டு ஓட்டங்கள் குவிக்கப்பட்டன. தொடர்ச்சியாக இலங்கை அணி கொடுத்த 5 ஆவது 'ரன்அவுட்' சந்தர்ப்பத்தையும் பாகிஸ்தான் அணி கோட்டை விட்டது. அதிரடியாக ஆடிய மஹேல 44 பந்துகளில் தனது 67 ஆவது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். தொடர்ந்து அஜ்மல் பந்தில் அதிரடியாக பவுண்டரி விளாசிய பின்னர் அடுத்த பந்திலேயே 54 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.


தொடர்ந்து நுழைந்த திஸ்ஸர பெரேரா இறுதிக் கட்ட தாக்குதலை கனகச்சிதமாக நிறைவேற்றினார். இவர்களின் அதிரடிகள் முழங்க இலங்கை அணி 50 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து 280 ஓட்டங்களைப் பெற்றது. இறுதிப் பத்து பந்து பரிமாற்றங்களில் 80 ஓட்டங்கள் பெறப்பட்டது. டில்ஷான் 119 ஓட்டங்களையும், பெரேரா 14 பந்துகளில் 24 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொண்டனர்.

பதிலுக்கு கடின இலக்கை விரட்டக் களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு மொஹமட் ஹபீஸ், அஷார் அலி ஜோடி சிறப்பா[illegible] ஆரம்பத்தை வழங்கியது. ஆரம்பத்திலிருந்தே அஷா[illegible] அலி சிறப்பாக [illegible] துடுப்பெடுத் தா[illegible]

பாகிஸ்தான் வலுவான அடித்தளத்தை அமைத்தது. மத்தியூஸ் பந்து வீச அழைக்கப்பட்ட பின்னர் பாக்.கின் ஓட்ட வேகத்தில் சரிவு ஏற்பட்டது. பத்துப் பந்துப் பரிமாற்றங்களில் அணி 48 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அடுத்த பந்துப் பரிமாற்றத்தை வீச திஸ்ஸர பெரேரா அழைக்கப்பட்டார். வந்த வேகத்தில் முதலாவது பந்திலேயே ஹபீஸை 14 ஓட்டங்களுடன் தனது அபார பிடியெடுப்பில் வெளியேற்றினார். தொடர்ந்து நுழைந்த யுனிஸ் கான் தடுமாறிக் கொண்டிருந்தார்.

ஆட்டத்தின் 16 ஆவது பந்துப் பரிமாற்றத்தை பெரேரா வீசினார். முதலாவது பந்தில் யுனிஸ் கொடுத்த பிடியெடுப்பை சங்கா தவறவிட்டார். இதனைப் பயன்படுத்தி தொடர்ந்து ஆட முடியாத யுனிஸ் 5 ஆவது பந்தில் மீண்டும் பிடி கொடுக்க சங்கா அதனைப் பயன்படுத்தி ஆட்டமிழக்கச் செய்தார்.


அதன் பின்னர் அலி, மிஷ்பாவுடன் இணைந்து துடுப்பெடுத்தாடினார். அலி 50 பந்துகளில் தனது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். இவர்களது இணைப்பு மெதுவாகவே நகர்ந்தது. நீண்டு நிலைத்து 49 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்த நிலையில் மிஷ்பா


டில்ஸான்

27 ஓட்டங்களுடன் பெரேராவின் பந்து வீச்சில் வெளியேறினார். தொடர்ந்து நுழைந்த உமர் அக்மல் நீண்ட நேரம் நீடிக்கவில்லை. பெரேராவின் பந்து வீச்சில் சர்ச்சைக்குரிய முறையில் சங்காவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அதன் பின்னர் களமிறங்கிய பூம்பூம் அப்ரிடி முதலாவது பந்திலேயே பவுண்டரி விளாசி அசத்தினார். தொடர்ந்து பாகிஸ்தான் அணி துடுப்பாட்ட 'பவர்பிளே'யை தெரிவு செய்தது. குலசேகராவின் பந்தில் அலி பவுண்டரி விளாசி தனது ஓட்ட எண்ணிக்கையை 96 ஆக உயர்த்தினார். குலசேகராவின் அடுத்த பந்தில் அலியின் 'லெக் ஸ்ரொம்' இலக்கு இரண்டு துண்டாக பிளந்து வீழ்ந்தது. சர்வதேச அரங்கில் முதலாவது சதம் அடிக்கும் வாய்ப்பை 4ஓட்டங்களால் தவறவிட்டார். மலிங்க வீசிய அடுத்த பந்துப் பரிமாற்றத்தில் அப்ரிடி, சங்காவின் அபாரமான பிடியெடுப்பினால் ஆட்டமிழந்தார். சங்கா இலக்கு காப்பாளராக எடுத்த 300 ஆவது பிடியாக இது அமைந்தது.

அதன் பின்னர் பின்வரிசை வீரர்கள் சாதிக்காத நிலையில் பாகிஸ்தானின் ஆட்டம் 46.2 பந்துப் பரிமாற்றங்களில் 204 ஓட்டங்களுடன் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. பெரேரா 40 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை கைப்பற்றினார். சர்வதேச அரங்கில் பாகிஸ்தான் அணிக்கு எதிராகப் பெறப்பட்ட மிகச் சிறந்த பந்து வீச்சு பெறுதியாக இது அமைந்தது. ஆட்டநாயகன் விருதையும் பெரேராவே தட்டிச் சென்றார். (5)

# ஷரபோவா சம்பியன்



பிரெஞ்சுப் பகிரங்க ரென்னிஸின் பெண்களுக்கான தனி நபர் சம்பியனாக ரஷ்யாவின் மரியா ஷரபோவா வெற்றிவாகை சூடியுள்ளார். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் இத்தாலியின் சாரா இரானியை வெற்றி கொண்டே அவர் இந்தச் சம்பியன் பட்டத்தை வென்றார்.

அரையிறுதிப் போட்டியில் உலகின் 6 ஆம் நிலை வீராங்கனையான ஆஸ்திரேலியாவியாவின் ஸ்ரொசூரை அதிர்ச்சிகரமாக வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்ற இரானியின் முதலாவது சம்பியன் பட்டத்தை வெல்லும் ஆசையை மரியா ஷரபோவா இல்லாமற் செய்தார்.

அரையிறுதிப் போட்டியில் 4 ஆம் நிலை வீராங்கனை குவிற்றோவாவை வெற்றிகொண்டு உலகின் முதல்நிலை வீராங்கனையாகத் தெரிவான மரியா ஷரபோவா, இறுதிப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் தனது முதலாவது பிரெஞ்சுப் பகிரங்க ரென்னிஸ் பட்டத்தை வெற்றி கொண்டார்.

ஒரு பக்கமான போட்டியாக அமைந்த நேற்றைய இறுதிப் போட்டியில் மரியா ஷரபோவா போட்டியின் ஆரம்பத்திலிருந்து ஆதிக்கம் செலுத்தி 6-3, 6-2 என்ற கணக்கில் பிரெஞ்சுப் பகிரங்க ரென்னிஸ் சம்பியனானார். இருவரும் சந்தித்துக் கொண்ட முதலாவது சந்தர்ப்பமாக அமைந்த இந்தப் போட்டியில் 188 மீற்றர் உயரமான மரியா ஷரபோவா, 164 மீற்றர் உயரமான இரானியை மிக இலாவகமாகத் தோற்கடித்தார். 90 நிமிடங்கள் இடம்பெற்ற இந்த இறுதிப் போட்டி எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யாத ஒரு இறுதிப் போட்டியாக அமைந்தது (5)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# தீருமா பி.பி.எல். பிரச்சினை?

## இரு அணிகளே சம்பளம் வழங்கின

சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள பங்களா தேஷ் பிரிமியர் லீக் தொடரில் வீரர்களுக் கான ஊதியத் தாமதம் குறித்து பங்களாதேஷ் கிரிக்கெட் சபை நேற்றுத் தனது கருத்துக்களை வெளியிட்டது. இதன்படி இரண்டு அணிகள் மாத்திரமே இதுவரை வீரர்களுக் கான நிலுவைகளைச் செலுத்தியுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


இதன்படி வீரர்களுக்கு கிட்டத்தட்ட 305,000 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் இன்னமும் செலுத்தப்பட வேண்டியுள்ளது. 6 அணிகள் இவ்வாண்டுக்கான பங்களா தேஷ் பிரிமியர் லீக் தொடரில் பங்குபற்றிய நிலையில், 4 அணிகளே இன்னமும் வீரர்களுக் கான நிலுவைகளை வழங்கிமுடிக்க வேண்டியுள்ளது.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பங்களாதேஷ் பிரிமியர் லீக் அணியான டாக்கா கிளேடியேற்றர்ஸ் அணியின் தலைவர் சலீம் சௌத்ரி, தங்கள் அணி சார்பாக அனைத்து வீரர்களுடைய நிலுவைகளும் செலுத்தி முடிக்கப்பட்டுள்ள தாகத் தெரிவித்தார். அனைவரின் நிலுவைகளும் மே மாதத்தில் தங்களால் வழங்கப் பட்டுவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

முதற்தடவையாக இந்த வருடம் நடத்தப் பட்ட பங்களாதேஷ் பிரிமியர் லீக் தொடர் கடந்த பெப்ரவரி மாதமே நடந்து முடிந்திருந்த போதிலும் வீரர்களுக்கான ஊதியங்கள் இன்னமும் வழங்கி முடிக்கப்படவில்லை.

ஊதியத்தை வழங்கி முடிப்பதற்கான கால எல்லைகளை பங்களாதேஷ் கிரிக் கெட் சபையும், பங்களாதேஷ் பிரிமியர் லீக் அணிகளும் அவ்வப்போது வழங்கி வந்த போதும் அவற்றைச் சரிவர நிறைவேற்றியிருக்கவில்லை.

இது தொடர்பாக தனது அதிருப்தியைத் தொடர்ந்தும் வெளியிட்டு வந்த சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களுக்கான அமைப்பு சட்ட நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக நேற்று முன்தினம் அறிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. [ங]




# இன்னும் 100 நாள்

இலங்கையில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. 20/20 உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு இன்னும் 100 தினங்களே உள்ளதையொட்டி பள்ளேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் விசேட நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன. கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் 350 பேர் இணைந்து போட்டி ஆரம்பமாவதற்கு இன்னும் நூறு நாள்களே இருப்பதை குறிக்கும் முகமாக "100" எனும் இலக்கத்தை வடிவமைத்தனர். ஐ.சி.சி. பிரதம நிறைவேற்று அதிகாரி ஹாருன் லோகார்ட், ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத் தலைவர் உபாலி தர்மதாஸ மற்றும் இலங்கை, பாகிஸ்தான் வீரர்களும் இந்த நிகழ்வில் பங்குபற்றினர்.

# சாதிப்பாரா சாய்னா?


சாய்னா.

தாய்லாந்தில் உள்ள பாங்கொக் நகரில் தாய்லாந்து பகிரங்க கிராண்ட் பிரிக்ஸ் கோல்ட் பூப்பந்துச் சுற்றுப் போட்டி நடைபெற்று வருகிறது.

நேற்றுமுன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் சாய்னா, தாய்லாந்தின் பார்ன்டிப் புரானாவை சந்தித்தார். இதில் அபாரமாக ஆடிய சாய்னா 24-22, 21-11 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று, முதன் முறையாக தாய்லாந்து பகிரங்க பூப்பந்துப் போட்டியின் இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இறுதியில் சாய்னா தாய்லாந்தின் ரட்சானோக் இன்தானனை எதிர் கொள்ள உள்ளார். இறுதிப் போட்டியில் சம்பியனாகி சாய்னா சாதிப்பரா என்பதே இரசிகர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# வேண்டாம் பங்களா

## சச்சின் முன்மாதிரி


சச்சின்.

"எம்.பியாக இருப்பதே கௌரவம் தான். டெல்லியில் தங்குவதற்கு அரச பங்களா வேண்டாம். இதனால் மக்களின் வரிப்பணம் தான் வீணாகும்" இவ்வாறு தெரிவித்துள்ளார் சச்சின்.

இந்திய கிரிக்கெட்டின் சாதனைத் துடுப்பாட்ட வீரரான சச்சின். சமீபத்தில் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றார். இவருக்கு டெல்லியில் காங்கிரஸ் பொதுச்செயலர் ராகுல் காந்தியின் வீட்டுக்கு எதிரே, பங்களா ஒன்றும் ஒதுக்கப்பட்டது. இதை சச்சின் ஏற்க மறுத்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது:

"நான் டெல்லிக்கு வந்து தங்குவது சில நாள்கள் தான். எப்போது டெல்லி வந்தாலும் ஹொட்டலில் தங்குவதற்குத் தான் முன்னுரிமை கொடுப்பேன். எம்.பி. ஆகி விட்டேன் என்பதற்காக, சில நாள்கள் தங்குவதற்கு, எனக்கு அரசு பங்களா வேண்டாம். இதில் எனக்கு விருப்பமும் இல்லை.

இதுபோன்ற செயல்கள், மக்கள் வரிப் பணத்தை வீணடிக்கும் என்றே நான் நினைக்கிறேன். யாருக்கு இத்தகைய வசதிகள் தேவைப்படுகிறதோ, அவர்களுக்கு அதை ஒதுக்கினால் நல்லது. என்னைப் பொறுத்தவரை எம்.பியாக இருப்பதே கௌரவம்தான். இதற்காகக் கொடுக்கப்படும் சலுகைகள், உரிமைகள் முக்கியமல்ல.

பங்களாவை ஏற்க மறுத்தது, எனது பொறுப்புகளைப் பாதிக்காது. நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு கூட்டத் தொடரின் போதும், சில நாள்கள் பங்கேற்க முடியும் என்று நம்புகிறேன்" இவ்வாறு சச்சின் கூறினார்.

**பணி நிலை வெற்றிடம்**

அலுவலகப்பணியாளர்/ சிற்றூழியர்
ஆர்வமுடையவர்கள்
நேரில் வரவும்

IT ISLAND DIGITAL SERVICES
347, Kasthuriyar Road,
Jaffna. (சி/562) (45.6.9)

**INFORMATION TECHNOLOGY PARK**
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Telecommunication & Information Technology

MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, SriLanka.
Office : 021 222 3641
Fax No : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

*Dip.in PC Application & Office Management
*Dip.in Desktop Publishing
*Internet & e-mail (Workshop)

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் | - 22-06-12 |
| வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் | - 23-06-12 |

-Executive Officer- (சி/551)

BIT 100 % Pass Rate Semester1
எமது சில மாணவர்கள்

| | |
|---|---|
| Amithayan | - A- B+ B- C |
| Kayathiri | - B+ 2C+ C |
| Sujanthini | - B 2C+ C |
| Kokulan | - 2B- D+ D |
| Nimalraj | - 2C D D- |
| Thuseeba | - C+ 2C D |
| Thulashi | - C+ 2C D |
| Saaruja | - D+ 3D |
| Pratheep | - 2C+ 2C |
| Jegatheeban | - C 3D+ |

வாழ்த்துகின்றோம்
MIS BIT Academy
74, சபாபதி வீதி, கொக்குவில் - யாழ்ப்பாணம்
200 m from Poonaary Matathady
கடந்த 10 வருடங்களாக...
TPNo: 0718474239 Mr. R.Kumaran - B.Sc.
BIT நீங்களும் கொழும்புப் பல்கலைக்கழக கணினிப் பட்டதாரியாகுங்கள்
புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் எம்மால் கோரப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.